இதழ் 224

# மண்

ஜேர்மனி / 2024

பங்குனி - சித்திரை / Mar - Apr

## அனைத்துலக பெண்கள் தினம் பங்குனி - 8



மேரி ஜெயா
ஜேர்மனி



கலைவாணி
ஜேர்மனி



கெங்கா
ஜேர்மனி



இராஜேஸ்வரி
ஜேர்மனி



சாந்தினி
ஜேர்மனி



கீதாராணி
ஜேர்மனி



மீனா
ஜேர்மனி



வசந்தா
ஜேர்மனி



சர்வேஸ்வரி
ஜேர்மனி



வசந்தராணி
ஜேர்மனி



நகுலா
ஜேர்மனி



சோபியா
ஜேர்மனி




பத்மாசினி
ஜேர்மனி



மங்கையரசி
ஜேர்மனி



சந்திரா
டென்மார்க்



திரேஸ்
இங்கிலாந்து

அனைத்துலக பெண்கள் தினத்தில் மண் சஞ்சிகையில் எழுதிவரும் வெள்ளிவிழாக்கண்ட எழுத்தாளப் பெண்மணிகள் பாராட்டும் கௌரவமும் பெறுவதை வாழ்த்தி மகிழ்கின்றோம்!...

மண் சஞ்சிகையின் வாசகர்களின் நிதிப் பங்களிப்பில் இலங்கை- மல்லாவி துணுக்காயிலுள்ள









மண் சஞ்சிகையின் வாசகர்களின் நிதிப் பங்களிப்பில் இலங்கை மலையகம் - போகவந்தலாவை தோட்டமக்களுக்கு தைப்பொங்கல் நிதிவழங்கி 15.01.2024 அன்று







மண் சஞ்சிகையின் வாசகர்களின் நிதிப் பங்களிப்பில் இலங்கை - வவுனியாவிலுள்ள "அமுதசுரபி" அறக்கட்டளை நிறுவனம் ஊடாக பாதிக்கப்பட்ட ஏழை மக்களுக்குத் தைப்பொங்கல் நிதிவழங்கி 15.01.2024 அன்று பொங்கல் தினம் கொண்டாடப்பட்டது.








# உள்ளே

- எங்கள் கருத்து
- சிறுவர்வட்டம்
- வினாவிடைப்போட்டி
- சிறுவர் போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- இலக்கியச் சாரல்
- சிறுகதை, கட்டுரை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்புகள்
- செய்திக்கண்ணோட்டம்
- ஆதரவற்றோர் உதவிநிதி

முகவரி: V. Sivarajah
Am Windhoevel 18a
47249 Duisburg
Germany

தொலைபேசி: 0203/8073898

015254799233

மின்னஞ்சல்: v.sivarajah@arcor.de

வங்கிவிபரம்: Mann (Erde) Verein e.V. Duisburg
Stadtsparkasse Duisburg
Kontonummer: 225 000 421
Bankleitzahl: 350 500 00
IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21
SWIFT-BIC: DUISDE33XXX

# ஆசிரியர் பக்கம்...

ஒவ்வொரு ஆண்டும் சர்வதேச மகளிர் தினம், மார்ச் 8 அன்று கொண்டாடப்படுகிறது. 1900 ஆண்டுகளில் இருந்தே சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது. இதற்கென தனி வரலாறும் உண்டு. 1908ஆம் ஆண்டில் பெண்கள் மீதான அடக்குமுறை, பாலின சமத்துவமின்மை குறித்து நிறைய விவாதங்கள் நடந்தன. 15 ஆயிரம் பெண்கள் நியூயார்க்கில் குறுகிய வேலை நேரம், வாக்களிக்கும் உரிமை மற்றும் சிறந்த ஊதியம் ஆகியவற்றைக் கோரி மாபெரும் பேரணி நடத்தினர்.

அவர்களின் போராட்டத்தை கவுரவிக்கும் விதமாக 1909 ஆம் ஆண்டு, முதல் மகளிர் தினம் அமெரிக்கா முழுவதும் கொண்டாடப்பட்டது. 1910 இல், உழைக்கும் பெண்களுக்கான சர்வதேச மாநாடு டென்மார்க்-கோபன்ஹேகனில் நடைபெற்றது. ஜெர்மனியின் சமூக ஜனநாயகக் கட்சியின் மகளிர் அலுவலகத்தின் தலைவரான கிளாரா ஜெட்கின் இதை முன்மொழிந்தார்.

இதைத் தொடர்ந்து மார்ச் 19ஆம் தேதி 1911ஆம் ஆண்டில், ஆஸ்திரியா, டென்மார்க், ஜெர்மனி மற்றும் சுவிட்சர்லாந்து முதல் முறையாக சர்வதேச மகளிர் தினத்தை கொண்டாடியது. 1913 மற்றும் 1914க்கு இடையில், ரஷ்யாவில் பெண்கள் முதல் மகளிர் தினத்தை பிப்ரவரி 23 அன்று கொண்டாடினர். அதன் பிறகுதான் மார்ச் 8ஆம் தேதி சர்வதேச மகளிர் தினம் கொண்டாட்டம் தொடங்கியது. 1975ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை முதல் முறையாக சர்வதேச மகளிர் தினத்தை ஏற்பாடு செய்தது.

சர்வதேச மகளிர் தினம் என்பது எந்த நாடு, குழு அல்லது அமைப்புக்கும் பிரத்தியேகமானதல்ல. அந்த நாள் ஒவ்வொரு பெண்ணுக்கும் சொந்தமானது. பெண்களின் சாதனைகள் அங்கீகரிக்கப்பட வேண்டும், கொண்டாடப்பட வேண்டும், மதிக்கப்பட வேண்டும். பெண்கள் எதிலும் தாழ்ந்தவர்கள் அல்ல என்பதை வலியுறுத்தவே ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8ஆம் தேதி சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது. அவர்களின் உரிமைகள் கிடைக்கும் வரை இந்த நாள் கொண்டாடப்படுவது அவசியமே. பெண்களை பலவீனமானவர்கள் என பலரும் கருதுகிறார்கள். ஆனால் பெண்களைப் போல வலிமையானவர்கள் யாரும் இல்லை.அவர்களால் சாதிக்க முடியாதது எதுவுமில்லை. அவர்களால் உங்களை ஊக்குவிக்க முடியும். வாழ்க்கையில் தங்களையும் வானளவுக்கு உயர்த்த முடியும்.

இல்லத்தரசிகள், ஆசிரியைகள், பொருளாதார நிபுணர்கள், பொறியாளர்கள், கணனி வல்லுனர்கள் என எல்லாத் துறைகளிலும் முன்னேறி இந்த உலகத்திற்கு மேன்மையை அளிப்பவர்கள். ஆணாதிக்கத்தின் தடைகளை தகர்த்து, சமூகத் தடைகளைத் தாண்டி, சக்தி வாய்ந்த சக்தியாக உருவெடுத்திருக்கிறார்கள் இன்றைய பெண்கள்.

இப்படி இருக்கையில் இன்று உலகம் முழுவதும் பெண்களுக்கெதிரான அடக்குமுறைகள், கட்டாய பாலியல் தொழில், பாலியல் துஸ்பிரயோகங்கள், சிறுவர் திருமணங்கள், சிறுவர் துஸ்பிரயோகங்கள், சிறுவர் வேலைக்கு அமர்த்துதல், கூட்டுப் பாலியல் சம்பவங்கள், கொத்தடிமைத்தனங்கள், எனப் பல்வேறு அடக்குமுறைகள் நிகழ்ந்தவண்ணமே இருப்பதாக அன்றாடச் செய்திகள் கூறுகின்றன. அதுவும் குடும்பத்தவர்களாலும் உறவினர்களாலும் மிக அதிகமான சம்பவங்கள் நிகழ்வதாகவும் தெரிய வருகின்றது.

அடுத்து படித்தவர்கள், நாகரீகமானவர்கள் என்று கூறப்படுபவர்கள் மத்தியிலும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகமாக இடம்பெறுகின்றன. இன்னும் காரியாலயங்கள் , தொழில் புரியும் இடங்கள், போக்குவரத்து வண்டிகள், தெருக்கள், கட்டிடங்கள் என அனைத்து இடங்களிலும் துஸ்பிரயோகச் சம்பவங்களும் பாலியல் சீண்டல்களும் மனதால் துன்புறுத்தும் சம்பவங்களும் பாலியல் இலஞ்சத் துன்புறுத்தல்களும் நடைபெறுகின்றன. அதுவும் வறுமையான நாடுகளில் தாராளமாக இடம் பெறுகின்றன. இன்றை கணனி யுகத்தில் உலகெங்கும் போதைப் பொருள் பாவனை அதிகரித்து வருவதால் பெண்கள் மீதான வன்முறைகள் பல மடங்கு அதிகரித்திருப்பதாகப் புள்ளி விபரங்கள் எடுத்துக் கூறுகின்றன.

இந்தியாவில் அண்மையில் எடுத்த கணக்கெடுப்பில் ஆண்களை விட அதிக நேரம் பெண்களே உழைக்கிறார்கள் என தெரியவந்துள்ளது. சராசரியாக ஆண்கள் 7 மணி நேரம் உழைத்தாலும், பெண்கள் 9 முதல் 11, மணி நேரம் உழைக்கிறார்களாம். அதுமட்டுமா இந்தியாவில் பாலின பேதம் இன்றும் ஊதியரீதியாக தொடர்கிறது. ஆண்களை காட்டிலும் 34% குறைந்த ஊதியத்தை பெண்கள் பெறுகிறார்கள் என சர்வதேச தொழிலாளர் அமைப்பு எடுத்த கணக்கெடுப்பு கூறுகிறது. ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே உரிமைகள் சம அளவில் இன்னும் வந்துவிடவில்லை. ஷ

சர்வதேச மகளிர் தினம் என்பது எந்த நாடு, குழு அல்லது அமைப்புக்கும் பிரத்தியேகமானதல்ல. அந்த நாள் ஒவ்வொரு பெண்ணுக்கும் சொந்தமானது. பெண்களின் சாதனைகள் அங்கீகரிக்கப்பட வேண்டும், கொண்டாடப்பட வேண்டும், மதிக்கப்பட வேண்டும். பெண்கள் எதிலும் தாழ்ந்தவர்கள் அல்ல என்பதை வலியுறுத்தவே ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8ஆம் தேதி சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது. அவர்களின் உரிமைகள் கிடைக்கும் வரை இந்த நாள் கொண்டாடப்படுவது அவசியமே.

**( பங்குனி - 8 சர்வதேச பெண்கள் தினமாகும். இந்தமாத இதழில் விஷேடமாக பெண்கள் பற்றிய பல ஆக்கங்கள் இடம்பெற்றிருக்கின்றன என்பது சிறப்பாகும். அனைத்துப் பெண்களுக்கும் எமது பெண்கள் தின வாழ்த்துகள்)**

**- ஆசிரியர் - 05.03.2024**

## சிறுவர் வட்டம்...




### ஆத்திசூடி....

## காப்பது விரதம்:..

ஆகஸ்ட் 15 இந்திய சுதந்திர தினம். வெள்ளையர் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்ற தினம். நம் நாடு நமதான நாள். இந்த நாளில் நாம், ஓர் உறுதி, சபதம் எடுத்துக்கொள்ள வேண்டும். ” நான் பிறந்த மண்ணிற்குப் பெருமை தரும் செயல்களையே செய்வேன். அண்டை அயலாரை நேசிப்பேன ”. இப்படி ஒரு தீர்மானத்தைச் செய்துகொண்டால் மட்டும் போதாது அதைக் காப்பாற்ற வேண்டும். இப்படி நாம் மேற்கொண்ட ஒரு காரியத்தை மறக்காமல் செய்வதையே விரதம் என்பார்கள். விரதம் என்றால் நோன்பு என்றும் பொருள். ஆகவே ஒரு காரியத்தைச் செய்வதாக முடிவுசெய்து கொண்டாயானால்- விரதம் மேற்கொண்டேயானால் அதைக் காப்பாற்ற வேண்டும். கைவிடக்கூடாது. இதைத்தான் ஔவைப்பாட்டி நறுக்குத் தெறித்தால் போலச் சொல்கிறார்...

## கிழமைபட வாழ்:-

உன்னை எல்லோரும் விரும்ப வேண்டுமா?..பாராட்டப்பட வேண்டுமா?.. அப்படியானால் நீ உன்னால் முடிந்தவரை பிறருக்கு உதவவேண்டும் தேவைப்பட்டவர்களுக்கு உன் சக்திக்கு ஏற்றபடி கொடு. உறவினர் என்றில்லாமல் நண்பர் ஊரார் எல்லாருக்கும் நீ உபகாரியாக இருந்தாயானால் உன்னை எல்லோரும் பாராட்டுவார்கள். உன் நல்ல குணத்துக்காகப் போற்றுவார்கள். உன்னுடன் அன்போடு, பரிவோடு, பாசத்தோடு பழகுவார்கள். இப்படி எல்லோருக்கும் உரிமையுடையவனாக வாழ்வதுதான் வாழ்க்கை. உடலாலும் உள்ளத்தாலும் உடமையாலும் பிறருக்கு நன்மை செய்து வாழவேண்டும். இதையே கிழமைப்பட வாழ் என்கிறார் ஔவைப்பாட்டி. கிழமை என்பது நாட்களை வாரத்தைக் மட்டும் குறிப்பதல்ல. உரிமை என்றும் அதற்குப் பொருள் உண்டு...

# நல்நெறிபற்றி........

(வி நந்தகுமார்)

## ஆவேசத்தைவிட ஆலோசனை அவசியம்...

ஆத்திரம் அழிவுக்கான பயணப்பாதை.
ஆத்திரம் அவனையே அடித்து அழிக்கிறது.
ஆத்திரம் அடைய அதிக நேரம் தேவையில்லை.
ஆத்திரம் அமைதியை அடைய அதிகநேரம் தேவை.
ஆணவம் நிமிர்ந்து நின்று அடி வாங்குகிறது.
ஆணவம் அகன்றால் ஆனந்தம் அமையும்.
ஆணவம், ஆடம்பரம், அர்த்தமற்ற வாழ்க்கைமுறை.
ஆணவத்தால் அழிந்துபோன அரசுகள் அதிகம்.
ஆலோசனை இல்லாத அரங்கம் ஆக்கம் பெறாது.
ஆலோசனையை அமைப்பவன் ஆனந்தம் பெறுவான்.
ஆலோசனைக்கு அறிவு அவசியம், நோய்க்கு மருந்துபோல்.
ஆலோசனையை கேட்கிறவர்களிடத்தில் ஞானம் தங்கும்.
ஆலோசனைகள் அதிகமாகும்போது, அதிக சுகங்களை அமைக்கிறோம்.
ஆலோசனைகள் அறிவை வடிகட்டித் தருகிறது, அழிவுகளை அகற்றுகிறது.
ஆக்கம் பெறுவதற்காகவே அறிவு அமைக்கப்பட்டுள்ளது.
ஆராய்ந்து கூறும் அறிவுரைகள் அனைத்தையும் அள்ளி வழங்கும்.
ஆசை அனைத்து உயிர்களையும் எக்காலமும் பிறப்பிக்கும்.
ஆசையில்லாமல் வாழ்வில்லை, அது அக்கறையான வாழ்வு.
ஆசைப்படுவதைவிட பேராசைப்படுவது பெரும் ஆபத்து.
ஆசைகளை குறைக்கும்போது, அதிகமான இன்பம் பெருகுகிறது.
ஆசைப்படவும் வேண்டும், அதை தவறாக பயன்படுத்தவும் கூடாது.
ஆசை தவறாகப் பயன்படுத்தும்போது தவிப்படைகிறோம்.
ஆசைப்படுவது உரிமை, அளவுக்கதிகமான ஆசை உரிமையின் உதாசீனம்.
ஆசையும், கோபமும் அதிகரிக்கும்போது அழிவுகள் அதிகமாகிறது.
ஆசையின் முடிவில் திருப்தி, பூரிப்பு, சோம்பல், சோர்வு யாவும் அடங்கும்.
ஆதங்கங்கள் கனமானவை, அதை இழக்கும்போது இளைப்பாறுகிறோம்.
ஆணும் பெண்ணும் ஒத்திசைவாகும்போது, முரண்பாடுகள் நீங்கும்.
ஆனந்தம் அதிகரிக்கும்போது, ஆயுளும் கூடவே விருத்தியாகிறது.
ஆண்டவன் வரப்பிரசாதத்தில் ஆனந்தமான வாழ்வு அமைகிறது.
ஆனந்தத்திற்கான நன்றியை ஆண்டவனுக்கு அனுஷ்டித்தல் அவசியம்.

# முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்!...

## சிலந்தியும் அரசனும்...






போரில் தோல்வியடைந்த அரசன் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓடி ஒளித்தான். அரசன் மிகவும் வீரத்துடன் போரில் ஈடுபட்டாலும் அவனின் படை மிகவும் சிறியதாக இருந்ததினால் அவனால் வெல்ல முடியவில்லை. எதிரியிடம் பெரும் படை இருந்ததினால் வெற்றி பெற்றான். தோர்வியடைந்த அரசனை கொலை செய்யுமாறு அவனை வென்ற அரசன் கட்டளையிட்டான்.. அதனால் அவன் காட்டிற்குள் ஓடிச்சென்று அங்கு இருந்த ஒரு குகையில் ஒளிந்து கொண்டான்.

தோல்வியடைந்த அரசன் மிகவும் மனவருத்தம் கொண்டான். மனச்சோர்வினால் துணிவு இழந்தான். ஒரு நாள் சோம்பலுடன் அரசன் கவலையில் படுத்திருந்தான். அந்தக் குகையினுள் ஒரு சிலந்தி வாழ்ந்து வந்தது. அந்தச் சிறிய சிலந்தியின் செயல் அவன் கவனத்தைக் கவர்ந்தது. குகையின் ஒரு பகுதியினுள் ஒரு வலையைப் பின்னக் கடுமையாக முயற்சி செய்துகொண்டிருந்தது. சுவரின் மீது ஊர்ந்து செல்லும்போது வலையினில் பின்னிய நூல் அறுந்து சிலந்தி கீழே விழுந்துவிட்டது.

இவ்வாறு பலமுறை நடந்தது. ஆனாலும் அது தன் முயற்சியைக் கைவிடாமல் மறுபடியும் மறுபடியும் முயன்றது.. கடைசியில் வெற்றிகரமாக வலையைப் பின்னி முடித்தது. அரசன் " இச் சிறு சிலந்தியே பல முறை தோல்வியடைந்தும் தன் முயற்சியைக் கைவிடவில்லை. நான் ஏன்?.. விடவேண்டும்".

நானோ அரசன். நாம் மறுபடியும் முயற்சி செய்ய வேண்டும் என்று எண்ணினான். மறுபடியும் தன் எதிரியுடன் போர் புரியத் தீர்மானித்தான். அரசன் தான் வசித்த காட்டிற்கு வெளியே சென்று தன் நம்பிக்கையான ஆட்களைச் சந்தித்தான்.

தன் நாட்டிலுள்ள வீரர்களை ஒன்று சேர்த்துப் பலம் மிகுந்த ஒரு படையை உருவாக்கினான். தன் எதிரிகளுடன் தீவிரமாகப் போர் புரிந்தான். கடைசியில் போரில் வெற்றியும் பெற்றான். அதனால் இழந்த தன் அரசை திரும்பவும் பெற்றான். தனக்கு அறிவுரை போதித்த அந்தச் சிலந்தியை அவன் என்றுமே மறக்கவில்லை.




# முல்லாவின் கதைகள்

## கீழே விழுந்த சட்டை....

ஒரு நாள் முல்லா தமது மாடியில் ஏதோ வேலையாக இருந்தார். கீழே சமையலறையில் அவர் மனைவி சமையல் செய்து கொண்டிருந்தார்.

மாடியிலிருந்த முல்லா திடீரெனக் கால் தவறிக் கீழே விழுந்து விட்டார். தடால் என்ற சப்தத்துடன் ஏதோ ஒன்று கீழே விழுந்த சப்தத்தைக் கேட்ட மனைவி திடுக்கிட்டு அது என்ன சப்தம் என்று கேட்டாள்.

கீழே விழுந்த முல்லா தன் உடம்பில் ஒட்டியிருந்த மண்ணைத் தட்டி விட்டவாறு ஒன்றுமில்லை மாடியிலிருந்து என் சட்டை கீழே விழுந்து விட்டது என்றார்.

ஒரு சட்டை விழுந்து விட்டதனாலேயா அவ்வளவு பெரிய சத்தம் கேட்டது? என்று மனைவி ஆச்சரியத்துடன் கேட்டாள்.

சட்டைக்குள் நான் இருந்தேன் என்று கூறி முல்லா சமாளித்தார். அவர் மனைவிக்கு அழுவதா சிரிப்பதா என்றே தோன்றவில்லை.

..........................................................................................................................

## விஞ்ஞானம் பெயர்கள்...

- பனைமரத்தின் விஞ்ஞான பெயர் - Borassus flabellifer.
- மருத மரத்தின் விஞ்ஞான பெயர் - Terminalia elliptica.
- வெண்டாமரை பூவின் விஞ்ஞான பெயர் - Nelumbo nucifera.

## விடுகதைகளும் விடைகளும்..

01- ஒரு தட்டில்12 இட்லி 3 கரண்டி அது என்ன?..
02- பார்ப்பதற்கு ஐந்துகால் எண்ணினால் நான்கு கால் அது என்ன?..
03- அண்ணன் தம்பி பன்னிருவரில் ஒருவன் மட்டும் குறைப் பிரவசம் அது என்ன?..
04- வெள்ளையாக இருப்பான் பால் அல்ல விசேட நாட்களில் பளிச்சிட வைப்பேன் நான் யார்?..
05- பாளை போல பூ பூக்கும் பார்ப்போருக்கு விருப்பூட்டும் தலையிலே சூடமுடியாத அது என்ன பூ?..
06- உங்களுக்குச் சொந்தமான ஒன்று. ஆனால் உங்களைவிட மற்றவர்களே அதிகம் பயன்படுத்துவார்கள்.
07- யாரும் செய்யாத கதவு தானே திறக்கும் தானே மூடும் அது என்ன.
08- வாயிலே தோன்றி வாயிலே மறையும் அது என்ன.
09- வீட்டில் வளரும் ஆனால் திருடனைப் பிடிக்காது அது என்ன.
10- இலையுண்டு கிளை இல்லை. பூ உண்டு மணம் இல்லை. காய் உண்டு விதை இல்லை. அது என்ன.
11- முறையின்றித் தொட்டால் ஒட்டிக்கொண்டு உயிரை எடுப்பான் அவன் யார்.
12- வீட்டுக்கு வந்த தொந்தியப்பன் தினமும் கரைகிறான் அவன் யார்.
13- காதைத் திருகினால் பாட்டுப் பாடுவான் அவன் யார்.

**(1)கடிகாரம் (2) யானை (3) மாசி மாதம் (பெப்ரவரி) (4) சுண்ணாம்பு (5) வாழைப்பூ 6-பெயர் 7- இமை 8- சிரிப்பு 9- நாய் 10-வாழை 11- மின்சாரம் 12- நாட்காட்டி 13- றேடியோ**

.......................................................................................................

**பொன்மொழி...**

வணங்கும் கைகளை விட
ஏழைகளுக்கு வழங்கும் கையையே
இறைவன் விரும்புகிறான்...
- கவிக்கோ அப்துல் ரகுமான் -

# நகுலின் குட்டிக் கதைகள் - 4

## அவதானம் அவசியம்... (செல்வன் நகுல் துரையரங்கன்)

குமார், ரகு ஒரே வகுப்பில் படிக்கும் மாணவர்கள். ரகு நல்ல குழப்படி. ஒரு பாடத்தையும் அவதானிக்காமல் பக்கத்து மாணவர்களுடன் கதைத்துக் கொண்டிருப்பான். மற்ற மாணவர்களை சிரிக்க வைப்பான். ஆசிரியர் கூறுவதை கவனிக்காமல் தொடர்ந்து கதைப்பார்கள். ஒரு நாள் பரீட்சை வந்தது. ரகுவிற்கு ஒன்றும் எழுத முடியவில்லை. இதனால் பரீட்சை புள்ளிகள் நன்றாக குறைந்தன.

ஆசிரியர் ரகு நீ முன் வந்து குமாருடன் இருந்து அவதானமாக படி என்றார். ரகு ஆசிரியர் கூறியதைக்கேட்டு முன் அமர்ந்து ஆசிரியர் சொல்வதைக் அவதானமாக கேட்டு படிக்க ஆரம்பித்தான். ஆசிரியர் கொடுத்த பயிற்சிகளை குமாரின் நட்புடன் செய்தான். பரீட்சையிலும் நல்ல புள்ளிகள் பெற்றான். ஆசிரியர் பார்த்தாயா உன் மாற்றத்தை என்று சொல்லி பாராட்டினார். ரகு குமாருடன் நல்ல நண்பர்களாக இருந்தார்கள். ஆகவே நாம் எதையும் நன்கு அவதானிக்க வேண்டும். அப்பொழுதுதான் நாம் முன்னேறலாம்...

## அறிவியல் துணுக்குகள்..

1- பிளாஸ்ரிக் உடைந்து அழிவதற்கு 500 ஆண்டுகள்வரை செல்லுமாம்.
2- உலகில் மிகக் கோடூரமான நில நடுக்கம் 1557ல் சீனாவில் இடம்பெற்றது. இதில் சமார் 8 லட்சம் மக்கள் இறந்தனர்.
3- சூரியனிலிருந்து புறப்படும் ஒளி பூமியை அடைய 8 நிமிடம் 30 விநாடிகள் எடுக்கின்றன.
4- சராசரியாக ஒரு மனிதன் ஒரு நாளைக்கு 5 முறை சிரிக்கிறான்.
5- அல்பிரட் நோபல் (நோபல் பரிசு இவர் பெயரால்தான் கொடுக்கப்படுகின்றன) 1866ம் ஆண்டு டைனமட்டைக் கண்டுபிடித்தார்.
6- எபோலோ என்னும் வைரஸ் தாக்கினால் ஐந்தில் நான்கு மனிதர்கள் இறந்துவிடுவார்கள்.
7- உலகில் மிகச் சிறிய பறக்கும் பூச்சி, ஈயின் கண்ணைவிடச் சிறியது.
8- மிக வேகமாக விழும் மழைத்துழியின் வேகம் மணிக்கு 18 மைல்கள்.
9- பிறக்கும் 2.000 குழந்தைகளில் ஒரு குழந்தை பற்களுடன் பிறக்கின்றது.
10- சில வகைச் சவுக்கு மரங்கள் ஒரு நாளைக்கு 3 அடி வளர்கின்றன.

## பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு பத்து ஆலோசனைகள்...

1- பரீட்சை நெருங்கிக் கொண்டிருப்பதால் முதலில் பயமோ, பதட்டமோ வேண்டாம்.
2- பரீட்சை நேரங்களில் திட்டமிட்டுப் பாட அட்டவணையைத் தானே தயார் செய்து படிக்க வேண்டும்.
3- கைபேசி, தொலைபேசி பார்ப்பதைத் தவிர்க்கவும். அதனால் குழப்பங்கள் அதிகம் ஏற்படும்.
4- இரவு நேரங்களில் அதிகமாக உட்கொள்ளக் கூடாது. செரிமானம் ஆவதற்கு நேரம் ஆகும். அதிகாலை விழிப்பதில் சிரமம் ஏற்படும்.
5- இரவு நேரங்களில் படிப்பதைத் தவிர்த்து அதிகாலை படிப்பதைப் பழக்கப்படுத்திக் கொள்ளவும்
6- தன்னைத்தானே உற்சாகப்படுத்திக் கொள்ள உடற்பயிற்சி மற்றும் தியானம் செய்வது நல்லது.
7- அதிக காரமான உணவுகளைத் தவிர்த்தல் வேண்டும். பழச்சாறு, மோர், தண்ணீர் குடிப்பது உடலுக்கு ஆரோக்கியம், புத்துணர்ச்சி தரும்.
8- ஒரு மணி நேரம் படித்ததும் 15 நிமிடம் படித்ததை நினைவுபடுத்திப் பார்க்கவும். பின் பத்து நிமிடம் நடைப் பயிற்சியை செய்துவிட்டு மீண்டும் படிக்க ஆரம்பிக்கலாம்.
9- படித்ததை எழுதிப் பார்ப்பது பத்துமுறை படிப்பதற்குச் சமம்.
10- படிக்கும்போது ஒரே நேரத்தில் பல வேலைகளில் ,ஈடுபட்டால் ஒன்றுமே சரிவரச் செய்யவோ கிரகிக்கவோ முடியாமல் போகும்...

- அனைவரும் பரீட்சையில் வெற்றி பெற வாழ்த்துகள் -

................................................................................

## ஒரே எழுத்தை இரண்டு இடங்களில் பயன்படுத்தினால் ஒருசொல்

| | | |
|---|---|---|
| 01- மிருகங்கள்<br>-- -- | 02- கழிமுகம்<br>-- -- | 03- கடுகதி<br>-- -- |
| 04- தடுத்தல்<br>-- -- | 05- விடுவிப்பு<br>-- -- | 06- தித்திப்பு<br>-- -- |
| 07- கலகம்<br>-- -- | 08- கடுகடுத்தல்<br>-- -- | 09- பப்படம்<br>-- -- |
| 10- கற்கண்டு<br>-- -- | 11- மன்னன்<br>-- -- | 12- கல்லீரல்<br>-- -- |




# எம் பெற்றோர்..

உலகில் முதல் வணக்கத்திற்குரியவர்கள் எம் பெற்றோர்களே.. கடவுள் எல்லோருக்கும் காட்சி கொடுக்க முடியாது என்பதால்தான் கண்ணுக்குத் தெரிந்த தெய்வமாக தாயைப் படைத்தான் என முன்னோர்கள் கூறுவார்கள். " தாயிற் சிறந்த கோயிலும் இல்லை தந்தை சொல் மிக்க மந்திரமில்லை " என்று முன்னைய காலத்திலேயே பெற்றோரின் பெருமையைப் பாடலாகப் பாடப்பட்டுள்ளது. அதாவது தாய் அன்பு காட்டுவதில் சிறந்தவளாகவும் தந்தை அறிவு புகட்டுவதில் ஆசானாகவும் விளங்குகின்றனர்.

இதில் தாய், தந்தை என்பவர்கள் எம்மைப் பெற்றெடுத்தமையால் இவர்கள் பெற்றோர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். இவர்கள் எப்பொழுதும் தமது பிள்ளைகளின் சிந்தனைகளிலேயே வாழ்வை நகர்த்திச் செல்வார்கள். " எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே பின் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பதிலே...அன்னை வளர்ப்பதிலே " என்று கூறும் பாடல் ஒரு தாயின் குழந்தை வளர்ப்பை எடுத்துக் கூறுகின்றது. ஆதலால் பெற்றோர் என்னும் சொல்லில் தாயானவளே அதிகம் பங்கு வகிக்கின்றாள்.

எனினும் தந்தையின் ஆதிக்கமும் சொல்லி அளவிட முடியாது காரணம் ஒரு குடும்பத்தின் ஆதாரமே தந்தையில்தான் தங்கியிருக்கின்றது. "

" தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல் "

தகப்பன் தன் பிள்ளைக்குச் செய்யும் நன்மை கற்றவர் அவையில் முதன்மை பெறச் செய்வதே!.. ஆம் வள்ளுவரின் வாசகங்களை கடைப்பிடிப்பவரும் தந்தையே..

ஆகையால் நாம் நமது பெற்றோரை கனம் பண்ணி வாழ்ந்தால் நம் எதிர்காலம் இன்பங்களை அள்ளித்தரும். எனவே நம் பெற்றோரின் வழிநடத்தலின்படி நாம் நடப்போமானால் நம் எதிர்காலம் சிறந்ததாக அமையும் என்பதில் ஐயம் இல்லை எனக்கூறலாம்.

## சுடுக்கோ புதிர்ப்போட்டி இலக்கம் - 42

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 4 | 6 | | | | | 9 |
| | | | | | | | 4 | |
| | | | | 9 | | | | |
| 3 | 2 | | 4 | | | | | 6 |
| | 4 | 8 | | 2 | | | | 7 |
| 7 | | | | | | | | 5 |
| | 1 | | | | | | | 2 |
| | | 3 | | 5 | 7 | 6 | | |
| | 7 | | | 3 | 1 | | | 4 |

## சிறுவர் குறுக்கெழுத்துப் போடி 135
## ( பங்குனி - சித்திரை 2024)

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

இவ
01-03 நம் வாழ்வில் இதைப் பெறுதல் அவசியமாகும்.
09-12 இது ஒரு விளையாட்டுப் பொருள்.
14-15 மனித உறுப்புக்களில் ஒன்று.
வ-இ
08-06 இது ஒரு மிருகம்.
14-13 நம் சொந்த நாட்டில் பயன்தரும் மரம் ஒன்று.
கீ-மே
08-04 பழம் இதன் ஒத்த சொல்.
14-06 ஆடுகள் கட்டும் இடம்.
மே-கீ
01-13 மாணவர்களுக்கு இந்த வளமும் வேண்டும்.
08-16 வீடு கட்டுவதற்கு இதையும் பயன்படுத்துவார்கள்.

முயற்சித்துப் பாருங்கள். விடை தெரியாவிடின் பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்.

## ஒரு சொல் பல பொருள்..

01 - பெண் - மங்கை, யுவதி, காரிகை, மாது, பாவை, நங்கை.
02 - காற்று - வளி, மாருதம், தென்றல், ஊதை, பவளம்.
03 - பூமி - உலகம், புவி, பார், வையகம், அகிலம், தரணி.
04 - சிங்கம் - அரி, ஆழி, கேசரி, கோளரி, சீயம்
05 - வானம் - ஆகாயம், விசும்பு, விளி, அண்டம், விண்ணுலகம்.
06 - வயல் - பழமை, செய், கழனி, புலனம்.
07 - உண்மை - மெய், சத்தியம், வாய்மை.
08 - குற்றம் - தவறு, பிழை, களங்கம், தப்பு, மாசு, காடு.
09 - ஆசிரியர் - ஆசான், உபாத்தியான், குரவர், தேசிகர்
10 - குதிரை - அசுவம், பரி, புரவி, அயம்.
11 - ஞானம் - அறிவு, ஆற்றல், விவேகம், புத்தி, வித்தை.
12 - அறிவுரை - புத்திமதி, நல்லுரை, உபதேசம்.
13 - தேன் - மது, நயவு, தேறல், கள்.
14 - ஒலி - ஓசை, அரவம், தொனி, சத்தம்.
15 - ஆதி - முதல், ஆரம்பம், தொடக்கம், பழமை.
16 - சோலை - உபனம், கா, தண்டலை, நந்தவனம், பூங்கா, பொழில்.
17 - அரசன் - மன்னன், வேந்தன், கோன், புரவலன், நிருபன், கோ.
18 - தரித்தல் - அணிதல், சூடுதல், புனைதல், அலங்கரித்தல்.
19 - குடித்தல் - அருந்துதல், பருகுதல், சுவைத்தல்.
20 - இனம் - உறவு, சுற்றம், கிளை, பரிசனம்.

## முதியோர் பற்றி நாடுகளின் பழமொழிகள்...

01- பல்கேரியாப் பழமொழி
முதியோரை மதித்தல் இறைவனை மதிப்பதற்குச் சமமாகும்.
02- இங்கிலாந்துப் பழமொழி
தாயும் தந்தையும் இல்லாத வீடு அது ஒரு வீடாகாது.
03- ரஷ்ஷியப் பழமொழி
தாய் தந்தையரின் ஆசீர்வாதம் நீரிலும் அழியாது நெருப்பிலும் அழியாது
04- சீனப் பழமொழி
தந்தையின் கடன்களை மகன் செலுத்தவேண்டும்.
05- எகிப்துப் பழமொழி
தாய் உன்னைப் பத்துமாதம் சுமந்து பாலூட்டிச் சீராட்டிப் பாதுகாத்து வளர்த்தெடுத்தாள். அவள் உன்னைப்பற்றி இறைவனிடம் முறையிட வைத்துவிடாதே..
06- யூதப் பழிமொழி
இறைவன் எல்லா இடங்களிலும் இருக்க முடியாது என்பதற்காகத்தான் தாயைப் படைத்தான்.
07- ஆபிரிக்கப் பழமொழி
வயதானவருக்கு அவர் கேட்கமுன் கொடு..
08- கிரீஸ் பழமொழி
முதியவர்கள் இரண்டாவது முறையாகக் குழந்தைகள்.

# புதிய ஆத்திசூடி.....

ஆசிரியர்: மகாகவி சுப்பிரமணிய பாரதியார்...

காப்பு - பரம்பொருள் வாழ்த்து ஆத்திசூடி, இளம்பிறை அணிந்து மோனத் திருக்கும் முழுவெண் மேனியான்கருநிறங் கொண்டுபொற் கடல்மிசைக் கிடப்போன் முகமது நபிக்கு மறையருள் புரிந்தோன் ஏசுவின் தந்தை எனப்பல மதத்தினர் உருவகத் தாலே உணர்ந்துணராது பலவகையாகப் பரவிடும் பரம்பொருள் ஒன்றே அதனியல் ஒளியுறும் அறிவாம் அதனிலை கண்டார் அல்லலை அகற்றினார் அதனருள் வாழ்த்தி அமரவாழ்வு எய்துவோம்.

## உயிர் வருக்கம்

01- அச்சம் தவிர்
02. ஆண்மை தவறேல்
03. இளைத்தல் இகழ்ச்சி
04. ஈகை திறன்
05. உடலினை உறுதிசெய்
06. ஊண்மிக விரும்பு
07. எண்ணுவ துயர்வு
08. ஏறுபோல் நட
09. ஐம்பொறி ஆட்சிகொள்
10. ஒற்றுமை வலிமையாம்
11. ஓய்த லொழி
12. ஔடதங் குறை

## உயிர்மெய் வருக்கம்

## ககர வருக்கம்

13. கற்றது ஒழுகு
14. காலம் அழியேல்
15. கிளைபல தாங்கேல்
16. கீழோர்க்கு அஞ்சேல்
17. குன்றென நிமிர்ந்து நில்
18. கூடித் தொழில் செய்
19. கெடுப்பது சோர்வு
20. கேட்டிலும் துணிந்து நில்
21. கைத்தொழில் போற்று
22. கொடுமையை எதிர்த்து நில்
23. கோல்கைக் கொண்டு வாழ்
24. கவ்வியதை விடேல்

## சகர வருக்கம்

25. சரித்திரத் தேர்ச்சிகொள்
26. சாவதற்கு அஞ்சேல்
27. சிதையா நெஞ்சு கொள்
28. சீறுவோர்ச் சீறு
29. சுமையினுக்கு இளைத்திடேல்
30. சூரரைப் போற்று
31. செய்வது துணிந்து செய்
32. சேர்க்கை அழியேல்
33. சைகையில் பொருளுணர்
34. சொல்வது தெளிந்து சொல்
35. சோதிடந்தனை இகழ்
36. சௌரியம் தவறேல்

## ஞகர வருக்கம்

37. ஞமலிபோல் வாழேல்
38. ஞாயிறு போற்று
39. ஞிமிரென இன்புறு
40. ஞெகிழ்வது அருளின்
41. ஞேயம் காத்தல் செய்

## தகர வருக்கம்

42. தன்மை இழவேல்
43. தாழ்ந்து நடவேல்
44. திருவினை வென்று வாழ்
45. தீயோர்க்கு அஞ்சேல்
46. துன்பம் மறந்திடு
47. தூற்றுதல் ஒழி
48. தெய்வம் நீ என்று உணர்
49. தேசத்தைக் காத்தல் செய்
50. தையலை உயர்வு செய்
51. தொன்மைக்கு அஞ்சேல்
52. தோல்வியில் கலங்கேல்
53. தவத்தினை நிதம்புரி

### நகர வருக்கம்
54. நன்று கருது
55. நாளெல்லாம் வினை செய்
56. நினைப்பது முடியும்
57. நீதிநூல் பயில்
58. நுனியளவு செல்
59. நூலினைப் பகுத்துணர்
60. நெற்றி சுருக்கிடேல்
61. நேர்படப் பேசு
62. நையப் புடை
63. நொந்தது சாகும்
64. நோற்பது கைவிடேல்

### பகர வருக்கம்
65. பணத்தினைப் பெருக்கு
66. பாட்டினில் அன்பு செய்
67. பிணத்தினைப் போற்றேல்
68. பீழைக்கு இடம் கொடேல்
69. புதியன விரும்பு
70. பூமி இழந்திடேல்
71. பெரிதினும் பெரிது கொள்
72. பேய்களுக்கு அஞ்சேல்
73. பொய்மை இகழ்
74. போர்த் தொழில் பழகு

### மகர வருக்கம்
75. மந்திரம் வலிமை
76. மானம் போற்று
77. மிடிமையில் அழிந்திடேல்
78. மீளுமாறு உணர்ந்து கொள்
79. முனையிலே முகத்து நில்
80. மூப்பினுக்கு இடங்கொடேல்
81. மெல்லத் தெரிந்து சொல்
82. மேழி போற்று
83. மொய்ம்புறத் தவம் செய்
84. மோனம் போற்று
85. மௌட்டியந்தனைக் கொல்
86. யவனர்போல் முயற்சிகொள்
87. யாவரையும் மதித்து வாழ்
88. யௌவனம் காத்தல் செய்
89. ரஸத்திலே தேர்ச்சி கொள்
90. ராஜஸம் பயில்
91. ரீதி தவறேல்
92. ருசிபல வென்றுணர்
93. ரூபம் செம்மை செய்
94. ரேகையில் கனிகொள்
95. ரோதனம் தவிர்
96. ரௌத்திரம் பழகு
97. லவம்பல வெள்ளமாம்
98. லாகவம் பயிற்சி செய்
99. லீலை இவ்வுலகு
100. உறுத்தரை இகழ்
101. உலோக நூல் கற்றுணர்
102. லௌகிகம் ஆற்று
103. வருவதை மகிழ்ந்துண்
104. வானநூல் பயிற்சிகொள்
105. விதையினைத் தெரிந்திடு
106. வீரியம் பெருக்கு
107. வெடிப்புறப் பேசு
108. வேதம் புதுமை செய்
109. வையத் தலைமைகொள்
110. வௌவுதல் நீக்கு

## இலங்கையில் வெளிநாட்வர்கள் ஆட்சிக் காலம்..

1505 - 1656 - 151 வருடங்கள் - போத்துக்கீசர்

1656 - 1796 - 140 வருடங்கள் - ஒல்லாந்தர் (நெதர்லாந்து)

1796 - 1948 - 152 வருடங்கள் - ஆங்கிலேயர் (பிரிட்டிஷ்)

## கணக்குப் புதிர்ப்போட்டி...

| | | | | |
|---|---|---|---|---|
| 73 | | 69 | | 65 |
| | 74 | | 70 | |
| 79 | 67 | | 83 | |
| | 80 | 63 | | 84 |
| | | 81 | 64 | |

எந்தப் பக்கத்தால் கூட்டினாலும் கூட்டுத்தொகை 375 வரவேண்டும். 63 தொடக்கம் 87 வைரயிலான எண்களை மட்டும் பயன்படுத்தலாம். ஒரு முறை எழுதிய எண்ணை மீண்டும் எழுதக்கூடாது.

........................................................................................................

## உலகின் முதல் பெண் பிரதமர்கள்...

01- 1960 - இலங்கை - ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா.

02- 1966 - இந்தியா - இந்திரா காந்தி

03- 1969 - இஸ்ரேல் - கோல்டா மேஜர்

04- 1974 - ஆஜர்ன்தீனா - மரியா எஸ்டலா பெரோஸ்

05- 1975 - மத்திய ஆபிரிக்க குடியரசு - எலிசபெத் டொமினியன்

06- 1979 - போத்துக்கல் - மர்ஜா லூர்டெஸ் பின்டாஸ் சில்கோ

07- 1979 - இங்கிலாந்து - மார்க்கிரட் தட்சர்

08- 1980 - ஐஸ்லாந்து - விஸ்டிஸ் பின்கோ கடடோடிர்

09- 1980 - டொமினிக்கன் குடியரசு - மேரி யூஜினியா

10- 1981 - நோர்வே - குரோ ஹர்லெம் புருக்லாண்ட்

11- 1990 - அஜர்லாந்து - மேரி ரபின்சன்

# காசிஆனந்தனின்
# சிந்தனைகள்...



## சக்கை:-

எலும்பும் தோலுமாகக் கிழட்டுப் பசு ஒதுக்குப் புறத்தில் கவனிப்பாரற்றுப் படுத்திருந்ததை வெள்ளாடு கவலையோடு நோக்கியது. பசுவைப் பார்த்து " முன்பெல்லாம் உன் வீட்டுக்காரன் நாள்தவறாமல் குளிப்பாட்டுவானே!.. புல்லும் வைக்கோலும் போட்டுத் தடவிக்கொடுப்பானே இப்போது திரும்பிக்கூடப் பார்ப்பதில்லையே ஏன்? என்று கேட்டது ஆடு. பசு பெருமூச்சு விட்டது. பயனில்லை அதனால் பார்ப்பதில்லை என்றது பசு. சுருக்கமாக அது சொன்னது. .

**" மடியில் பாலுமில்லை மதிக்க ஆளும் இல்லை "**

## காவல்:-

பக்கம் பக்கமாக இரண்டு காணிகள் இரண்டு நாய்கள். ஒரு நாய் எப்போதும் துடிப்பாக இருக்கும். இன்னொன்று சோர்ந்து கிடக்கும். துடிப்புள்ள நாய் தன் காணியில் நுழைந்த மாடுகளைக் குரைத்து விரட்டி அடித்தது. சோர்ந்த நாயின் காணியிலோ பயிர்களை மாடுகள் மேய்ந்து முடிந்திருந்தன. ஒரு நாள் இரண்டு காணிகளிலும் பாம்புகள் நுழைந்தன. விழிப்போடு இருந்த நாய் பாம்பைத் துண்டு துண்டாகக் கடித்துக் குதறியது.. தூங்குமூஞ்சி நாயோ பாம்பு தீண்டித் துடிதுடித்துச் செத்துப் போனது. பொது வேலியில் இருந்த காக்கை சொன்னது..

**" இயலான் மண்ணில் அயலான் ஆட்சி "**

# குறளும் பொருளும்...

## தூது:-

681 - அன்புடைமை யான்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு.

682 - அன்பறி வாராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்
கின்றி யமையாத மூன்று.

683 - நூலாரு ணூல்வல்ல னாகுதல் வேலாருள்
வென்றி வினையுரைப்பான் பண்பு.

684 - அறிவுரு வாராய்ந்த கல்வியிம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு.

685 - தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாந் தூது.

686 - கற்றுக்கண் ணஞ்சான் செலச்சொல்லிக் காலத்தாற்
றக்க தறிவதாந் தூது.

687 - கடனறிந்து காலங் கருதி யிடனறிந்
தெண்ணி யுரைப்பான் றலை.

688 - தூய்மை துணைமை துணிவுடைமை யிம்மூன்றின்
வாய்மை வழியுரைப்பான் பண்பு.

689 - விடுமாற்றம் வேந்தர்க் குரைப்பான் வடுமாற்றம்
வாய்சோரா வன்க ணவன்.

690 - இறுதி பயப்பினு மெஞ்சா திறைவற்
குறுதி பயப்பதாந் தூது.

# குறளும் பொருளும்...

## சமாதானத்திற்குச் செல்பவர் தன்மை..

681- அன்புடைமை தகுந்த குடிப் பிறப்பு. அரசன் விரும்பும் நற்பண்புடைமை ஆகியவையே தூது செல்பவன் தகுதியாகும்.

682- தன் அரசிடம் அன்பும், அறிவும், சொல்வன்மையும் ஆகிய மூன்றும் தூது உரைப்பவனுக்கு வேண்டிய இன்றியமையாத பண்புகளாகும்..

683- வேற்றரசரிடம் சென்று தன் அரசின் வெற்றிக்குக் காரணமான செயலைப் பற்றிச் சொல்பவன் திறம் கற்றாருள் கற்ற வல்லவனாக விளங்குதல் வேண்டும்.

684- இயல்பான அறிவும், அழகிய உருவும், ஆய்ந்தறிந்த கல்வியும் உடையவனே வேற்றரசிடம் தூது சொல்லச் செல்லலாம்.

685- வேற்றரசிடம் சொல்ல வேண்டுவதைத் தொகுத்துச் சொல்லியும், அவற்றுள் பல வற்றை நீக்கி அவர் மகிழச் சொல்லியும் தன் அரசுக்கு நன்மை உண்டாக்குபவனே தூதுன் ஆவான்.

686- நீதி நூலைக் கற்று, பகைவன் பார்வைக்கு அஞ்சாமல், கேட்பவர் உள்ளத்தில் பதியும்படிச் சொல்லி காலத்திற்குப் பொருத்தமாக அறிய வேண்டியதை அறிபவனே தூதன்.

687- தன் கடமையை உணர்ந்து, தன் செயல் முடிக்கும் காலத்தை நோக்கி, தக்க இடம் அறிந்து ஆராய்ந்து சொல்பவனே தூதன்.

688- ஒழுக்கமுடைமை, துணையுடைமை, துணிவுடைமை ஆகிய மூன்றும் வாய்த்திருத்தலே தூதனுக்குரிய தகுதிகளாகும்.

689- இடருக்கு அஞ்சித் தாழ்ந்த சொல்லை வாய் தடுமாறாமல் வலிமையுடன் தன் அரசனின் சொல்லை மாற்றானுக்குச் சொல்பவன் தகுதியுடையவன்.

690- தனக்கு அழிவே வருவதாக இருந்தாலும் தன் அரசனுக்கு உறுதி உண்டாகும்படிச் செய்பவனே தூதன் ஆவான்.

# குறுக்கெழுத்துப்போட்டி-198
## (பங்குனி - சித்திரை 2024)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

இ-வ
01-07 உலகில் இவர்களுக்கும் ஒரு நாள் அது எந்த நாள்.
16-19 பெண் ஒருவரின் பெயர்.
22-25 மரக்கறி வகைகளில் ஒன்று.
43-47 விளையாட்டுப் பொருள் ஒன்று.

வ-இ
12-09 கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு ஊர்.
28-25 பாதுகாவலரை இப்படியும் அழைக்கலாம்.
31-34 கொடைக்குப் பெயர் போன மன்னன்.
40-38 கூரான ஆயுதம் ஒன்று.

கீ.மே
27-13 சிலர் இது வேண்டியும் பிழைப்பு நடா
த்துவார்கள்.
28-07 ஒட்டிப் பிடிக்கும் ஒரு பொருள்.
30-09 மீன் விற்பவள் மீன்காரி...பூ விற்பவள் யார் இவள்......
43-29 சிலரின் இந்தக் குணத்தால் அவர்களின் முன்னேற்றம் தடைப்படுகின்றது.
48-41 மாதம் ஒன்று..

மே-கீ
01-29 நவரத்தினங்களில் ஒன்று.
28-49 கடிதம் இதை இப்படியும் அழைக்கலாம்.
30-44 பயமுறுத்துவதற்கு இதையும் பயன்படுத்துவார்கள்.

(விடைகளை கண்டு பிடியுங்கள். முடியாவிடின். பக்கங்களைப் புரட்டுங்கள்

## பெண்கள் தினம்....

பெண்ணென்றால் பேயும் இரங்கும்
கண்ணென்றால் இமையும் காக்கும்
பண்பென்றால் அவளிடம்
தான் இருக்கும்
அன்பும் அங்கே மிஞ்சியே நிற்கும்
பெண்தான் குடும்ப விளக்கு
பெண்தான் நாட்டின் கண்கள்
இதுவெல்லாம் பெண்ணிற்கு புகழ்ச்சி
பெண்ணென்றால் அடிமை
பெண்ணென்றால் பிள்ளை
பெறும் கருவி
பெண்அகப்பை பிடிக்க மட்டும்
இப்படி இழிவான சந்தர்ப்பமும்
அவளுக்கு உண்டு
அந்தக் காலத்தில் அதுகொடுமை
இந்தக் காலத்தில் சில சீர்திருத்தம்
புதுமைப் பெண் உருவெடுத்ததால்
நிமிர்ந்து நிற்கின்றாள் நேராக
பெண்ணுக்கு சுதந்திரம் இல்லையாம்
யார்கொடுக்க வேண்டும் அவளுக்கு
சுதந்திரம் அவள் சுதந்திரத்தை
அவளே பெற்றுக் கொள்ளுவாள்
பெரிய பெரிய பதவி வகிப்பவளுக்கு
பெருந்தன்மையுடன் சுதந்திரம்
பெறத்தெரியாதா என்ன
பெண்கள் நன்றாக முன்னேறி
விட்டார்கள் பெருமைதான்
பெண் இன்று ஆணாக மாறுவதும்
ஆண் பெண்ணாக மாறுவதும்
நடக்கின்றது
ஆண் ஆணாக இருந்து
பெண்.பெண்ணாக இருந்தால்
ஆண் செய்யும் வேலை பெண்ணால்
செய்ய முடியாது
இது இயற்கையின் நியதி
பெண் பெண்ணாக இருந்து
ஆண் ஆணாக இருந்து
பெண்ணை மதிக்க வேண்டும்
இதுவே பெண்ணினத்திற்கு
பெருமை தரும் அனைத்துலக
மகளிர் தினத்தில்
பெண்களை மதித்து பெருமைப்
படுத்துங்கள்

- கொங்கா ஸ்ரான்லி

## புரட்சிப் பெண்.....

ஓராறு வயதில் அன்னை கரம்
பற்றிச் சென்றாள்
ஈராறு வயதில் மங்கைப்பருவமாய்
நடைபயின்றாள்
மூவாறு வயதில் நல்லது தீயது
அறிந்து கொண்டாள்
நாலாறு வயதில் திருமணச்
சந்தையில் விலையானாள்!...

சீராகச் சிறப்படனே திருமணமும்
நடந்தேற
ஊராரும் உற்றாரும் நண்பர்களும்
வாழ்த்துரைக்க
பேரானந்தம் கொண்டு கற்பனை
கனவில் மிதக்கையில்
சீராளனின் சின்னத்தனம் வெளியில்
அம்பலமானதே!..

வேறு துணையுடன் பிள்ளையும்
உண்டென அறிந்து
மாறுபட்டு மனம் நொந்து வெந்து
துடி துடித்தாள்
கூறினார்கள் கல்லானாலும்
கணவன் புல்லானாலும்
ஆறு ஜென்மத்திற்கு அவன்தான்
என்றது சமூகம்!...

இடர்கள் பல வந்தும் துணிந்து
நின்று போராடினாள்
தொடர்கதையான அடக்கு
முறைக்கு ஆணி அடித்தாள்
புத்தியால் வாதாடினாள் கல்வியால்
போராடினாள்
வீறு நடைகொண்டு வெளியே
வந்தாள் புரட்சிப்பெண்ணாய்!...

- இராஜேஸ்வரி சிவராசா -

# பம்பரமாய் பரணியிலே....

இல்லம் என்றிட்ட கோபுரமே
உள்ளம்
முழுதும் உறைந்திருக்கும்
உறவுகள்
என்றிட்ட உயர்சிகரம்
அன்புடன்
என்றும் அணிவகுக்கும்
அறுபடா
வேராய் ஆணி வேரை
அவர்களின்
ஆளுமை அணிதிரட்டும்
பெண்கள்
என்றிட்ட பேரணியே
பெருமைகள்
சேர்ந்திடக் கோலமிடும்
அன்பால்
போடும் முதற்புள்ளி
அழகாய்
தொடுக்கும் உறவுமுறை
அறுவைச்
சிகிச்சை முறைபோல
அறுபடும்
நிலையும் வருவதுண்டு
விடுபடும்
முன்னர் விரைந்தோடி
இணைபட
வைக்கின்ற இயல்புகளை
முறைப்படி
நாமும் முன்னாக்கி
முதற்படி
அமைப்போம் முன்னோக்கி
புள்ளிக்கோலம்
தொடுப்பாக்கி
புதுவகை
ஓவியம் பிறப்பாகும்
கவர்ந்திடும்
ஓவியம் கண்முன்னே

காணிக்கையாகிடும் தூரிகையும்
தூரிகை போல
துலங்க வைக்க
பம்பரம் போல
சுற்றிடுவாள்
பயணிக்கும்



பாதைகள் சீரமைத்தே
பாதுகாக்கும்
பெண்ணினமே தரணியில் தலைநிமிரும்
வாழ்வமைக்கும்
தன்னம்பிக்கை வடத்தை தானிழுக்கும்
துலங்கும் தூரிகை பெண்ணினமே
தூக்கியே வீசிடும்
வாழ்வினிலும் சிகரத்தில் நிற்கும்
சித்திரமே சிந்திப்பாய் இன்றைய
பம்பரம் நீ.
பெண்ணெனும் பேறுபெற்ற தாய்மையும்
நீயே! பேறுகள் பலதாய்
பெருமையுற வாழ்வரண் காக்கும் வரம்
நீங்கள் வற்றாத அன்பின் ஆசான்கள்!

**- வசந்தா ஜெகதீசன் -**



# தாயின்றி நாமில்லை.!



பூமித்தாய் என்று சொல்லும்
புவிகூடத்தாய் தானே-வானில்
பொட்டதுபோல் சுற்றிவரும்
நிலவுகூட பெண்தானே
நீலத்தால் சாறிகட்டி நிலம் காக்கும்
கடல் அவளும் தாய் தானே
நித்திலத்தில் தாய்க்கு நிகர்-எதுவும்
இல்லை என்பேன் சரிதானே.

சிந்து,கங்கை,யமுனை,சரஸ்வதி
சித்தப்பா பிள்ளைகளா?
காவேரி,குமரி,கோதவரி,நர்மதா.
பெரியப்பா பிள்ளைகளா?
இல்லை இல்லை இயற்கை
ஈண்றெடுத்த நதித் தாய்கள்
இவைகளும் பெண் பெயாரால்
உயிர்த்தார்கள்.

பூமிதன்னில் பெண்ணினமே
இல்லையென்றால்
போட்டியிடும் ஆண்களெங்கே?
பொறுமையெங்கே?
ஆணினம்தான் அகிலத்தில்
தனித்திருந்தால்
அன்பு எங்கே? காதல் எங்கே?
இனிமை எங்கே?

கற்பனைக்கு பெண் இனமே
இல்லையென்றால்
கவிஞரெங்கே?கலைஞர் எங்கே?
கலைதானெங்கே?
கர்ப்பத்தில் எமைத் தாங்கி
வளர்க்காவிட்டால்
கல்வியெங்கே? கருணையெங்கே?
காசினிதானெங்கே?

பொன்னுலகம் பெண்
இனத்தை மறந்திருந்தால்
புதுமையெங்கே,புலமையெங்கே
புரட்சியெங்கே?

மண்ணகமும் வாழ்வதற்காய்
படைத்து தந்த
மாதவத் தாய்யினத்தை
மதித்து வாழ்வோம்!....

- பசுவூர்க்கோபி -
ஐயாக்குட்டி கோவிந்தநாதன்.
- நெதர்லாந்து -

## படிப்பினையாகும்!..

கரும்பு கூட அடிவரை இனிக்காது

வாழ்க்கையும் இறுதி வரை
சுவைக்காது

பசியிருக்கும் வரைதான் உணவும்
ருசிக்கும்

பருகப் பருக பாலும் கசக்கும்

பழகப் பழக நட்பும் வெறுக்கும்

கை கோர்த்து நடந்த உறவும்
கைகலப்பில் பிரியும்

ஒரு தட்டில் உண்ட உறவும்
ஒட்டாமல் போகும்

நீ பாதி நான் பாதி என்று சொன்ன
காதலும்

நீ யாரோ நான் யாரோ என்று மாறி
போகும்

உடல் உரசிக் கண்ட காமமும்
முதுமை வரக் காணாமல் போகும்

தென்றலாய் வீசிய காற்றே புயலாக
அடிக்கும்

தூறிய சாரல் பெரு வெள்ளம்
பெருக்காய் ஓடும்

காலங்கள் ஓட காதலும் ஓடும்

மனங்களும் குணங்களும் மாற

மனிதர் வாழ்க்கையும் ஒரு
படிப்பினையாகும்

- கவி மீனா -

## மனித நேயம் மடிகின்றது!..

அதிசயங்கள் மிகுந்த அகில
உலகத்திலே

போர்களும் மரணங்களும் குழந்தைகள்
பெண்கள் அதிகமாக மடிகின்றனர்

மரணத்திலே மாண்டு போகையிலே

மனித்த்தின் நேயம் செத்தே போய்
விட்டன

பொருளாதார பிரச்சினை மூழ்கையில்

துண்டு போட்டு வெற்றியான
அரசியல்வாதிகள்

கண் மூடித்தான் வாழ்கின்றனரே

போதை வஸ்து களவு சண்டை அழிவ-
ினிலே

காவலர்கள் கடமை மீறி விட்டனரே

பிள்ளைகள் போதை வஸ்து அடிமை-
மயிலே

பெற்றோர்கள் கவலையீன நிலையி-
னிலே

அன்பு அரவணைப்பு தவிடு
பொடியாகின்றனவே

பத்து மாதம் சுமந்து தோளில் தூக்கி
வளர்த்த பெற்றோர்கள்

தெருத் தெருவாய் தவிக்க விட்டு

காப்பகங்களில் அனாதைகளாக விட்டு

ஆடம்பர வாழ்வில் வாழும் பிள்ளைகள்
மனித நேயத்தை தொலைத்து
நிற்கின்றனரே

ஆன்மீகம் அற்றுப்போய்

கலங்கும் உள்ளங்கள் கரைந்தே
போகின்றன

- ஜெயா நடேசன் -

# மங்கையர் தின வாழ்த்துக்கள்....




உறங்கிக் கிடந்தது பேதும் பெண்ணே
வீறு கொண்டு விழித்தெழு பெண்ணே
வரும் சோதனை யாவையும் பெண்ணே
பெரும் சாதனை ஆக்கிடு பெண்ணே
இளமைப் பருவம் அருமை பெண்ணே
இழந்தால் மீண்டும் வாராது பெண்ணே
அடிமை விலங்கை ஒடித்திடு பெண்ணே
உரிமை உனக்குண்டு வீரப் பெண்ணே
புதிய பாதை வகுத்திடு பெண்ணே
புதுமைகள் பல படைத்திடு பெண்ணே
துன்பத்தை கண்டு அஞ்சாதே பெண்ணே
துணிந்து பயணம் நடந்திடு பெண்ணே
குலப்பெருமை பேசிப் பெண்ணே
குணத்தை இளக்காதே பெண்ணே
விதியென்று சொல்லிப் பெண்ணே
வீண்பழி போடாதே பெண்ணே
உனக்குள் இருக்குது திறமை பெண்ணே
முயன்றால் உன்னால் முடியும் பெண்ணே
பொறியை வைத்து பெண்ணே
எலி பிடித்தது போதும் பெண்ணே
கணணி எலியை பிடித்துப் பெண்ணே
புதிய சரித்திரம் படைத்திடு பெண்ணே
உலகின் கவனம் ஈர்ப்பாய் பெண்ணே
உன்னை நோக்கி பார்ப்பார் பெண்ணே
நாளை வரலாற்றை நீ அல்ல பெண்ணே
உலகம் உனை எழுதும் பெண்ணே
வளமும் நலமும் பெறுவாய் பெண்ணே.
வாழ்க வளர்க இனிய மங்கையரை
இதயத்தால் மலத்தூவி
வாழ்த்துகிறேன் நன்றி...

**சந்திரா...**

**டென்மார்க்...**

## பாரதி.. கடவுளின் பாதி!..

பாரதி நீ கடவுளின் பாதி
கவிதையில் ஆதி
கடும் சொற்கள் மீறி
சுடும் வரிகள் கோடி..

வஞ்சனை செய்பவரை
உன் கவிதை வரி கொன்றது
நிந்தனை செய்பவரை
உன் விழி வீச்சு வென்றது..

உன் கவிதைகள்
அக்கினி ஏரிமலை
தீண்டாமையை எதிர்த்தத்
தீமிதி!
தீயில் நடந்து
சமூக அநீதியைச் சுட்டெரித்த
சூரியன்!

ஆணும் பெண்ணும்
சிவசக்தியின் ஆக்கமென்றாய்
கண்மூடி சமூகம் பெண்களுக்களித்த
அடிமை விலங்கை உடைத்தெறிந்தாய்
முச்சந்தியில் இனவெறி கொடுமையைப்
புதைத்தாய்..

சமத்துவ உலகிற்கு
பொதுவுடைமை சமூகத்திற்கு
கும்மி அடிக்கக் கற்பித்தாய்
உன் கனவு மெய்ப்பட
கவிதைக் கொடி பிடித்தாய்..

பாரதி நீ கடவுளின் பாதி!
உலகைப் படைத்தக்
கடவுளின் மீதி!
கடவுள் வாழ்கிறாரா
தெரியாது??

பாரதிஉன் கவிதைகள்
காலம் கடந்தும்
உலகில் வாழ்கின்றன
உலகை ஆள்கின்றன.!

## இயற்கை!..

இயற்கையைத்
தாய் என்றோம்
வன்மையோடு அவள்
அழகைச் சீரழித்தோம்..
இயற்கையைக்
கன்னியாக வர்ணித்தோம்
பின் பசுமைக் காடுகளை
அறிந்தே அழித்தோம்..
இயற்கை இறைவன்
எனப் பறைசாற்றினோம்
இயற்கையில் வாழும்
இறைவனைக் கொன்று
விருந்து வைத்தோம்..
இயற்கை
காதலி என நேசித்தோம்
நம் சுயநலத்திற்காகக்
காதலி நெஞ்சில்
கூர்மிகுக் கத்தியைப்
பாய்ச்சினோம்..
இயற்கையை அழித்து
பழித்து காடுகளை எரித்து
பாய்விரித்து படுத்தோம்..
இயற்கை தாய்
மௌனம் காத்தாள்!
வானம்
வருத்தம் கொண்டது
மேகம் கருக்கொள்ள
மறுத்தது
பூமி மழை இன்றி
பாளம் பாளமாகப் பிளந்தது..
குடிநீரின்றி
தவித்த மனிதன்
மண்டியிட்டுக் கையேந்தினான்
இயற்கைத் தாயிடம்..!
இயற்கை தாய்
மௌன விரதம் இருந்தாள்!

**சத்யா பிரான்சிஸ் - மலேசியா**

# பெரிய வெள்ளி !..



வெள்ளி நட்ச்சத்திரமாய்
ஒளிகொடுத்த ஒப்பற்ற
வள்ளல் இயேசு
இவ்வுலகில் வாழும்போது
வாரநாளாக இருந்த
ஒரு நாள் நீ வெளிச்சம்
கொடுக்க மறுத்ததாலோ
பெரிய வெள்ளியென
மருவியது கர்தத்தர்
கரியாகியதாலோ

மூன்று வருடங்கள் மனிதனாய்
சென்றவிடமெல்லாம் அறமாய்
அன்பையும் ஒற்றுமையையும்
காருண்ணியத்தையும் அமைதியையும்
அங்கங்கு விதைத்ததாலோ
உண்மைக் கதையான உன்னை
சதைதொங்கப் பதைபதைக்க
உதைத்துப் புதைக்க
ஆயத்தமான கனமான நாள்

இயற்கையே தன்னை இருட்டி
செயற்கையாகத் தனது
கோபக்கனலைக் கக்கி
மக்களே நீதி நிலைநாட்ட வந்த
மனிதக் கடவுளை அநீதியாய்
நட்டுவிடத் தயாரிக்கிறீர்களே

பரம்பொருளான இறை
பச்சை மரத்தை அறைந்து
தொங்க ஆரம்பிக்கவென
அதனாலோ அன்றைய
மூன்று மணி அநேகமாகச்
சூரியனை உள்ளிளுக்கும்
இருள் மேகம் மூடிச் சோகமாயே

பிறப்பென்னும் அரிய
மானிட வாழ்வுக்கு
சிறந்த உதாரணமாய்த்
திகழ்ந்ததாலோ
மனிதனாகப் பிரசவித்து
புனிதனாக மண்ணுலகு
பூரிப்படையுமளவுக்கு உன்னை
முன்னுதாரணமாகப் பின்பற்றப்
பெரியவராய் விரிந்து தெரிந்தாய்
பலரது வாழ்கைக்கு மருந்தாய்
இருந்து விருந்து
உடலாயும் இரத்தமாயும்
நற்கருணை வடிவில்
அன்றும் இன்றும் என்றும்
நின்று வென்றவராய்!...

**திரேஸ் மரியதாஸ்**
**இலண்டன் - சட்டன்**

# சித்திரையிலொரு புத்தாண்டு....

- இரா . சம்பந்தன் -

சித்திரைப் புத்தாண்டு
செந்தமிழர் புத்தாண்டன் றாயினும்
நித்திரை விழித்தெழுந்து
இத்தரை யெங்கும்
சித்திரையை வரவேற்கும்
சிங்களவரோடு தமிழர்கள் . . . .

தமிழ்ச் சிங்களப் புத்தாண்டாய்
தரணியிலே மலர்வதனால்
புதியதொரு மாற்றத்திற்கு
வழிகாட்டும் பண்டிகையாய் !

ஈரினத்தை யிணைக்கின்ற
பாலமதாய் அமைவதனால்
பேரினத்தின் சிந்தனையில்
மாற்றங்கள் தோன்றிடுமா ?

எத்தனையோ சித்திரைகள்
இத்தரையில் மலர்ந்தாலும்,
புத்தியிலா ரென்றும்
கத்தியதைத் தூக்குவதனால் ,
கத்துங்கட லோரமெல்லாம்
கண்ணீரின் சுவடுகள் . . . .

ஓலைக் குடிசையிலே
வாழ்பவர் கூட
வருடத்தில் ஓர்நாள்
புத்தாடை புனைந்து
புதுப்பொலிவு கொள்வர் !

புலர்ந்திட்ட புத்தாண்டில்
புலராத வானமாய்க்
கந்தல் துணியோடு
கண்கலங்கும் மக்களுமுண்டு

பெற்ற பிள்ளைகளின் முகங்களில்
புன்னகையைக் காண்பதற்கு
கடைகளின் படியேறி
கடனாக உடைகள் வாங்கி
அளித்திடும் பெற்றோர்
தமக்கென்று வாழ்வதில்லை !

பணமிருப்போர் மத்தியிலே
பண்டிகை யென்பது
நாளொரு வண்ணமாய்
நலமுறத் தலைகாட்டும்
ஏழைகளுக்கோ அந்நாள்
ஏக்கமதைப் பரிசளிக்கும் !

சித்திரை மலர்ந்துவர
புத்தாடை புனைந்துநாம்
ஆலயம் சென்று
ஆண்டவனிடம் யாசிப்போம்
இத்தரை துலங்க
இரத்தச் சுவடுகளை
இல்லாமல் துடைத்தழிப்பதற்காய்!

ஓடியோடி யுழைப்பவர்க்கும்,
உலக மாந்தர்க்கும்,
புன்னகையை நிரந்தரமாய்ப்
பரிசளிக்க வேணுமென்று
புவனம் காத்திடுந் தெய்வங்களின்
பொற்பாதங்கள் தொழுதிடுவோம்!..

# கலைஞர் நூறு !....

- ப.பசுபதிராசா -

திராவிடம் தனக்கெனத் தேர்ந்தெடுத்த தனித்துவம்
திகட்டாத மக்கள் பணியை தோளில் சுமந்த மகத்துவம்
கதை வசன கர்த்தாவாய் திரைக் கருவில் உயர் ஜனனம்
விந்தை வார்த்தைகளால் தமிழுக்கு வராது காத்தார் மரணம்!..

இந்திய அரசியலில் எந்நாளும் தேடப்படும் அரசியல் ராஜதந்திரி
கழகம் ஆட்சியில் இருந்தால் தினம் பேசப்படும் அரசியல்வாதி
அரியணை இழந்தால் அறிவாலயம் வேண்டப்படும் அறிவு ஞானி
கரிசனையோடு முத்தமிழும் கொண்டாடும் முதுபெரும் ஆசான் ஜீ!..

விடிவெள்ளி முளைக்கும் முன்பே விழிக்கும் துருவ நட்சத்திரம்
அடிமட்ட மக்களுக்காய் நல்ல முடிவெடுக்கும் சூரிய சித்திரம்
பார்ப்பன ஆதிக்கத்தை மீறி எளியோர்க்கு இடம்தரும் உச்சபட்சம்
இவரைமீறி அனுபவஞானி ஒருவர் வருவது இயற்கையின் விசித்திரம்!..

குடும்ப ஆட்சி என்று கோபிக்கிறது தமிழ்த் தேசியம்
இவர் பெரிய கொள்கை கோமான் என்று பழிக்கிறது சனாதனம்
கையுடன் கூட்டு என்பதே சுயநலம் என்கிறது சந்தர்ப்பவாதம்
ஐந்துமுறை ஆட்சி எப்படி சாத்தியம் இது ஜனநாயகவானம்!..

தமிழுக்கு இறவாப் புகழாய் இருக்கும் இன்பக் குறளோவியம்
அனுபவத்தை அள்ளி நெஞ்சுக்குள் செருகும் நெஞ்சுக்கு நீதி
ஆட்சியின் மாட்சிக் காட்சியாக இருக்கும் சிலப்பதிகாரம்
ஆனாலும் கலைஞருக்கு நெஞ்சம் கட்டித் தழுவும் சிலப்பதிகாரம்!..

தமிழ் நாட்டுக்குத் தண்ணீர் தரேன் என்று சகோதரத் திராவிடம்
தெற்கைத் தேய்த்து அழிப்பேன் என்றபடி வடக்கன் ஆரியம்
உக்கிரமாய் உள்நாட்டில் உயிர் பிடுங்கும் வர்ணாச்சிரமம்
கலைஞரும் தந்த கல்வி அழித்தாடுகின்றது அனைத்தையும்!...





# மண் இதழிலக்கம் 223 இற்கான அட்டைப்படக்கவிதை.





ஆளும் தகைமையுடன் அழகுதமிழைப் போதிக்கின்றாய்
அன்னை மண் உறவுகளின் அடைக்கலமாய் ஆகின்றாய்
தாளும் வாழ்வாதாரத்தைத் தடுத்தாட் கொள்ளுகின்றாய்
தமிழுறவுகளின் தயவோடு தாயகத்துக்கும் உதவுகிறாய்
பாழும் இடர்களையெலாம் பஞ்செனவே நீ ஊதுகின்றாய்
பைந்தமிழ் இலக்கியத்தின் பங்காளியாய் ஆகிநின்றாய்
வாழும் முப்பத்தினான்கு வருட வரலாறாய் நீளுகின்றாய்
வலிமையோடு வேர்விட்டவுனை வணங்கி வாழ்த்துகிறோம்

நாளும் நடக்கின்ற நல்லவற்றைத் தொகுத்துத் தந்தாய்
நாட்டின் நலனுக்காய் நீ நல்லவரைப் போற்றுகின்றாய்
சூழும் இடர்களையே சுடச்சுடநீயும் சுட்டெரிக்கின்றாய்
சுடராக நீ எழுந்து சூழ்ந்த இருளைத் துடைக்கின்றாய்
மூளும் பிளவுகளுக்கும் முற்றுப்புள்ளியாய் நிற்கின்றாய்
முப்போதும் அறத்தின்வழி முனைப்போடு பயணிக்கிறாய்
வாழும் காலமெல்லாம் வான்மழையாய்ப் பொழிகின்றாய்
வறுமையின் வேரறுக்குமுனை வாழ்த்திப்பாராட்டுகின்றோம்

நீளுகின்ற காலமெலாம் (மனித)நேயத்தை வளர்க்கின்றாய்
நெடும்பயண வழித்தடத்தில் நிதர்சனத்தைப் பதிக்கின்றாய்
ஆளுமைகளின் சிறப்பினை அழகோடு நீ ஆராதிக்கின்றாய்
ஆதரவுக் கரங்களையும் அரவணைத்தே வாழ்த்துகின்றாய்
மீளுகின்ற சமூகத்தின் மீட்பராகவே நீயும் உலவுகின்றாய்
மெச்சுகின்ற மனங்களிலே மேல்நிலையில் அமருகின்றாய்
வீழும்நிலை வாழ்வியலை விழுதெனவே தாங்கிநிற்கிறாய்
விருப்போடு உறவுகளின் வேண்டுதலாய்ப் போற்றுகின்றோம்

**- அம்பலவன்புவனேந்திரன் -**



# தத்துவங்களின் தந்தை

## ( 05.5.1818 - 14.3.1883 )

மண்ணிலே பொன்விளைவதைக்கண்டு மானுடம் வியந்தது
மக்களுள் கார்ல்மார்க்ஸைக் கண்டு மண்ணுலகு மலர்ந்தது
எண்ணங்களிலேயே எழுச்சிபெற்று இவ்வுலகமோ விரிந்தது
ஏற்றமுடன் மார்க்ஸ்தத்துவத்தால் ஏழு உலகும் தெரிந்தது
பண்ணிடும் பணிகள் கண்டு பல்கலைக்கழகம் அழைத்தது
பெர்லினும் செனாவும் வியந்தே பட்டங்களை வழங்கியது

திண்ணமாய் மெய்யியலை வடிக்க தீர்க்கதரிசி நீ யென்றது
தீவிரமாய் வர்க்கமுரண்பாடுகளோ தினமுமுனை வதைத்தது
கண்ணிலே வெண்ணெயை விட்டரசுகள் கவனமாய் இருந்தது
காலத்தால் "றைனிஸ ஷைற்றுங்" ஆசிரியராய் அமர்த்தியது
எண்ணத்தை வடிவமாக்கியவுனது எழுதுகோலையும் பறித்தது
எழுத்துக்களே விரோதமாகி ஏதிலியெனவுனையும் வெறுத்தது

பொங்கிவந்த வறுமையினால்ப் புகலிடங்களில் உழன்றாயோ
பொற்காசுக் குவியல்களை புத்தகங்கள்வரைந்தே பெற்றாயோ
எங்களைப்போல் நீயும்அகதியாக எங்கெங்கோ அலைந்தாயோ
இடம்மாறிமாறி முதலாளித்துவத்தால் இடருற்று அலைந்தாயோ
இங்கிலாந்து தஞ்சம் தந்திடவே இயற்பியலை வரைந்த நீயோ
இளைய தொழிலாளர் கொடுமைக்கு எழுச்சியின் வித்தானாயே

பூர்வீகமாம் பொரிசியாவிட்டே புலம்பெயர்ந்துநீ வாழ்ந்தாயோ
பிரான்ஸிலும் பெல்ஜியத்திலும் போராடிடத் தஞ்சமடைந்தாயோ
ஆர்வத்தோடு முதலாளித்துவத்தையே அடியோடு வெறுத்தாயோ
அல்லலுறும் தொழிலாளர் உரிமைக்கு அணிதிரட்டி நின்றாயோ
சர்வதேச தொழிலாளர் சங்கத்தைச் சமைத்தே நீ நிமிர்ந்தினால்
சமத்துவப் பொதுவுடமையின் சரித்திரநாயகனாய் வாழ்கின்றாயே

**- அம்பலவன் புவனேந்திரன் -**

## ஏப்ரல் முட்டாள் தினம்!..

ஏமாற்ற ஒருவர் ஏமாறும் மற்றவர்
மனிதரை மனிதர் சீக்கிரம் சிரிக்க
வைக்கும் ஏப்ரல் 1 மூக்கு முட்ட
மூடராக்கும் முட்டாள் தினமானது

பண்டைய காலம் 1500 இல்
ஐரோப்பியர் கொண்டாடியது
பிரான்ஸ் ஆற்று நீரோடையில்
ஏராள மீன் துள்ளி எழுந்திடவே

ஏமாறிய அவை பிடிபட்டதே
சுவையான பதிவாய் ஏப்ரல் 1
மீன்கள் ஏமாறும் தினமானது

1466 இல் மன்னன் பிலிப் ஒரு
விகடகவியால் முட்டாளாகத்
தோற்கடிக்கப்பட அதுவே
ஏமாளி முட்டாள் தினமானது

வீடு , பாடசாலை எங்குமே
வினோத வேடிக்கையானது
நத்தை கடதாசியில் வைத்து
மோதகமெனச் சுற்றி அத்தை
தந்து வித்தை காட்டியதும் ,

வெள்ளைச் சட்டையில் அட்டை
என்றதும் அழுது குளறியதும்
ஏமாறிய ஞாபகங்கள் மறக்க
முடியாத ஏப்ரல் 1 முட்டாள்
தினமானதே .

**- திருமதி ராணி சம்பந்தர் -**

## கலக்கம் வேண்டாம் கண்ணே!...

கலக்கம் விட்டிடு கண்ணே
காத்திரம் கொள்ளடி பெண்ணே!
இலக்கை எட்டிட நீயும்
எழுந்து நடமிடு இன்றே
எண்ணத்தில் நிறைத்திடு ஏற்றம்
எட்டியே தொடுவாய் வானம்!
வண்ணங்கள் கொண்டதே வாழ்வு
வரலாறு சமைத்திடு நீயும்!

பிறப்புக்கு வேண்டும் பெருமை
பேதமை கொள்ளல் மடமை!
சிறகினை விரித்தலே மேன்மை
சிந்தனை நிறைந்ததே பெண்மை!
புறமது பேசுவோர் முன்னே
புதுமைகள் படைத்துமே வெல்லு!
திறமையை அளந்திட அளவேது
திசையெலாம் சுற்றியே பண்பாடு!

மடமையை ஒழித்திடப் போராடு
மதியது சுடரிடும் நாளும்!
அடவியாய் அறிவினைச் சூடி
அன்பின் வழியதை நாடு!
கடலெனப் பரந்தது உலகு
களிப்பினை ஏந்தியே நடமாடு!
உடமையாய் தன்மானம் கொள்ளு
உயரிய சிகரங்கள் வெல்லு!

**- கீத்தா பரமானந்தன் -**










## 10 வது இடத்தில் யாழ் - பல்கலைக்கழகம்..

இலங்கையிலுள்ள பல்கலைக் கழகங்களின் தரவரிசையிலேயே யாழ் பல்கலைக் கழகம் 10 வது இடத்திலும் வவுனியாப் பல்கலைக்கழகம் கடைசி இடத்திலும் உள்ளன எனத் தரப்படுத்தப்பட்டுள்ளது.
இதே நேரம் இலங்கையின் பேராதனைப் பல்கலைக் கழகம் முதலிடத்திலும் றுகுணு பல்கலைக் கழகம் 2ம் இடத்திலும் களனிப் பல்கலைக் கழகம் 3வது இடத்திலும் உள்ளன. கிழக்குப் பல்கலைக் கழகம் 13வது இடத்தில் உள்ளது.
சர்வதேச ரீதியில் பேராதனைப் பல்கலைக்கழகம் 1.064வது இடம் றுகுணுப் பல்கலைக் கழகம் 1.093வது, களனிப் பல்கலைக் கழகம் 1.456வது இடங்களிலும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் 4.175வது இடத்திலும் உள்ளன..
இலங்கையிலுள்ள 19 பல்கலைக் கழகங்களின் தரவரிசையை இங்கே காணலாம்....

1- University of Peradeniya
2- University of Ruhuna
3- University of Kelaniya
4- University of Sri Jeyawardenepura
5- Universitayof Colombo
6- Rajarata University
7- Sabragamuwa University
8- University of Moratuwa
9- Open University of Sri lanka
10- University of Jaffna
11- Wayamba University of Sri Lanka
12- Uva Wellassa University
13- Eastern University of Sri lanka
14- South Easr University of Sri Lanka
15- Dr Balasaheb Sawantkonkan Krishi Vidypeeth
16- Buddhist and Pali University of Sri lanka
17- Ocean University of Sri Lanka
18- University of Vocational Technology Ratmalana
19- University of Vavuniya

# மனிதனின் மனசு!..

இதிலே புழு, பெரிய கறுத்த எறும்பு எல்லாம் பொரித்து சாப்பிடுறாங்கள் என்று ஒரு யேர்மனிய TV (Galileo) புரோகிராமில் பார்தனான், சீனாக்காரன் பாம்பு, பாங்கொக், தாய்வான் காரங்கள் தவளை, எலி, ஆபிரிக்காக காட்டுவாசிகள் வௌவால், புழு இப்படி எல்லாம் சாப்பிடுறாங்கள், எங்களுக்கு அருவருப்பானவை அவங்களுக்கு சுவை மிகுந்த (delicates food) உணவு.

அடுத்தவன் என்ன செய்யுறான் என்ன சாப்பிடுறான் என்று பார்க்கிற நம்ம சனம் கூட ஆதிகாலத்தில் சகல காட்டு மிருகங்களையும் வேட்டையாடிச் சுட்டுச் சாப்பிட்டுத்தானே வாழ்ந்தார்கள், காலப் போக்கிலை கையாலே அள்ளி நக்கிச் சாப்பிட்ட தமிழர்கள் இன்று மேசையும் கத்தி, கரண்டியும் பாவித்து சாப்பிடுற அளவுக்கு காலத்தின் வளர்ச்சியும் நாகரீகமும் மேலை நாட்டு கலாச்சாரமும் நமக்குள்ளே கலந்து விட்டதுதான் உண்மை!

பசி வந்தால் பத்தும் பறந்திடும் என்பது பழமொழி, இப்ப கையிலை காசு வாயிலை தோசை என்றாகிவிட்டது நிலமை, அடிக்கடி ஏதாச்சும் நொறுக்குத் தீனிகளைச் சாப்பிடுவதால் பசியே எடுப்பதில்லை சில பேருக்கு, எக்கச்சக்க மாத்திரைகளை போடும் நோயாளிகளுக்குப் பசி எடுப்பதில்லை காரணம் மருந்துகளின் பக்க விளைவு. நாவின் சுவையை கூட இல்லாமல் பண்ணி வீடுகிறது பாருங்க!..

அந்த நாளிலை கூழ் என்று காச்சி சிரட்டையிலை வைத்துக் குடித்தவனும், பழைய சோற்றை அடுத்தநாள் போட்டுப் பிரட்டி அள்ளிச் சாப்பிட்டவனும், ஆடு மாடு வெட்டி எறியுற கழிவு நிறைந்த குடலைக் கூட எறியாமல் சமைத்துச் சாப்பிட்டவனும் கூட இன்று வெளிநாடு வந்த பின் அதையே மேசையிலை வைத்துச் சாப்பிடுறான். இது தெரியாமே நாம அடுத்த நாட்டுக்காரன் என்ன சாப்பிடுறாங்கள் என்று ஆராய்ச்சி செய்கிறோமே இதை நினைத்தால் சிரிப்புதான் வருகிறது

உலகம் ஒன்றுதான், உயிர்களுக்கு இரத்தமும் ஒரே நிறம்தான் ஆனால் அதில் வாழும் மனிதர்கள்தான் நிறம் மாறி, குணம் மாறி, மனம் மாறி, பழக்க வழக்கங்களும் மாறி வாழுறாங்கள்.

எல்லா உயிர்களையும் கடவுள் மண்ணில்தான் செய்து உயிர் கொடுத்ததாக சொல்லபடுகிறது ஆனால் அந்த உயிருக்குள்ளே உள்ள மனசை எப்படி உருவாக்கினார்?...

**- கவி மீனா -**

# கிறிஸ்தவர்களின் தவக்காலம்...



தவக்காலம் என்றால் என்ன என்பதற்குப் பல விடைகளுண்டு. அதாவது இயேசுவின் சிலுவைப்பாதை நிகழ்வுகளை அறிவுக் கண்ணோடு பார்த்து மறந்துவிடாது உணர்வு பூர்வமாக உணர வைக்கும் காலமே தவக்காலமாகும்.அது போலவே இறை சாயலாகப் படைக்கப்பட்ட நாம் நமது வாழ்வினை இயேசுவின் வெளிப்பாட்டோடு வாழ்கின்றோமா என்பதை அறியும் காலம் தவக்காலமாகும்.இறைவன் கட்டளைக்கு ஏற்ப வாழத் தவறிய வேளைகளில் அதனூடாக நாம் இழந்த அருட்கொடைகளை மனதுக்குள் ஆய்வு செய்து இழந்தவற்றை மீண்டும் பெறுவதற்கு முயற்சி எடுக்கும் காலமே தவக்காலமாகும்

இவை அனைத்திற்கும் மேலாக நாம் பாவத்தோடே வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் அப்படிப்பட்ட எங்களை மீட்க பிறந்த இயேசுவை துன்பப் படுத்தி அவமானப் படுத்தி இரத்தம் சிந்த வைத்து கள்வரின் அடையாளமான சிலுவையில் அறைந்து கொல்லப்பட்ட அதே இயேசுவோடு ஒன்றிக்க உதவும் காலமே தவக்காலமாகும்.

ஏன் தவக்காலம் 40 நாட்களை உள்ளடக்குகின்றது என்றால் நம் தந்தையாகிய கடவுள் தம் மக்களை காக்க விடுதலைப் பயணத்துக்கு 40 ஆண்டுகள் எடுத்துக் கொண்டார் என்றும் எலியா என்ற இறை வாக்கினர் 40 பகலும் 40 இரவும் நடந்து ஓரேபு என்ற மலையை அடைந்தார் என்றும் கூறப்படுகின்றது.புதிய ஏற்பாட்டில் இயேசு பாலை நிலத்தில் 40 நாட்கள் தவம் இருந்தார்.

எனவே நாமும் இயேசுவின் பாடுகளை தியானித்து உணர்ந்து அப்பட்டறிவுகளின் ஊடாக வாழ்வை அமைக்கவே 40 நாட்கள் தரப்பட்டுள்ளன. தவக்காலத்தில் ஏழைகளுக்கு உதவுங்கள்.இறைவனை மனம் உருகி வேண்டுங்கள் தவம் இருங்கள் திருச்சபை வழங்கும் ஆன்மீகக் கடமைகளை நிறை வேற்றுங்கள்

**- ஜெயா நடேசன் -**

# எழுத்தாளப்பெண்களே!...இணைந்து கொள்ளுங்கள்!...

யேர்மனியில் வாழும் தமிழ் பெண்கள் பலர் தங்களை ஏதோ ஒரு வகையில் எழுத்துடன் தொடர்புடையவர்களாக்கி வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களில் பலர் தமிழ் உலகிற்கு பல இலக்கியங்களை நூலுருவாக்கி தந்துள்ளனர். தமிழ் ஆசிரியர்களாக இருந்து மாணவர்களுக்கு தேவையான பேச்சு, நாடகம், கவிதை, கட்டுரை, வில்லிசை, கூத்து போன்ற படைப்புகளை எழுதி செயல் வடிவம் கொடுத்து வருகின்றார்கள். பலர் மரபுக்கவிகளை கற்று புதுக்கவிதைகளுடன் மரபுக்கவிகளையும் படைத்து வருகின்றார்கள். இவ்வாறு எல்லாம் செயற்பட்டுக்கொண்டிருக்கும் பெண்களின் பக்கங்களை பதிவு செய்ய வேண்டும் என்ற நோக்குடன் கடந்த மூன்று வருடங்களாக திரட்டி வருகின்றேன். பலர் முன் வந்து தமது விபரங்களைத் தந்துள்ளனர். இன்னும் சிலர் தங்கள் தகவல்களை தந்தால் ஒரு நூலாக விரைவில் வெளிக்கொண்டு வரலாம். தொடர்புகளுக்கு:- **சாந்தினி துரையரங்கன்**-Essen
இந்த 31 பேர்களும் தமது விபரங்களைத் தந்துள்ளனர்...நன்றிகள்...

| | |
|---|---|
| 01- திருமதி தவமலர் கல்விர | - Geilenkirchen |
| 02- செல்வி சர்வேஸ்வரி கதிரித்தம்பி | - Brühl |
| 03- திருமதி சந்திரவதனா செல்வக்குமார் | - Schwäbisch Hall |
| 04- திருமதி கெங்கா ஸ்ராலின் | - Erfstadt |
| 05- திருமதி லோகாஞ்சனா அருந்தவநாதன் | - Oberhausen |
| 06- திருமதி ராணி சம்பந்தர் | - Everswinkal |
| 07- திருமதி சோபியா பாஸ்கரன் | - Frankfurt |
| 08- அமரர் கோசல்யா சொர்ணலிங்கம் | - Mülheim |
| 09- திருமதி மங்கையற்கரசி சிவகிருஷ்ணநாதன் | - Borken |
| 10- திருமதி கலைவாணி ஏகானந்தராசா | - Weeze |
| 11- திருமதி சுந்தராம்பாள் பாலச்சந்திரன் | - Saarbrucken |
| 12- திருமதி கீத்தாராணி பரமானந்தன் | - Kevelaer |
| 13- திருமதி ஜெயா நடேசன் | - Bonn |
| 14- திருமதி வசந்தா ஜெகதீஸ்வரன் | - Geilenkirchen |
| 15- திருமதி சுபாஜினி | - Baden urdenbach |
| 16- திருமதி கௌசி சிவபாலன் | - Solingen |
| 17- திருமதி மீனா சிவலிங்கம் | - Hennef |
| 18- திருமதி சாந்தினி வரதராசா | - Burgukulstadt |
| 19- திருமதி ஜெகதீஸ்வரி இராஜரட்ணம் | - Saarbrucken |
| 20- திருமதி வானதி தேசிங்குராஜா | - Frankfurt |
| 21- திருமதி மலைமகள் ராஜீ | - Neuss |
| 22- திருமதி நிம்மி சிவா | - Düsseldorf |
| 23- திருமதி இராஜேஸ்வரி சிவராசா | - Duisburg |
| 24- திருமதி இந்திரா மகாலிங்கம் | - Werne |
| 25- திருமதி ஜெகதீஸ்வரி மகேந்திரம் | - Kaman |
| 26- திருமதி இந்து தெய்வேந்திரம் | - Soest |
| 27- திருமதி விக்னா பாக்கியநாதன் | - Dortmund |
| 28- திருமதி சாந்தி நேசக்கரம் | - Frankfurt |
| 29- திருமதி கிருபாலினி சற்குணநாதன் | - Frankfurt |
| 30- திருமதி நகுலா சிவநாதன் | - Selm |
| 31- திருமதி சாந்தினி துரையரங்கன் | - Essen |

# இலைகள்...

1- ஆல், அரசு, வேம்பு, அத்தி, மா, பலா, வாழை, பூவரசு, என்னும் இவை போன்ற மரங்களின் இலைகளுக்கு மட்டும் " இலை " என்று பெயர்.
2- அகத்தி, பசளி, வல்லாரை, முருங்கை போன்றவற்றின் இலை " கீரை " ஆகின்றது.
3- மண்ணிலே படர்கின்ற கொடிவகை இலைகளுக்குப் " பூண்டு " என்று பெயர்.
4- அறுகு, கோரை முதலியவகைளின் பெயர்கள் " புல் " ஆகின்றன.
5- மலைகளிலே விளைகின்ற உசிலை போன்றவற்றின் இலைகளுக்குப் பெயர் " தழை "
6- நெல், வரகு போன்றவற்றின் இலைகள் " தாள் " ஆகும்.
7- சப்பாத்திக்கள்ளி, கற்றாழை போன்ற தழை இனங்களின் இலை களுக்குப் பெயர் " மடல் ".
8- கரும்பு, நாணல் முதலியவற்றின் இலைகளின் பெயர் " தோகை " ஆகும்.
9- தென்னை, பனை, கமுகு முதலியவற்றின் இலைகள் " ஓலை " என்று சொல்லப்படும்.
10- இவ்வாறு தாவரங்களுக்கு வழங்கிவரும் சொற்களுக்குள்ளே இலக்கணம் மட்டுமல்ல தாவரவியல், அறிவியல் அடங்கி இருக்கின்றன என்பதும் சிறப்பான அம்சமாகும்.

.....................................................................................................................................

**61ம் பக்கத் தொடர்ச்சி....**

அப்போது பாமர மக்களின் நிலை எப்படி இருக்கும்? இன்னும் பெண்கல்வி கற்றமுற்பட்டால் கொதிநீர் ஊற்றும் நாடுகளும் உலகில் உண்டு என் பதை அறியும்போது மனவேதனையே !பெண்கள் தாம் கற்ற கலைகளையும் கல்வியால் வகித்தபதவிகளையும் திருமணத்தின் பின் உதறிவிட்டு குடும்பத்திற்குள் முடக்கும்நிலையும் இன்றுவரை தொடர்கதையாகாவே உள்ளது. கல்வி என்பதே பெண்அடிமைத்தளையை அறுத்து முன்னேறுவதற்கு உறுதுணையாக உள்ளது.
"பெண்ணுக்கு விடுதலை பிறரிடம் இருந்து வருவதல்ல என்பதை ஒவ்வொருபெண்ணுக்குள்ளும் ஏற்பட வேண்டும்"

என்றார் பாரதிதாசன். அதற்கு வழி கல்வியே.ஆதலால் எல்லையின்றிக் கற்றிடுங்கள் பெண்களே ! கற்க விடுங்கள்பெற்றோர்களே!அதுவே பெண்ணுக்கு ஏற்படும் இன்னல்களை விலக்கும் ஒரேவழி! மகளிர் தினம் ஆண்டுக்கு ஒருமுறை கொண்டாடப்படுவதால் பெண்களுக்குவிடுதலை ஏற்படாது. எங்கேயும் எப்போதும் அவளின் உணர்வுக்கு மதிப்புக்கொடுக்கப்படுகிறதோ அன்றுதான் பெண் நிமிர்ந்து நடைபோடுவாள்!...

# நடிகமணிக்கு 100 வயது...... (11.02.1924 - 11.02.2024)

## " அரிச்சந்திரா மயானகாண்டம் " புகழ் சாதனையாளர்...
## அமரர் V.V. வைரமுத்து - தமிழ் உலக நாடக மேதை...

அகில உலக ஈழத்தவர் நடிப்புலகில் முடிசூடா மன்னனராகத் திகழ்ந்தவர்தான் அமரர் வி.வி வைரமுத்து என்னும் ஒப்பற்ற கலைஞன். அமரர் வி.வி அவர்கள் பிறந்து நூறாவது ஆண்டு தினம்தான் 11. மாசிமாதமாகும் (11.02.1924) இந்நாளில் அவரை நினைவு கொள்வது கலை உலகப் பெருமக்களுக்குப் பேரானந்தமாகும்..

ஈழவழத் திருநாட்டில் பட்டி தொட்டி, நகரங்கள் கிராமங்கள் எங்கும் தனது "" அரிச்சந்திர மயான கண்டம் "" என்னும் சரித்திர நாடகத்தின் மூலம் மக்களின் பாராட்டையும் புகழையும் சம்பாதித்தவர்தான் இவர். கடின உழைப்பு, முயற்சி, திறமையின் மூலம் பல லட்சம் தமிழ் மக்களின் நாடகக்கலையை 50 ஆண்டுகளுக்கு மேல் மக்கள் மத்தியில் கொண்டு சென்று சேர்த்து முத்தமிழுக்கு உயிரூட்டிய உத்தமரின் பல நாடகங்களை தமிழ், சிங்கள, இஸ்லாமிய, மலையக மக்கள் என அனைவர் மத்தியிலும் பாராட்டுப் பெற்ற உன்ன கலைஞன்தான் இவர்.

- தனது திறமையால், நடிப்பால் உச்சத்தைத் தொட்ட வி.வி அவர்களைப் பாராட்டி பல நூற்றுக்கணக்காக விருதுகளும் பாராட்டுக்களும் கிடைத்தன. முக்கியமாக சில பிரமுகர்கள், கல்விமான்கள் வழங்கிய பட்டங்களைப் பார்த்தால்...

1- பேராசிரியர் வித்தியானந்தன் - "" கலைக்கோமகன் "
2- பேராசிரியர் கைலாசபதி - "" நவரசத்திலகம் ""
3- பேராசிரியர் சிவத்தம்பி - "" தமிழ்நாடகத்தின் மரணிக்காத குரலோன்""
4- கலையரசு சொர்ணலிங்கம் - "" நடிகமணி "" - 1953
5- அமைச்சர் தொண்டமான் - "" நாடகச் சக்கரவர்த்தி "" - 1964
6- தந்தை செல்வநாயகம் - "" நடிப்பிசை மன்னன் "" - 1970
7- தமிழ் மூதறிஞர் ம.பொ.சிவஞானம் - "" நாடக வேந்தன் ""
8- வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினர் திருநாவுக்கரசு - ""நடிப்பிசைச் சக்கரவர்த்தி "
9- யாழ் பாஷையூர் சென்றோக் கலையரங்கம் - " முத்தமிழ் வித்தகர் ""

- இவரது கலைப் பயணத்தில் அவரது 60 வது பிறந்தநாளில் மாபெரும் பாராட்டுவிழா காங்கேசன்துறையில் 11.02.1984ம் ஆண்டு மக்கள் வெள்ளத்தில் பிரமாண்டமாகக் கொண்டாடப்பட்டது.08.07.1989 திகதியில் தனது 65வது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

- 50 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் நாடகத்துறை மட்டுமல்லாமல் முத்தமிழ் வளர்ச்சிக்கு பெரும் பாடுபட்டு உழைத்த இந்தக் கோமகனின் இயல் இசை, நாடகம் அனைத்தும் இன்றும் உலகத் தமிழர்கள் மத்தியில் புகழ்ந்து பேசப்படுகின்றன.தான் கற்ற, பெற்ற கலை அம்சங்களை அடுத்த சந்ததிக்குக் கொடுத்துச் சென்று இன்றும் என்று உலக நாயகனாகத் திகழ்ந்து கொண்டிருக்கும் மாமனிதர் வி.வி. வைரமுத்து அவர்களின் பெயரும் புகழும் என்றும் தமிழுலகத்தில் வாழ்ந்து கொண்டே இருக்கும்...வாழ்க அவர் புகழ்!...

**இந்த மாத மண் சஞ்சிகையின் அட்டைப்படத்தில் இவரின் படத்தைப் பிரசுரித்து அன்னாரைப் பெருமைப் படுத்தியுள்ளோம்!..**

## சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி முடிவு

| | | | |
|---|---|---|---|
| க | ல் | வி | னி |
| ந் | டி | ர | க |
| ப | ட் | ட | ம் |
| னை | ப | ல் | பி |

## குறுக்கெழுத்துப்போட்டி முடிவு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ம | க | ளி | ர் | தி | ன | ம் |
| ர | ரி | க | ந | பூ | டி | த |
| க | கா | ஞ் | ச | னா | ட் | ந் |
| த | க் | கா | ளி | லா | வ | கா |
| ம் | பூ | ன் | ண | ர் | க | கி |
| ய | த | தி | த் | க | னி | த |
| ப | ம் | ப | ர | ம் | ஆ | ம் |

## சுடோக்கோ போட்டி முடிவு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 4 | 6 | 8 | 2 | 7 | 5 | 9 |
| 9 | 6 | 7 | 5 | 1 | 3 | 2 | 4 | 8 |
| 8 | 5 | 2 | 7 | 9 | 4 | 1 | 6 | 3 |
| 3 | 2 | 5 | 4 | 7 | 9 | 8 | 1 | 6 |
| 6 | 4 | 8 | 1 | 2 | 5 | 9 | 3 | 7 |
| 7 | 9 | 1 | 3 | 6 | 8 | 4 | 2 | 5 |
| 5 | 1 | 9 | 8 | 4 | 6 | 3 | 7 | 2 |
| 4 | 8 | 3 | 2 | 5 | 7 | 6 | 9 | 1 |
| 2 | 7 | 6 | 9 | 3 | 1 | 5 | 8 | 4 |

# நான்தான்!... மதவடி மயிலன்!...



நான்தான் மதவடியான் மீண்டும் வந்திருக்கிறன்...வணக்கம்!... வணக்கம்!... எல்லாரும் சுகம் என்று நினைக்க..கோதாரிப்போன கொரோனா மீண்டும் உலககெங்கும் அச்சுறுத்துகின்றது. கொரோனா லட்சக்கணக்கானவர்களை தின்று விழுங்கியது மறக்கமுடியாத கவலைதான் பாருங்கோ. இப்ப மீண்டும் வேற வடிவில் கொரோனா உலாவுவதாக உலகம் எல்லாம் பேசப்படுகிறது. எல்லாரும் கொஞ்சம் கவனமாக இருங்கோ..

கவலை. . உங்களில் எத்தனைபேருக்கு இந்தக்கவலை வந்ததோ யான் அறியேன் பலருக்கு கவலை வராது ஏனென்றால் இந்த அழிவு எங்கட நாட்டில பெரிதளவு வரவில்லைத்தானே?.. .

நம்மட நாட்டில அரசியல் குழப்பங்கள் முட்டி மோதி எங்கும் எப்போதும் பிரச்சனை..பிரச்சனை என்றே மக்கள் படும்பாடுஅல்லோல கல்லோலம்தான் பாராளுமன்றக் கதிரைகளையும் உள்ளூராட்சி மன்றக் கதிரை களையும் பிடித்து சொகுசுவாழ்வு வாழ எத்தனைப்பேர் வாக்களார்களைவிட வேட்பாளர்கள் கூடப்போர்கண்டியளோஅந்தளவுக்கு கதிரைச் சண்டை முற்றிவிட்டது. யாராவது நாட்டின் பொருளா தாரத்துக்கு நல்ல தீர்வை வைப்பார்கள் என்றால் இது கிடையாது பாருங்கோவன்.

நம்மட அரசியல் வாதிகளும் நாளுக்குநாள் பல பிரச்சனைகளைக் கிழப்பி அரசைக் கலைக்கலாம் என கங்கணம் கட்டினாலும் ஒன்றுமே முடியாது தாம் நினைத்தபடிதான் நடக்கும் என அரசதரப்பு தெரிவித்த வண்ணமே உள்ளது. இப்படியாக ஜனநாயக நாடு என்று சொல்லப்படும் அழகான நாட்டில் இனவாதம், மதவாதம் தலைதூக்கி ஆடும்வரை ஒருவரும் ஒன்றுமே செய்யமுடியாது. புத்தர் உயிருடன் மீண்டு வந்தாலும் அதே கதிதான் பாருங்கோ..

சரி..சரி..அது அப்படிப் போக நம்மட பிரச்சனைகளும் கொரோனாவைப்போல பல..பல வடிவங்களில் இந்த மயிலனின் காதில் விழுந்தவண்ணமே உள்ளன பாருங்கோ. இந்த மயிலனின் மூளையில் நீண்ட நாட்களாகக் குடைந்துகொண்ட விடையம்தான் இந்தமுறை..

அதாவது என்னைப்போல புலம்பெயர்ந்து வந்து குடியேறிய வர்கள்தான் அதிகம்பேர். நாட்டிலிருந்து இங்கு வரும்போது எல்லாத்தையும் அதாவது காசு பணம், கொண்டு வந்தமாதிரி நம்மிடையே நிலவும் சாதி, சமயம், நிறம், பிரதேசம் , அந்தஸ்த்து, திமிர், படித்தவன் - படிக்காதவன், நல்லதொழில்-கூடாததொழில் என்ற அத்தனை வேறுபாடுகளையும் சுமந்துகொண்டு வந்தவர்கள்தான் இந்த மூத்த குடிகள்..

அப்படி வேற்றுமைகளைச் சுமந்துவந்த நாம்..இங்கு என்ன செய்கிறோம்?..பணம் உழைத்துப் பெருக்குவதற்காக குறிப்பிட்ட வேறுபாடுகளை ஓரளவு தள்ளி வைத்துவிட்டு, அல்லது ஒளித்து வைத்துவிட்டு எல்லா வேலைகளையும் செய்கிறோம். உதாரணத்துக்கு ஊரில பெரிய சாதிமான் , அந்தஸ்து என்று சொன்னவர்கள் இங்கு கழிவறைகளில் துப்பரவுத் தொழிலாளர்களாக வேலை செய்து பணம் உழைக்கிறார்கள் பாருங்கோவன். எல்லாம் பணம்...பணம்.. தான். பணமுள்ளவன் பந்தியிலே!.. குணம் உள்ளவன் குப்பையிலே..

சரி..சரி அடுத்தது இங்கு பிறந்த பிள்ளைகள் அல்லது சிறு வயதில் இங்கு வந்து வளரும் பிள்ளைகளுக்கு நமது பெற்றோர் என்ன செய்கிறார்கள். தமது சாதித்திமிரைக் காட்டுவதற்காக தங்களுடைய சாதிக்குள்ளேயே தேடித்தேடி கலியாணம் செய்து கொள்வார்கள். அதுவும் தங்கட ஊர், சாதி, பணம், சொத்து, ஊரின் சொத்து, நிறம் எல்லாம் பார்த்துக் கட்டி வைப்பார்கள். இன்னும் சிலர் தமது பிள்ளைகளுக்கு அட்வைஸ் என்னவென்றால்..அவர்களோடு பிழங்காதே...இவர்களோடு பிழங்காதே அவர்கள் ஊரில பிச்சைக்காரர், சாதிகூடாத ஆட்கள், படிக்காதவர்கள் என்று எல்லாம் கூறி வளர்க்கிறார்கள்.

இன்னொரு சாரார்வெள்ளைக் காரரைக் கட்டினாலும் பறவாயில்லை சிறீலங்கா தமிழ் சாதி குறைந்த வர்களை கட்டக்கூடாது என்று நிபந்தனை போடுகிறார்கள். பிள்ளை களின் விருப்பம் ஆசைகளைப் புறந்தள்ளிவிட்டு தமது விருப்பத்துக் குத்தான் பிள்ளைகளைக் கலியாணம் கட்டி வைக்கிறார்கள். அதனால் பாருங்கோ..அதுகளும் கலியாணம் செய்து குறுகிய காலத்தில் பிள்ளையுடன் டைவோஸ், பிரிவு, அடிதடி, பொலிஸ் என்று முடிந்து பிள்ளைகளின் கலியாணத்தை யும் எதிர்கால வாழ்வையும் நாசம் செய்கிறார்கள்...

இன்னொரு தாய்-தந்தை பாருங்கோ தனது மகள் குறைந்த சாதிப் பெடியனைக் காதலிக்கிறாள் என்று அறிந்து 18 வயது எப்ப வருகுது என்று பார்த்து, தனது சாதிக்குள் திருமணம் செய்துவைத்து இன்னொரு நாட்டுக்கு அனுப்பி வைத்ததுகள். என்ன நடந்தது. அதுவும் சொற்ப காலத்தில் மணமுறிவு. இப்போ சிங்கிள் மதர் ஆக வாழ, பெடியன் போதைக்கு அடிமையாகி அலைகின்றான். இது தேவையா இப்படிச் செய்யும் தமிழ்ப் பெற்றோருக்கு...

வேறொரு குடும்பம் தமது பெடியன் சாதி குறைந்த பெட்டையைக் காதலிக்கின்றான் என்று அறிந்து ஊருக்குக் கூட்டிக் கொண்டுபோய் தம்முடைய சாதிக்குள் ஆடம்பரமாய் பல கோடி செலவில் கலியாணம் செய்து வைத்தனர். இங்கு கூப்பிட சில வருடம் தாமதமானதால் அந்தப் பெட்டை வேறு ஒரு பொடியனோடு ஓடிவிட்டுது பாருங்கோ...

இப்படித்தான் என்னொருவன் தனது மகளுக்கு ஊரில்கொண்டுபோய் தமது சாதியத் திமிரால் ஒரே சாதிக்குள்கலியாணம் செய்து வைத்தான். சில மாதங்களால் பெட்டையும் இங்கு வந்தது. சில மாதங்கள்தான்

அவனோடு வாழ்கையில.. அந்தப் பொடியன் இன்னோரு தமிழ்ப் பெட்டையுடன் காதல் எனத் தெரிந்து கொண்டாள். இப்ப அந்தப் பெட்டையும் தன்னோடு வேலை செய்த யாழ்ப்பாணத்து சாதிகுறைந்த பெடியனைக் கலியாணம் செய்து பிள்ளையோடு வாழ்கிறாள். இப்படி எத்தனை அக்கிரமங்களைப் பல தமிழ்ப் பெற்றோர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள் இந்த வெளி நாடுகளில் பாருங்கோவன்...

இப்ப..வெளிநாடுகளில் சாதி சமயம் பார்ப்பதில்லை என்றும் பலர் போலியாகச் சொல்லிக்கொண்டுதிரியினம். ஆனால் தமது பிள்ளை என்று வந்ததுடன் எல்லா வேறு பாடுகளையும் தூக்கிப் பிடித்துத்தான் கலியாணம் செய்து, பிள்ளைகளின் வாழ்வைச் சீரழிக்கினம் இதுதான் உண்மை பாருங்கோ...

இன்னும் பார்த்தால் பல பிரச்சனை...பிரச்சனைதான்.. இப்ப இங்கு நிறைப் பெண்பிள்ளைகள் படித்துப் பட்டதாரிகளாக வேலைசெய்து உழைத்துப் பணம் சம்பாதிக்கிறார்கள். நல்ல விடையம். ஆனால் அவர்களுக்குக் கலியாணம் என்ற பேச்சால்.. அதுவும் சாதியத்தால் குறைந்தவர்கள் என்று நம்மவர்களால் மேற்கொள்ளப்படும் பேரிய கொடுமையால் அவர்கள் 30 - 35 வயதாகியும் கலியாணம் செய்ய முடியாமல் முதிர் கன்னியாகவே வாழ்கிறார்கள். இது ஊரிலையும் நடக்குது. எவ்வளவு அநியாயம் எவ்வளவு கொடுமை. பாழாய்ப்போன தமிழ்ச் சமுதாயத்தில் இது ஒரு கொடிய புற்றுநோய்தான் பாருங்கோ?...

இப்படி எந்தனை வகையான வேற்றுமைகளும் கொடுமைகளும் நமது தமிழ்ச் சமூகத்தில் நிலத்திலும் புலத்திலும் தினம் நடைபெற்றுக்கொண்டு இருக்குது பாருங்கோவன். வெளிநாடுகளுக்கு வந்து பலவருடங்கள். தாம் நாகரீகமான சமூகம் என்று சொல்லும் தமிழ்ச் சமூகத்தில் ஊரிலையும் புலம்பெயர் நாடுகளிலும் சாதியம் தலை விரித்தாடுவதை நாம் அன்றாடம் காண்கின்றோம்.

எல்லா இடமும் பல எழுத்தாளர்கள், கலைஞர்கள், கவிஞர்கள் என்று மேடை..மேடையாக கத்துகிறவர்கள், பக்கம் பக்கமாக எழுதுகிறவர்கள், பல விருதுகளுக்குச் சொந்தக்காரர்கள். அறிவாளிகள், படித்தவர்கள், பணக்காரர்கள் என்று தமக்குத்தாமே சொல்லிக் கொள்பவர்கள்கூட தமது நிஜ வாழ்வில் எல்லாம் பூச்சியம்தான். பேச்சு, எழுத்து ஒன்று நடைமுறை வாழ்க்கை வேறு ஒன்று. உனக்கல்லடி உபதேசம் அது ஊருக்கடி என்ற சமாச்சாரம்தான் பாருங்கோ!..

பெற்றோர்களே..உங்களிடம் கறைபடிந்து கிடக்கும் பல வேற்றுமைகளையும் குழிதோண்டிப் புதையுங்கள். உங்கள் எதிர்காலச் சந்ததிகளை அவர்களின் விருப்பப்படி வாழ விடுங்கள். போகும் போது எதையும் கொண்டு போகமாட்டீர்கள்.. இருக்கும்வரை பிள்ளைகள், குடும்பம், நட்புக்களுடன் வேற்றுமையில்லாமல் வாழ முயற்சியுங்கள். வாழ்வு ஒரு முறைதான். அப்ப வாறன்..இன்னொரு விடையத்தோடு மீண்டும் வருவான் இந்த மயிலன்....

" சாதிகள் இல்லையடி பாப்பா என்றான் பாரதி.. ஆனால் சாதியத்தால் அழிகிறான் தமிழன்!..மூத்த குடிகள் "

# பல கை மனைவி !.. ( The Wife with More Hands)

(சிறுகதை)





காலையில் எழுந்து, காலைக்கடனை முடித்து, முகம் கழுவி சாமி கும்பிட்ட, பின் பேப்பரும் கையுமாக சோபாவில் அமர்ந்திருந்தான் சுந்தரலிங்கம் என்னும் பெயருடைய சுந்தர். வானொலியில் இசையை ரசித்தவண்ணம், பத்திரிகையில் புதினங்களை வாசித்தபடி, கோப்பியை சுவைத்த வண்ணம், சுற்றி நடப்பவற்றையும் அவதானித்துக் கொண்டிருந்தான். சமையல் அறையில் சமையல் வாசம் மூக்கைத் துளைத்தது. அந்த நேரம் பக்கத்து வீட்டுப் பெண் ஓடி வந்தாள். அவனைப் பார்த்து புன்னகைத்த வண்ணம் அவள், அக்கா என அழைத்தபடி சமையலறைக்குள் ஓடினான்.

அக்கா மகளிர் தினத்திற்கு ஒரு கட்டுரை எழுத வேண்டும் பொயின்ஸ் தருவீங்களா? அக்கா இன்றைக்கு வேணும்! வந்தவள் சொல்லி முடிக்கவும், அவன் மனைவி ஜெயா தன் வேலையை கவனித்தபடியே அவளுக்கு உதவினாள். க்ரெட்டா துன்பெர்க் (Greta Thunberg) எனும் சுவீடன் நாட்டைச் சேர்ந்த 15 வயதான பெண் பருவநிலைக்காக போராடிக் கொண்டு உள்ளார். அவர் எப்படி எப்படிப் போராடினார் என விலா வாரியாக விபரித்த அவன்மனைவி, ”வாழ்வாதார உரிமை விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளதாக ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த மனித உரிமைகள் விருதுக்கான தேர்வு குழு தலைவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் டைம்ஸ் பத்திரிக்கையின் உலகின் நபர் 2019 என்றும் போடப்பட்டுள்ளார் 2019 ஏப்ரல், தெற்கில்உள்ள ஐரோப்பிய ஒன்றிய நாடாளு மன்றத்தில் பேசியுள்ளார் இன்னும் சொல்கின்றேன் உலக நாட்டுத் தலைவர்களை கேள்வி கேட்ட, அந்த சிறிய பெண்ணைப் பற்றி இன்னும் இன்னும் விளக்கமாக கூறினாள்.

கேட்டுக்கொண்டிருந்த சுந்தர் பிரமித்துப் போனான் அப்போது அந்தப் பக்கத்து வீட்டுப் பெண் சொன்னதுதான் சுந்தருக்கு எரிச்சலை கூட்டிவிட்டது

பொறாமைத் தீ கொழுந்துவிட்டு எரிந்தது. அந்தப் பக்கத்து வீட்டுப் பெண் அக்கா இவ்வளவு விஷயங்களை உங்கள் மூளைக்குள் புதைத்து வைத்துள்ளீர்கள் இன்னும் வேறு விஷயங்களும், அங்கு இருக்கின்றதா? உங்கள் மூளை என்ன கொம்பியூட்டரா?! தேங்ஸ்(Thanks) அக்கா என்று சொன்னபடி ஓடிவிட்டாள். ”பெரிய படிப்புகாரி :.:.” சுந்தர் சலித்துக் கொண்டான். அந்த நேரம் பாடசாலை வான் வந்து கோர்ன் அடித்தது.

பிள்ளைகள் இருவரிடமும் சாப்பாட்டு பெட்டி தண்ணீர் போத்தல் எல்லாம் கொடுத்து மிச்சம் வைக்காமல் சாப்பிட வேண்டும்! என்ன? என்று சொல்லிய வண்ணம் பாடசாலை பாக் முதுகில் மாட்டி விட்டு அனுப்பிவைத்தாள். Bye அம்மா! என்றபடி பிள்ளைகள் ஓடிச்சென்று பாடசாலை வேனில் ஏறி போய் விட்டனர். சுந்தருக்கு சுத்தமாக எதுவும் பிடிக்கவில்லை. குத்துக் கல்லாட்டம் இங்கே நான் ஒருத்தன் உட்கார்ந்து இருக்கிறேன். எனக்கு பாய் சொல்ல தோன்றவில்லை !அப்படி பிள்ளைகளை வளர்த்து வைத்திருக்கிறாள்.

மனதுக்குள் நினைத்த படி, எதுவும் தெரியாத மாதிரி பத்திரிகையில் நோட்டம் விட்டபடியே அமர்ந் திருந்தான் அப்போது, நான்கு ஐந்து பெண்கள் ஜெயா ஜெயா என கூப்பிட்ட படி வந்தனர். ஜெயா வெளியில் வந்தாள், மல்லிகைப்பூ தருவீர்களா? எனக் கேட்டனர், ”ஒரு கல்யாண வீட்டிற்கு போறோம் அதுதான் தலைக்கு வைக்க பூமாலை கட்டப் போகிறோம் என்றார்கள்” ஜெயா மல்லிகை பூ பந்தலைக் கை காட்டினாள். கனகாம்பரம் நிறைய பூத்திருக்குது, அதிலும் தருவீர்களா? என அவர்கள் கேட்ட போது மரத்தில் முறிவு, ஏற்படாது ஒவ்வொரு பூவாக கழட்டி எடுங்கள் என்றவண்ணம், மனைவி சமயலறைக்குள் போன பின்பு அந்தப் பெண்களின் சம்பாஷனையை உற்றுக் கேட்டான் சுந்தர்.

ஜெயா கெட்டிக்காரி எப்படி தோட்டத்தை வைத்திருக்கின்றார். நல்ல கலை உணர்ச்சி உள்ள பெண் என கதைத்தபடி பூக்களை கொய்தனர். திரும்பவும் வயிறு எரிந்தது, பொங்கியது. ஏனோ யார் ஜெயாவை புகழ்ந்தாலும் சுந்தர் கொந்தளித்து தான் போய் விடுகின்றான்.ஜெயா வந்து காலைச் சாப்பாடு சாப்பிட அழைத்தாள். சுந்தர் மறுத்துவிட்டான், எனக்கு உடல்நிலை சரியில்லை என்று ஆபிசுக்கு லீவு போட்டுவிட்டேன். சோறு சமைத்து ரசமும் வைத்து ஏதாவது பொரியலும் செய்து பால்கறியும் வைத்தால் நல்லது என்றான்.

நின்று நிமிர்ந்து பார்த்தாள் ஜெயா, என்ன! கண்களால் கேட்ட சுந்தருக்கு ஒன்றும் இல்லை என்று சொன்னபடி, அவள் உள்ளே போய் விட்டாள். ஒரு நமட்டுச் சிரிப்புடன் சுந்தரின் எண்ண ஓட்டம் தொடங்கியது முதலே சொல்லியிருந்தால் காலை சாப்பாட்டை செய்யாமல் மதிய உணவை சமைத்து இருக்கலாம் என எண்ணி இருந்திருப்பாள். நல்லா வேலை செய்யட்டும் எல்லோரும் புகழும்போது சந்தோஷப்படுகிறாள், தானே வேலை செய்து களைக்கட்டும் என மனதில் எண்ணிக் கொண்டான் கண்ணை மூடி எண்ணக் கடலில்

மிதந்த அவன் பத்திரிகை விரித்தபடி இருக்க வானொலியில் இசை தவழ்ந்து வந்து தாலாட்ட அவனை அறியாமல் கண்ணயர்ந்து விட்டான். சுவர் மணிக்கூடு 9 மணி அடித்து ஓய்ந்த போது, ஜெயா சுந்தரை தட்டியெழுப்பி நீங்கள் சொன்ன மாதிரி சோறு ரசம் பொரியல் பால்கறி வைத்துள்ளேன். ப்ளீஸ் போட்டு சாப்பிடுங்க எனக்கு நேரம் போய்விட்டது. என்று சொல்லிய வண்ணம் ஓட்டமாக ஓடிச் சென்று ஸ்கூட்டரை இயக்கத் தொடங்கினார்.

சுந்தருக்கு ஏனோ மனசாட்சி குத்தியது "நீர் சாப்பிட்டுவிட்டீரா?" என ஒரு கேள்வி கேட்டான் இல்லை நேரம் போய்விட்டது லஞ்ச் கொண்டு போறேன் தானே வாரேன் என சொன்னவண்ணம் புறப்பட்டு விட்டாள். சுந்தருக்கு குற்ற உணர்ச்சியாக இருந்தது காலையில் எழுந்து இயந்திரமாக வேலை செய்து பிள்ளைகளை ஆயத்தப்படுத்தி பாடசாலைக்கு அனுப்பி வைத்ததுடன் உதவி என்று வந்தவர்களுக்கு முகம் சுழிக்காமல் உதவி செய்து கொடுத்ததுடன் தனது தேவையையும் சரியாக நிறைவேற்றி விட்டு வேலைக்குப் போகின்றாள். ஆனால் தன்னை கவனிக்கவில்லை. மனைவியின் உடல்நிலை சரியில்லை என படுத்துவிட்டால், இவ்வளவு வேலைகளையும் யார் செய்வார்கள்?

நானும் கூடமாட உதவி செய்திருந்தால் அவளுக்கு சிறிதாக நேரம் மிச்சம் இருந்திருக்கும் அவள் தனது காலை உணவை சாப்பிட முடிந்திருக்கும் அவளுடைய நல்ல குணத்தைத்தானே பாராட்டினார்கள் அவள் சமையலில் மட்டுமல்ல அவளுடைய கந்தோர் வேலையிலும் திறமையானவள், என பெயர் எடுத்துள்ளாள்.

உலக விடயங்கள் அரசியல் விடயங்கள் சிறு சிறு மருத்துவ குறிப்புகள் என பல விடயங்களிலும் தேர்ந்தவளாக தான் இருக்கின்றாள் இதற்காக நான் பெருமைப் பட அல்லவா வேண்டும்? ஏன் பொறாமைப்பட வேண்டும்? நான் ஆண் என்ற மமதையா?

நான் அப்படிப்பட்டவன் அல்லவே?! இன்று ஜெயா வீட்டுக்கு வந்ததும் அவளிடம் சமரசமாக கதைத்து அவளுக்கு உதவியாக இருந்து வாழ்க்கையை சந்தோஷமாக கழிக்க வேண்டும் இரண்டு மாடுகள் சேர்ந்து இழுத்தால் வண்டி சுகமாக போகும் ஒரு மாடு மட்டும் இழுத்தால் வண்டி பழுதுதான் ஆகும், மாடும் செயலிழந்துவிடும் என எண்ணினான் சுந்தர்

**- மங்கை அரசி - யேர்மனி**



# நீரிழிவு நோயாளிகள் கிரீன் டீ குடிப்பதால் ஏற்படும் நன்மைகள்....








கிரீன் டீ முற்றிலும் ஆரோக்கியமான பானமாகும். நீரிழிவு நோயின் அறிகுறிகளை நிர்வகிப்பதில் அவற்றின் செயல்திறனுக்காக அறிவியலால் கூட ஆதரிக்கப்படுகிறது. டைப் 2 நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கிரீன் டீயின் தாக்கத்தைப் புரிந்துகொள்ள பல ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன. அவர்களில் பெரும்பாலோர் நேர்மறையான முடிவைக் காட்டியதை அறிந்து நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். கிரீன் டீ, நீரிழிவு நோயை உருவாக்கும் அபாயத்தைக் குறைக்கும் மற்றும் இரத்த சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்தவும் உதவும் என்பதற்கு இது சாட்சியாக உள்ளது.

இரத்த குளுக்கோஸ் அளவை எவ்வாறு கட்டுப்படுத்துகிறது?

கிரீன் டீ தவறாமல் உட்கொள்வது உண்ணாவிரத குளுக்கோஸ் அளவையும் உண்ணாவிரதம் இன்சுலின் அளவையும் குறைக்கிறது. அவை நீரிழிவு ஆரோக்கியத்தை அளவிட பயன்படும் இரண்டு அடிப்படை அளவுருக்கள்.கிரீன் டீயின் நன்மைகள் முக்கியமாக பாலிபினால்கள் மற்றும் பாலிசாக்கரைடுகளின் ஆக்ஸிஜனேற்ற செயல்பாடு காரணமாகும்.இந்த இரண்டு ஆக்ஸிஜனேற்றங்களும் இரத்த அழுத்த அளவை நிர்வகிப்பதிலும், உடலில் உள்ள கெட்ட கொழுப்பின் அளவைக் குறைப்பதிலும் பயனுள்ளதாக இருக்கும்.

க்ரீன் டீயினால் கிடைக்கும் பிரபலமான நன்மைகளுள் ஒன்று தான் எடை குறைய உதவும் என்பது. இது உங்கள் வளர்ச்சிதை மாற்றத்தை தூ ண்டி, எடை இழப்புக்கு உதவுகிறது. இதில் உள்ள பாலீ∴பீனால் என்னும் சத்து தான் உடல் எடையைக் குறைக்க உதவுகிறது. மேலும் மற்ற டீக்களை விட க்ரீன் டீயில் தான் ஏராளமான கேட்டசின்கள் உள்ளன.

நீரிழிவு நோயாளி ஒரு நாளில் நீங்கள் எவ்வளவு கிரீன் டீ சாப்பிடலாம் கிரீன் டீ ஆரோக்கியமானது மற்றும் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு எந்தவிதமான பக்க விளைவுகளையும் ஏற்படுத்தாது என்று ஆய்வு கூறுகிறது. ஆனால் உங்கள் உட்கொள்ளல் குறித்து நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.ஏனெனில் அதில் ஒரு சிறிய அளவு கா∴பின் உள்ளது. நீங்கள் ஒரு நாளைக்கு 2-3 முறை கிரீன் டீ அருந்தலாம்.

# கறிவேப்பிலையின் மகத்துவம்...




என்னை தூக்கி குப்பையில் வீசாதீங்க ப்ளீஸ்! கறிவேப்பிலை சொல்லும் ஆரோக்கிய ரகசியம்
சாப்பாடு தட்டில் இருந்து வயிற்றுக்குள் செல்லாமல் ஓரங்கட்டப்பட்டு குப்பைத் தொட்டிக்குள் செல்லும் பொருளாக கறிவேப்பிலை உள்ளது!
வயது வித்தியாசம் இன்றி பலரும் கருவேப்பிலையை சாப்பிடாமல் தவிர்க்கிறோம். கறிவேப்பிலைக்கு கறிவேம்பு, கறியபிலை போன்ற பெயர்களும் உள்ளன.
வெறும் வாசனைக்காக மட்டும் கறிவேப்பிலையை சமையலில் சேர்ப்பதில்லை! அதிலிருக்கும் மருத்துவக் குணங்கள் அதன் முக்கிய காரணம் என்பது உங்களுக்கு தெரியுமா?
ரத்தக்குறைவு நோயைக் குணப்படுத்த கறிவேப்பிலை உதவுகிறது. நிறைய பழங்களோடு சேர்த்து, கறிவேப்பிலை பொடியையும் சேர்த்துக் கொண்டால் குறைந்திருக்கும் ரத்த உற்பத்தி விரைவாக அதிகரிக்கும்.
கறிவேப்பிலையை அடிக்கடி பயன்படுத்தினால் உடலில் தேவையற்ற கொழுப்பு சேராது.

**தலைமுடி..**
தலைமுடி வளர்ச்சிக்கு சிறந்த உணவுப் பொருள் கறிவேப்பிலை. முடி வளர்ச்சிக்கு மட்டுமல்லாது பள்ளிப் பருவத்திலேயே உண்டாகும் இளநரைக்கும் கறிவேப்பிலை சிறந்தது.
உணவு வகைகளில் சேர்க்கப்படும் கறிவேப்பிலைகளை, உணவோடு சேர்த்து நன்றாக மென்று சாப்பிட வேண்டும். அதன் சாரம் செரிமானத் தொந்தரவுகளை சரிசெய்து செரிமான பாதையை மேம்படுத்தும்.
சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டவர்கள் அதிக மயக்கத்துக்கு ஆளாவார்கள். மேலும் கை,கால் வலி கண்பார்வை குறைபாடு உண்டாகும். இவர்கள் அடிக்கடி கறிவேப்பிலையை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

# கொய்யாப் பழத்தின் மகத்துவம்..




உயிரை பறிக்கும் நீரிழிவு நோயை ஓட ஓட விரட்டும் கொய்யா! நீரிழிவு நோய் இன்று பலரை ஆட்டிப்படைக்கும் ஆபத்து.

- மேலும் இரத்தத்தில் சர்க்கரையின் அளவை கட்டுப்படுத்தும் தன்மையும் உண்டு.
டைப் 1 நீரிழிவு நோயை விட டைப் 2 நீரிழிவு நோய் மிகவும் பொதுவானது. டைப் 2 நீரிழிவு நோயில் இரத்தத்தில் சர்க்கரை அளவை கட்டுப்படுத்துவதில் சிக்கல் உள்ளது.
- இந்த ஆபத்துக்கு ஆரம்பத்திலேயே சிகிச்சையளிக்கப்படாவிட்டால் உயிருக்கு பிரச்சினையாக முடியும்.
- உயிரை பறிக்கும் நீரிழிவு நோயை ஓட ஓட விரட்டும் கொய்யா! ' Guava Diabetes Guava Health Benefits
- பணம் செலவு செய்யாமலே நீரிழிவு நோயை கட்டுப்படுத்த முடியும். நீரிழிவு நோயை கொய்யா பழத்தினை வைத்தே விரட்டியடிக்க முடியும்.
- கொய்யா பல ஆரோக்கிய நன்மைகளை கொண்டுள்ளது. இது பல வித நோய்களுக்கு பாரம்பரிய மருத்துவமாகவும் பயன்படுத்தப்படுகிறது.
- நீரிழிவு நோயை ஓட விரட்டும் கொய்யா
கொய்யாவில் பலவகைகள் உள்ளன. இவை அனைத்தினதும் மருத்துவப் பயனும் ஒன்றாகும். இதில் அதிகளவு விட்டமின் மற்றும் தாதுக்கள் நிறைந்துள்ளன.
- குறிப்பாக நெல்லிக்கனிக்கு அடுத்த நிலையில் கொய்யாவில் தான் அதிகளவு விட்டமின் சி சத்து உள்ளது.
- நீரிழிவு நோயின் தாக்கம் கண்டாலே அதை சாப்பிடக் கூடாது இதை சாப்பிடக் கூடாது என்ற கட்டுப்பாடுகள் பாடாய்ப்படுத்தும்.
- ஆனால் நீரிழிவு நோயாளிகளுக்கு உண்டாகும் பாதிப்புகளை குறைக்க கொய்யாப்பழம் உகந்தது.
மேலும் இரத்தத்தில் சர்க்கரையின் அளவை கட்டுப்படுத்தும் தன்மையும் உண்டு.

# வாழை இலையில் சாப்பிடுவதால்!...





1- வாழை இலையில் சாப்பிடுவதால் இளநரை வராமல் தலைமுடி கருப்பாக இருக்கும்.
2- வாழை இலை ஒரு கிருமி நாசினியாகும்.
3- வாழை இலையில் தொடர்ந்து உணவு உட்கொண்டு வந்தால் தோல் பளபளக்கும்.
4- வாழையிலைச் சூட்டுக்கு ஒரு பிரத்தியேக சுவையும் மணமும் உண்டு. நன்கு பசியைத் தூண்டும்.
5- உணவிலுள்ள நச்சுக் கிருமிகளை வாழை இலை அழிக்கும் தன்மை கொண்டது
6- உடல் நலம் பெற்று ஆரோக்கியம் பெறும்.
7- மந்தம், வலிமைக் குறைவு, இளைப்பு போன்ற பாதிப்புகள் நீங்கும்.
8- அழல் எனப்படும் பித்தமும் தணியும்
9- வாழை இலையில் மேலுள்ள பச்சைத் தன்மை (குளோரோபில்) உணவை எளிதில் சீரணமடையச் செய்வதுடன் வயிற்றுப் புண்ணை ஆற்றும் தன்மை கொண்டது.
10- வாழை இலையில் உண்பவர்கள் நோயின்றி நீண்டகாலம் ஆரோக்கியத்துடன் வாழ உதவும்..


**திருமதி சௌமியா சுப்ரமணியன்**
**சென்னை - தமிழ்நாடு.**

---

**16ம் பக்க..கணக்குப்புதிர் விடை.....**

| | | | | |
|---|---|---|---|---|
| 73 | 86 | 69 | 82 | 65 |
| 66 | 74 | 87 | 70 | 78 |
| 79 | 67 | 75 | 83 | 71 |
| 72 | 80 | 63 | 76 | 84 |
| 85 | 68 | 81 | 64 | 77 |

# 2024 வரலாற்றின் மிகப் பெரிய தேர்தல் வருடம்




உலக வரலாற்றில் மிகப்பெரிய தேர்தல் ஆண்டு - 2024
உலகில் பல நாடுகளில் தேர்தல் திருவிழா நடைபெறும்.
ஜனநாயகத்தைக் காப்பாற்ற பல ஆயிரம் கோடி செலவாகப் போகின்றது...
420 கோடி மக்கள் வசிக்கும் 76 நாடுகளில் இவ்வருடம் தேர்தல்கள்.
200 கோடிக்கும் அதிகமானோர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

உலக வரலாற்றில் தேர்தல்கள் நடைபெறும் நாடுகளில் இந்த வருடம்தான் மிகக்கூடுதலான நாடுகளில் தேர்தல் நடைபெறும் என்பது உலக வரலாறாகப் பதியப்படுகின்றது. மிகப்பெரும் ஜனநாய சக்தியான தேர்தல்தான் மக்களாட்சியை நிர்ணக்கின்றது. வாக்குரிமையால் ஒரு ஆட்சியைக் கலைக்கவும் முடியும் நீண்ட ஆட்சியைக் கொடுக்கவும் முடியும். இதற்கெல்லாம் ஒரே ஒரு சக்திதான் வாக்குரிமையாகும். அப்படிப்பட்ட வாக்குரிமை அளிக்கும் மிகக்கூடுதலாக நாடுகளில் இந்த வருடம் தேர்தல் நடைபெறவுள்ளன. இந்த வருடத்தைத் தேர்தல் ஆண்டாக உலகம் பார்க்கப் போகின்றது.

ஒவ்வொரு வருடமும் உலகில் பல நாடுகளில் தேர்தல் நடைபெறுகின்றன. எனினும் இவ்வருடமானது 5 தெற்காசிய நாடுகள், அமெரிக்கா , ஐரோப்பா நாடுகள் உட்பட 76 நாடுகளில் இவ்வருடம் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்கள், உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெறும். இந்த நாடுகளில் சுமார் 420 கோடி மக்கள் வசிக்கின்றார்கள் இத்தொகை உலக சனத்தொகையில் அரைவாசிப் பேராகும். 200 கோடிக்கும் அதிகமான மக்கள் இந்த வருடம் தேர்தலகளில் வாக்களிக்கவுள்ளனர்.

தெற்காசியாவைப் பார்த்தால் இந்தியா, இலங்கை, பாக்கிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான் ஆகிய 5 நாடுகளில் இந்தவருடம் முக்கிய தேர்தல்கள் நடைபெறவுள்ளன.

- ஐரோப்பாவில் இன்று மிக முக்கிய நாடாகக் கருதப்படும் ரஷ்ஷியாவில் மார்ச் 15 முதல் 17 வரை ரஷ்ஷியாவின் ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் விளாடிமிர் புடின் 5 வது தடவையாக அப்பதவிக்குவரப் போட்டியிடுகின்றார்.
- அமெரிக்காவின் ஜனாதிபதி தேர்தல் இவ்வருடம் நவம்பர் 5ம் கிகதி நடைபெறவுள்ளது. முன்னாள் ஜனாதிபதி டொனால் ட்றம் மீண்டும் போட்டியிட முயற்சித்து வருகிறார். 31.01.2024வரை முடிவு எட்டப்படவில்லை. 16 கோடி மக்கள் இதில் வாக்களிக்கவுள்ளனர்.
- பிரித்தானியாவின் பாராளுமன்ற பதவிக்காலம் டிசம்பர் 17ம் திகதி முடிவடைகின்றது. பெரும்பாலும் 2024 டிசம்பரில் தேர்தல் நடைபெறலாம்.
- யூன் 6 முதல் 9 வரை ஐரோப்பிய பாராளுமன்றத் தேர்தல் நடைபெறும். இந்த ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் 27 நாடுககளின் மக்கள் இதில் வாக்களிப்பர். 720 ஆசனங்களுக்காக 40 கோடிக்கும் அதிகமான மக்கள் வாக்களிப்பார்கள்.

தேர்தல் நடைபெறுவது எந்த நாடுகள் எனப் பார்ப்போம்...
ஜனவரி - 2024
07 - பங்களாதேஷ் பாராளுமன்றத் தேர்தல்
11 - செயின்ற் மார்ட்டின் நாடு பாராளுமன்றத் தேர்தல்
13 - தாய்வான் ஜனாதிபதி , பாராளுமன்றத் தேர்தல்
14 - கொமோரோஸ் நாடு ஜனாதிபதி தேர்தல்
21 - லிஸ்ரன்டைன் உலகின் சிறியநாடு சர்வஜன வாக்கெடுப்பு
26 - துவாலு நாடு ஜனாதிபதி தேர்தல்
28 - பின்லாந்து ஜனாதிபதி தேர்தல்
பெப்ரவரி - 2024
04 - எல்சல்வடோர் நாடு ஜனாதிபதி , பாராளுமன்றத் தேர்தல்
07 - அஸர்பைஜான் ஜனாதிபதி தேர்தல்
08 - பாக்கிஸ்தான் பாராளுமன்றத் தேர்தல்
14 - இந்தோனிஷியா ஜனாதிபதி , பாராளுமன்றத் தேர்தல்
25 - பெலாருஸ் பாராளுமன்றத் தேர்தல்
25 - செனகல் ஜனாதிபதி தேர்தல்
மார்ச் - 2024
01 - ஈரான் பாராளுமன்றத் தேர்தல்
08 - அயர்லாந்து சர்வஜன வாக்கெடுப்பு
10 - போத்துக்கல் பாராளுமன்றத் தேர்தல்
15-17 - ரஷ்ஷியா பாராளுமன்றத் தேர்தல்
ஏப்ரல் - 2024
10 - தென்கொரியா பாராளுமன்றத் தேர்தல்
மே - 2024
05 - பனாமா ஜனாதிபதி , பாராளுமன்றத் தேர்தல்
12 - லிதுவேனியா ஜனாதிபதி தேர்தல்
19 - டொமினிக்கன் குடியரசு ஜனாதிபதி , பாராளுமன்றத் தேர்தல்
யூன் - 2024
01 - ஐஸ்லாந்து ஜனாதிபதி தேர்தல்
02 - மெக்ஸிக்கோ ஜனாதிபதி தேர்தல்
09 - பெல்ஜியம் பாராளுமன்றத் தேர்தல்
22 - மௌரிடானியா நாடு ஜனாதிபதி தேர்தல்
28 - மொங்கோலியா பாராளுமன்றத் தேர்தல்
யூலை - 2024
15 - 16 - ருவண்டா ஜனாதிபதி தேர்தல்
அக்டோபர் - 2024
09 - மொசாம்பிக் ஜனாதிபதி , பாராளுமன்றத் தேர்தல்
27 - உருகுவே ஜனாதிபதி , பாராளுமன்றத் தேர்தல்
நவம்பர் - 2024
05 - அமெரிக்கா ஜனாதிபதி , பாராளுமன்றத் தேர்தல்
12 - பலாவ் நாடு ஜனாதிபதி , பாராளுமன்றத் தேர்தல்

இவற்றில் சில நாடுகளை பலருக்குத் தெரிந்திராத பல இருக்கலாம். குட்டி நாடுகள், குட்டித்தீவு நாடுகள் என்பனவும் அடங்குகின்றன.

இவ்வருடம் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களுக்குத் திகதி இன்னும் குறிப்பிடாத நாடுகள்...
1) இந்தியா 2) இலங்கை 3) அல்ஜீரியா 4) ஆஸ்திரியா 5) பொட்ஸ்வானா 6) சாட் 7) குரோஸியா 8) கபோன் 9) ஜோர்ஜியா 10)கானா 11) கரிபாட்டி 12) லித்துவேனியா 13) மோல்டோவா 14) நமீபியா 15) வடமெஸிடோனியா 16) ருமேனியா 17) சான்மரினோ 18) ஸ்லோவாக்கியா 19) சொலமன்தீவுகள் 20) தென்ஆபிரிக்கா 21) தென்சூடான் 22) டோகோ 23) பிரித்தானியா 24) உஸ்பெகிஸ்தான் 25) வெனிசூலா.
நமது தாய்நாடான இலங்கையிலும் தேர்தல் நடைபெறும் ஆண்டாக இந்த 2024 இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எப்படியும் ஜனாதிபதி தேர்தல் கட்டாயம் இந்த ஆண்டு செப்டெம்பர் அல்லது அக்டோபர் மாதம் நடைபெறும் என அரசியல் சட்டம் வலியுறுத்துகின்ற படியால் நடைபெறும் என எதிர்பார்க்கலாம். அடுத்துபாராளுமன்றத் தேர்தல், மாகாண சபைத்தேர்தல், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் என இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
2024 இந்த வருடம்தான் உலக சரித்திரத்தில் அதிகூடிய நாடுகளில் தேர்தல் நடைபெறப்போகின்றது என்பது குறிப்பிடத்தக்க விடையமாகும்.

---

## Tennis - Australien Open - 2024
### அவுஸ்திரேலியா பகிரங்க ரெனிஸ் போட்டி - 2024

31 லட்சத்து 50 ஆயிரம் அவுஸ்.டொலர்களை அள்ளிச் சென்றவர்கள்..
இந்தியர் ஒருவர் இரட்டையர் பிரிவில் முதன் முறையாக வெற்றி..
வரலாற்றுச் சாதனை படைத்த 46 வயது இந்தியர்..
அவுஸ்திரேலிய 119 வருட ரெனிஸ் வரலாற்றில் முதன்மறையாக இந்திய வீரது ஒருவர் இரட்டையர் ரெனிஸ் பிரிவில் வெற்றி பெற்று முதன் முதலாக இந்தியரான பூபண்ணா ரோகன் (Bopanna Rohan) என்பவர் வெற்றி பெற்ற வரலாற்றுச் சாதனையைப் பதிவு செய்திருக்கிறார்.
அவுஸ்திரேலிய வீரரான எப்டன் மத்தேவ் ( Ebden Matthew) என்பவருடன் சோடி சேர்ந்து விளையாடி இத்தாலி வீரர்களை 7 - 6, 7 - 5 என்ற செட்கணக்கில் தோற்கடித்து பரிசுப்பணமான 7 லட்சத்து 30 ஆயிரம் அவுஸ்.டொலர்களைப் பகிர்ந்து கொண்டுள்ளனர். முயற்சியும் உழைப்பும் இருந்தால் வெற்றி நிட்சயம் என்பதை தனது 46 வயதில் வெற்றிபெற்று நிருபித்திருக்கிறார் இந்த இந்திய வீரர்.
உலகில் நடைபெறும் விளையாட்டுகளில் முக்கிய விளையாட்டாகக் கணிக்கப்படும் ரெனிஸ் போட்டியானது அவுஸ்திரேலிய வரலாற்றில் 1905ம் ஆண்டு ஆரம்பமானது. 119 வது வருடங்களாக நடைபெறும் இப் போட்டியானது இந்த ஆண்டின் போட்டி 07.01.2024 தொடக்கம் 28.01.2024 வரை நடைபெற்று முடிந்தது.
உலகில் நடைபெறும் ரெனிஸ் போட்டிகளில் வெற்றியாளர்களுக்கு மிக அதிக பணப்பரிசும் மிக அதிக புள்ளிகளும் வழங்கப்படுவது கிறாண்ட்ஸ்லாம் (GrandSlam) என்று அழைக்கப்படும் Australin Open, French Open, Wimbledon, US Open என நான்கு போட்டிகளாகும்.






இப்போட்டியில் கிண்ணத்தை வென்றவர் 31.50.000 அவுஸ்திரேலிய டொலர்களையும் தோற்றவர் 17.25.000 அவுஸ்.டொலர்களையும் அள்ளிச் சென்றனர். அது மட்டுமல்லாமல் வெற்றிக் கிண்ணங்களும் வென்றவருக்கு 2.000 புள்ளிகளும் தோல்வியடைந்தவருக்கு 1.300 புள்ளிகளும் வழங்கப்பட்டன.
ஆண்கள், பெண்கள், சோடிகள், ஆண்-பெண் கலவன் போட்டிகள், மாற்றுத் திறனாளிகள், இளையோர்கள் எனப் பல்வேறு போட்டிகளுக்குமாக 8 கோடியே 65 லட்சம் அவுஸ்.டொலர்கள் மொத்தமாகப் பணப்பரிசாக வழங்கப்பட்டன.
2024-1-28ல் முடிவடைந்த அவுஸ்திரேலிய பகிரங்கப் போட்டியின் முடிவுகளைப் பார்ப்போம்...

**பெண்கள்:-**

பெண்கள் ரெனிஸ் இறுதிப் போட்டியில் உலக தரவரிசையில் 12 வது இடத்திலிருந்த சீனாவின் வீராங்கனை (21 வயது) குன்வீன் ஷெங் ( Qinwen Zheng ) பெலறுஸ் நாட்டைச் சேர்ந்த (25 வயது) சபலென்காவும் (Sabalenka Aryna) மோதிக்கொண்டதில் 6 - 3, 6 - 2 என்ற செட்கணக்கில் சபலென்கா வெற்றி பெற்று வெற்றிக் கிண்ணத்தையும் 31லட்சத்து 50 ஆயிரம் அவுஸ். டொலர்களையும் பெற்றுக் கொண்டார். தோல்வியடைந்தவர் 17 லட்சத்து 25 ஆயிரம் அவுஸ். டொலர்களையும் பெற்றுக்கொண்டார்.
கடந்த ஆண்டிலும் (2023) சபலென்காதான் இந்தக் கிண்ணத்தைப் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்க விடையமாகும்.

**ஆண்கள்:-**

உலக தரவரிசையில் 1ம் இடத்தில் இருந்த நோவாக் டியக்கோவிச்சும் 2ம் இடத்திலிருந்த அல்காரஸ் இருவரும் அரை இறுதிப் போட்டியில் தோல்வியடைய 3ம் இடத்திலிருந்த ரஷ்ஷிய வீரர் டானியல் மெட்வேடவ்வும் (28 வயது) (Daniil Medwedew) 4ம் இடத்தில் இருந்த இத்தாலிய வீரர் (23 வயது) சின்னர் ஜெனிக்கும் (Sinner Jennik) மோதினர். போட்டி மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றதில் 6 - 3, 6 - 3, 6 - 4, 6 - 4, 6 - 3 என்ற செட்கணக்கில் சின்னர் ஜெனிக் வெற்றி பெற்றார். வெற்றி பெற்றவர் வெற்றிக் கிண்ணத்தையும் 31 லட்சத்து 50 ஆயிரம் அவுஸ்.டொலர்களையும் தோல்வியடைந்தவர் 17 லட்சத்து 25 ஆயிரம் அவுஸ். டொலர்களையும பெற்றுக் கொண்டனர்.
இவ் வெற்றியானது சின்னர் ஜெனிக்கு புகழ்பெற்ற முதலாவது கிராண்ட்ஸ்லாம் கிண்ணமாகும். (GrandSlam)

# யேர்மனிய தமிழ்பெண் எழுத்தாளர்கள் விபரம்..

- தொகுப்பு சாந்தினி துரையரங்கன் -

## யேர்மனி தமிழ்ப் பெண் எழுத்தாளர்கள்... தொடர்ச்சி - 32



### பெயர் - திருமதி நகுலா சிவநாதன்

| | | |
|---|---|---|
| பிறப்பு | - | யாழ் சிறுப்பிட்டி , 04.02.1961 |
| தந்தை, தாய் | - | இராமலிங்கம், நல்லபிள்ளை |
| கல்வி | - | ஆரம்ப பாடசாலை- புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக்கல்லூரி |
| மேற்படிப்பு | - | யாழ் வேம்படி மகளிர்கல்லூரி |
| பட்டப்படிப்பு | - | அண்ணாமலை பல்கலைக்கழகம் |
| தொழில் | - | ஆசிரியர்- நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி |
| புலப்பெயர்வு | - | 1990ம் ஆண்டு யேர்மனிக்குப் புலம்பெயர்ந்து |
| கணவன் | - | திரு சிவநாதன் சின்னத்துரை |
| பிள்ளைகள் | - | செல்வன் ஷஹீகன் , செல்வி ஷஹீகா |
| படைப்பு | - | கவிதை, கட்டுரை, பாடநூல்கள் |
| செயற்பாடு | - | பட்டிமன்ற ஒருங்கமைப்பாளர் நடுவர், கவியரங்க ஒருங்கமைப்பாளர் நடுவர், நிகழ்ச்சி தொகுப்பாளர், பேச்சாளர். |

இளவயதில் இருந்தே ஆர்வத்துடன் படித்து எழுதும் ஆற்றல் மிக்கவர். 9 வயதில் பாடசாலையில் முதலாவது கவிதை மெதேன் வாயுபற்றி... எழுதி முதற்பரிசு கிடைத்தது என்கின்றார். ஈழத்தில் வாழும் காலமதில் விஞ்ஞான ஆசிரியராக கடமையாற்றிய போது புலம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது.
இவரின் செயற்பாடுகள் - தமிழ் பாடசாலைகள்

| | | |
|---|---|---|
| 1990 | - | புலப்பெயர்வில் ஆசிரியர் 1990 முதல் டோட்முண்ட் கரிதாஸ் தமிழ்ப்பாடசாலை, யேர்மனி தமிழ்க் கல்விச்சேவை. |
| 1992 | - | செல்ம் நகர தமிழ்ப்பாடசாலை |
| 2003 | - | தமிழாலயம் டோட்முண்ட் |
| 2015 | - | சுவேற்றா தமிழாலயம் |

இவரின் எழுத்து வெளிப்படும் பத்திரிகைகள்.

யேர்மனியில் வெளிவந்த கலைவிளக்கு, ஏலையா, கடல், தேனீ, போன்ற சஞ்சிகைகளில் எழுதியுள்ளார். மண், ஈழநாடு , வீரகோசரி ,வெற்றிமணி, தமிழன், அட்சயா, கனடா உதயன், தமிழ்ரைம் போன்றவற்றிலும் எழுதி வந்திருக்கிறார்.

இலண்டன் தமிழ் வானொலி, பாமுகம் இணையதொலைக்காட்சியில்கட்டுரைகள், ஆயிரக்கணக்கான கவிதைகள், இலக்கிய கட்டுரைகள் என எழுத்துவதுடன் ""குடும்பம் குவலயம்"" என்ற வாராந்த நிகழ்வை 956 வாரங்கள் தொகுத்து வழங்கி வருகின்றார். வியாழன் தோறும் கவிதைத் திறனாய்வு , மாதம் தோறும் பெரியவர்கள், இளையவர்களை இணைத்து விவாத அரங்கு 35 நிகழ்வுகளையும் தொடர்ந்து செய்து வருகின்றார்.

அமெரிக்க முத்தமிழ் தொலைக்காட்சியில் கடந்த 2 வருடங்களாக பட்டிமன்றம், ஆய்வரங்கு தலைமை ஏற்று இதுவரை 20 பட்டிமன்றம் 18 ஆய்வரங்கம் எனத் தொடர்கின்றார்.

300 பன்னாட்டு கவியரங்குகளில் பங்குபற்றியுள்ளார்.இந்தியாவின் சில கல்வியல் கல்லூரிகளுக்கு 26 கருத்தரங்கு மாதம் தோறும் செய்து வருகின்றார்.

புலம்பெயர் சிறார்களுக்கு இரண்டு ஆண்டுகளாகத் திருக்குறள் வகுப்பு நடாத்தி திருக்குறள் ஒழுக்க முறைகள் போன்றவற்றை கற்பித்து வருகின்றார்.

செல்ம் நகரில் விளையாட்டுக் கழகத்தை ஆரம்பித்து 20 வருடமாக சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டி நடாத்தி வருகின்றார்.

மேலும் தாயகச்சூழலில் வறுமைக்கோட்டில் இருக்கும் சிறார்களுக்கு கல்விக்கு உதவி செய்து வருகின்றார்.

இவர் எழுதி வெளியிட்ட படைப்புகள்...

1994 - தமிழ் ஆண்டு 1 - 1995 - தமிழ் ஆண்டு 2

1996 - தமிழ் ஆண்டு 3 - 1997 - தமிழ் ஆண்டு 4

பாடப்பயிற்சி புத்தகங்கள்

2000 -சிறுவர்வளர்ப்பில் சிறப்பான வழிமுறைகள்

2002 -மழலைகளுக்கான பாடல்கள் 2003-அன்னை வளர்ப்பில் அரும்புகள்

2004 -முனைப்புடன் எழு " (கவிதைநூல்) யாழ் பல்கலைக்கழக வெளியடு

2006 -பூக்கள் விடும் பட்டம்

இலண்டன் தமிழ் வானொலியில் 65 பிள்ளைகளுக்கு கவிதை எப்படி எழுத வேண்டுமென காட்டி பிள்ளைகளை எழுத வைத்து ஆக்கிய தொகுப்பு நூல் 2010அறிவியல் நோக்கில் இளையோர் வாழ்வியல் நூல்.

சென்னை புத்தக கண்காட்சி வெளியீட்டில் வெளியிடப்பட்டது. இதற்கு சிறுவர் இலக்கிய விருதும் கிடைத்தது. இதை இயக்குனர் பாரதிராஜா வெளியீடு செய்தார்.

2015 - தன்னம்பிக்கையூட்டும் அனுபவமொழிகள் “

இது யாழ் தாவடி தமிழ்க்கலவன் பாடசாலையில் வெளியிடப்பட்டது

2018 - நதிக்கரை நினைவுகள் “கவிதைநூல் சென்னைநிலாமுற்ற வெளியீடு

2024 - விருத்தமழை “ கவிதை நூல்.- யேர்மனி டோர்முண்ட்

இவருக்கு கிடைத்த விருதுகள் :- முகநூல் கவிதை குழுமங்கள், தமிழ் கல்விக்கழகம், தொலைக்காட்சிகள் போன்ற தமிழ் அமைப்புகள் மூலம் பற்பல பாராட்டுக்கள், விருதுகள் பெற்று வருகின்றார். கவிதைகளுக்காக 50 மேற்பட்ட விருதுகளை பெற்றுள்ளார். தமிழ் கல்வி கற்பிப்பதற்றாகவும் கௌரவங்கள் விருதுகள் பெற்றமை இவரின் செயற்திறன்களை எடுத்துக்காட்டுகின்றன.

சில விருதுகள்.............

2008 - தமிழ்மணி - உலகத்தமிழ் பண்பாட்டுக்கழகம் யேர்மனி

2013 - தமிழ்வாரிதி- தமிழ்க்கல்விக்கழகம் யேர்மனி

2013 - 1000 கவிதைகளுக்கான சிறப்பு விருது - இலண்டன் தமிழ் வானொலி

2017 - வெற்றிமணிப்பத்திரிகை விருது யேர்மனி

2017 - கவிநிலா - நிலாமுற்றம்

2018 - கவிக்சோலை - நிலாச்சோறு

கவிஅரிமா - சிவா கவிதைப்பெட்டகம்

2018 - நட்சத்திர கவிதை விருது – Cyos குழுமம்

2018 - தமிழ்மாணி - தமிழ்க்கல்விக்கழகம் யேர்மனி

2019 - நல்லாசிரியர் - நிலாமுற்றம்

2019 - நிலவின்பேரொளி - நிலாமுற்றம்

2023 - 33 ஆண்டு நிறைவைப் பாராட்டி தங்கப் பதக்கம் அணிவித்து பாராட்டு - யேர்மனி கல்விக்கழகம்

யேர்மனியில் வெள்ளிவிழாக்கண்டபெண் எழுத்தாளராக இவர் விளங்குகின்றார். இவர் பல்வேறு ஆளுமைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளார். இவரின் கடும் முயற்சி, இடைவிடாத தேடல், சுறுசுறுப்பு, உழைப்பு என்பவற்றுடன் கணவன்,பிள்ளைகளின் ஒத்தாசை, போன்ற காரணங்கள் இவரின் வளர்ச்சிக்குக் தூண்டுதலாக உள்ளன.

துணிந்து எல்லாவற்றையும் முன் வந்து செய்யும் ஆற்றலும் இவரிடம் உள்ளது. இவரின் பிரதிபலிப்பாக மகள் ஷரீகாவும் தமிழ் மொழிசார்ந்து சிறப்புடன் பல மேடைகளில் அலங்கரிப்பது வழிபடுத்தலை எடுத்துக்காட்டி நிற்கின்றது. மென்மேலும் ஆசிரியரின் பணிகள் தொடரவும் இலக்கிய உலகிற்கு பல புதிய படைப்புக்களை தந்து மகிழவும் வாழ்த்தி மகிழ்கின்றோம். வளமுடனும் நலமுடனும் வாழ்க வாழ்க பல்லாண்டு.

# Top -10

Top - 10 கணனித்தேடலுக்கு உதவியவர் எனது பேரப்பிள்ளை செல்வி லேயா அமலா பிராங்ளின் (9 வயது) அவருக்கு நன்றிகள்...

**உலகில் தற்போது அதிகாரம் மிக்க பெண்மணிகளாகத் திகழும் முதல் பத்துப் பெண்மணிகள்...**

| | | |
|---|---|---|
| 01- Ursula Von der Leyen | - Germany | - ஐரோப்பிய யூனியன் தலைவர் |
| 02- Christine Lagarde | - France | - ஐரோப்பிய மத்திய வங்கி தலைவர் |
| 03- Kamala Harris | - U.S.A | - அமெரிக்கா உப ஜனாதிபதி |
| 04- Marry Barra | - U.S.A | - நிறைவேற்று அதிகாரி Genaral Motors |
| 05- Abigail Johnson | - U.S.A | - நிறைவேற்று அதிகாரி - Fidelity முதலீட்டு நிறுவனம் |
| 06- Melinda Gates | - U.S.A | - நிறைவேற்று அதிகாரி - Bill Gates |
| 07- Giorgia Meloni | - Italy | - பிரதமர் - இத்தாலி |
| 08- Karen Lynch | - U.S.A | - நிறைவேற்று அதிகாரிஅமெரிக்கா CVS-American healthcare company |
| 09- Julie Sweet | - U.S.A | - நிறைவேற்று அதிகாரி அமெரிக்க Chaie and Accenture |
| 10- Jane Fraser | - U.S.A | - நிறைவேற்று அதிகாரி அமெரிக்கா City Group Bank |

# Top - 10

**உலகில் தற்போது பணக்காரப் பெண்மணிகளாகத் திகழும் முதல் பத்துப் பெண்மணிகள்...**

| | | | |
|---|---|---|---|
| 01- Francoise Bettencourt Mayers & Family | - France | - 71.4 | பில்லியன் டொலர் |
| 02- Alice Walton | - U.S.A | - 68.0 | " |
| 03- Mackenzie Scott | - U.S.A | - 54.9 | " |

| | | | |
|---|---|---|---|
| 04- Julia Kock & Family | - U.S.A | - 44.9 | " |
| 05- Yang Huiyan & Family | - China | - 31.4 | " |
| 06- Jacqueline Mars | - U.S.A | - 28.9 | " |
| 07- Susanne Klatten | - Germany | - 25.8 | " |
| 08- Zhong Huijuan | - China | - 23.5 | " |
| 09- Laurene Powell Jobs Family | - U.S.A | - 22.1 | " |
| 10- Iris Fontbona & Family | - Chile | - 21.0 | " |

## Top-10

புகழ்பெற்று வாழ்ந்து கொண்டிருக்கும் பெண்மணிகள்...

இன்று உலகில் எத்தனையோ புகழ்பெற்ற பெண்மணிகள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அரசியல், சமூகம், விஞ்ஞானம், பொருளாதாரம், விளையாட்டு, கல்வி எனப் பல்வேறு துறைகளில் புகழ்பெற்று வாழ்பவர்களில் தற்போது முதல் பத்து இடங்களைப் பிடிப்பவர்களை இங்கு பார்ப்போம்...

01- Angela Merkel - 17.07.1954 - Germany - முன்னாள் கான்சிலர் (நாட்டின் அதிபர்) (Chancellor)

02- Aung San Suukyi - 19.06.1945 - Mianmar - முன்னாள் ஜனாதிபதி, சமாதான நோபல் பரிசு வெற்றியாளர்.(Politician and Nobel Peace Prize Winner)

03- Malala Yousafzai - 12.06.1997 - Pakistan - சமூகஆர்வலர்,சமாதான நோபல் பரிசு வெற்றியாளர்.(Activists and Nobel Peace Prize Winner)

04- Mary Kom - 01.03.1983 - India -குத்துச்சண்டை வீராங்கனை. (Boxer)

05- Michella Obama - 17.01.1964 - USA - வழக்கறிஞர், அமெரிக்க முதல்பெண்மணி. (Layer and First Lady)

06- Steffi Graf - 14.07.1969 - Germany -ரெனிஸ் விளையாட்டு வீராங்கனை.(Tennis Player)

07- Von der Leyen - 08.10.1958 - Germany - ஐரோப்பிய யூனியன் நாடுகளின் தலைவர். ( President European Union)

08- Manal al Sharif - 25.04.1979 - Saudi Arabia - பெண்கள் உரிமைவாதி. (Women Activists)

09- Margaret Hamilton - 17.08.1936 - USA - கணனி தொழில் நுட்ப விஞ்ஞானி.

(Computer Scientist)

10- Sonita Alizadeh - 11.11.1996 - Afghanistan - பாடகி (Rapper)

# Top-10

உலகில் புகழ்பெற்று வாழ்ந்து, இறந்த பெண்மணிகள்...
உலகில் எத்தனையோ புகழ்பெற்ற பெண்மணிகள் வாழ்ந்தார்கள் என்பது வரலாறாகும். அரசில், சமூகம், விஞ்ஞானம், பொருளாதாரம், விளையாட்டு, கல்வி எனப் பல்வேறு துறைகளில் புகழ்பெற்று வாழ்ந்தவர்களில் இன்றும் பேசப்படுபவர்களில் முதல் பத்து இடங்களைப் பிடிப்பவர்களை இங்கு பார்ப்போம்...

01- Florence Nightgale - 12.05.1820 - 13.08.1910 - England
( உலக தாதியர் வேலையின் ஆரம்பகர்த்தா )
02- Kate Sheppard - 10.03.1847 - 13.07.1934 - Newzealand
( பெண்கள் உரிமைவாதி )
03- Lahshmi Bai - 19.11.1828 - 18.06.1958 - India
( ராணி, போர் வீராங்கனை )
04- Margaret Thatcher - 13.10.1925 - 08.04.2013 - England
( இங்கிலாந்தின் பிரதமர், இரும்புப் பெண்மணி )
05- Maria Montessori - 31.08.1870 - 06.05.1952 - Italy
( மருத்துவர், கல்வியாளர். சிறுவர்பாடசாலை ஆரம்பகர்த்தா )
06- Marie Curie - 07.11.1867 - 04.07.1934 - Poland
( இயற்பியலாளர், நோபல் பரிசு வெற்றியாளர் )
07- Anna Politkowskaya - 30.08.1958 - 07.10.2006 - Russia
( பிரபல ஊடகவியலாளர் )
08- Indra Gandhi - 19.11.1917 - 31.10.1984 - India
( இந்தியப் பிரதமர் )
09- Srimavo Bandaranayaka - 17.04.1916 - 10.10.2000 - Srilanka
( இலங்கைப் பிரதமர், உலகின் முதல் பெண் பிரதமர் )
10- Kleopatra - 0069 (fp.K)- 12.08.30(fp.gp) - Egypt
( உலகப் பேரழகி, அரச கும்பப் பெண்மணி )

# பெண்!.... (சிறுகதை)

- கீதா பரமானந்தன் -

அன்பு , அமைதி, பொறுமை என்னும் இயல்புகளுடனே வலம்வருகின்ற ஓர் பிறவிபெண். இவள் போதி மரத்தின் கீழ் வாழ்பவளல்ல இவளுக்கும் ஆசாபாசங்கள், கோபம் தாபம் என்னும் அத்தனை உணர்வுகளும் உண்டு. ஆனால் அவைமறுக்கப்படுகிறது அல்லது புதைக்கப்படுகிறது என்பது மறுக்கமுடியாதஉண்மையாகவே இன்றுவரை தொடர்கிறது. இதற்குள்ளாகத் தொடரும் போராட்டத்தினூடே,பெண்கள் சாதனையாளர்களாய் நின்று தங்களை நிரூபிக்கிறார்கள்.

"மங்கையராய்ப் பிறப்பதற்கு மாதவம் செய்திட வேண்டும்" தேசிகவிநாயகம்பிள்ளை அவர்கள் கூற்று வெறும் வாய் ஜால வார்த்தையே.பெண்பிறவி எப்போதும் வேதனைக் கூட்டிற்குள் வாழ்பவளே! ஆனால் அன்றும், இன்றும் நெருப்புக்குள்நின்றும் அவள் குளிர் நிலவாக தண்ணொளி வீசப் போராடுகிறாள். அன்றைய பெண்களும் சாதனைகள் படைதிருப்பதை நாம் இலக்கியங்களில்கண்டிருக்கிறோம்.

தசரதன் போரில் அம்பு பட்டுத் தேர்த்தட் டில் வீழ்ந்துவிடும்போது,தேரைச் செலுத்தி படைகளிடம் போராடித் தசரதனைக் காப்பாற்றியகதையும் , இன்னும் வேலு நாச்சியார் தொடங்கி, எங்கள் நாட்டின்விடுதலைப்போரில் படைநடத்திய அங்கயற்கண்ணி போன்ற மங்கையர் வரலாறும் நாம் கண்டும் கேட்டும் இருக்கிறோம். "வளைவில்லா நதியேது வலியில்லாவாழ்வேது" என்னும் பாடல் வரிகளுக்கேற்ப எத்தனை போராட்டங்கள் தடைகள் மன வேதனைகளை தாண்டியே வரலாறானார்கள்.

புலப்பெயர்வில் பெண்கள் முன்னர் அறியாத தொழில்களிற் தம்மை ஈடுபடுத்தி வருவாயைத் தேடிக் குடும்பத்திற்கும் , தம் பெற்றோருக்கும் உறவுகளுக்கும்உறுதுணையாய் இருப்பதோடு தம் பிள்ளைக்களையும் உயர்ந்த நிலையில்உருவாக்கியிருக்கி இருக்கிறார்கள். தாங்கள் படைப்பாளிகளாகவும்இலக்கியதாரிகளாகவும்,தொழில்துறை முதலாளிகளாகவும் முன்னேறிஇருப்பதைக் கண்கூடாக காண்கிறோம்.

இப்போது பெண்கள் நிம்மதியையும் நிறைவையும் அடைந்தார்களா?என்றால் இல்லை என்பதே பதிலாக உள்ளது. இங்கே ஒரு பெண் இன்னும் ஆணாதிக்கத்திற்குள்ளேயே உலாவருகிறாள் என்பதை வலியுறுத்துவதற்காக ஒருசிறு உதாரணத்தைச் சுட்டிக்காட்டுகிறேன். அன்றிலிருந்து இன்றுவரை நாளாந்தம்வீடுகளில் பெண்களே சமையல் செய்கிறார்கள். பல திறன்களைக் காட்டுகிறார்கள், ஆனால் பெரிய சமையல் தொழிலகங்களில் எங்காவது பெண்கள் தலைமைச்சமையலாளராக உள்ளார்களா?

நவநாகரிக உலகமென்கிற இக்காலத்திலும் பெண் என்பவள்.பச்சைக்குழந்தையோ,குமரியோ, மூதாட்டியோ, பாதுகாப்பற்ற சூழலிலேயே உலவுகிறாள். அவளுக்கு தனியே உலகின் எந்த மூலைக்கும் செல்வதற்குக் கடவுச்சீட்டுவழங்கப்பட்டிருக்கிறது, ஆனால் நள்ளிரவில் தனியே செல்வதற்குவழியிருக்கிறதா? ஓடும் தொடருந்திலும், பேருந்திலும்

மண் விளையாடும் பூங்காவிலுமே அவளுக்கு பாதுகாப்பில்லா நிலையே. வல்லூறுகள் அவளைச் சுற்றிநின்று வன்கொடுமை செய்து உயிர்பறிக்கும் காட்டுமிராண்டிக் காலமாகவே பெண்ணின் நிலை தொடர்கிறது.இதனால் பிள்ளைகளை வெளியே அனுப்பி அவர்கள் திரும்பி வரும்வரை தாய் வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு இருக்கிறாள்.

இது மட்டுமா உருவக் கேலி,, உடைக்கேலி என்பவற்றால் அவள்மேலிடத்தில் இருந்த போதும் மனவேதனையையும் , அவமானத்தையுமே சந்தித்து நிம்மதி இழந்து தவிக்கிறாள் இந்த நிலை எப்போது மாறும்? அவளுக்கு தனியே உலகின் எந்த மூலைக்கும் செல்வதற்குக் கடவுச்சீட்டு வழங்கப்பட்டிருக்கிறது, ஆனால் நள்ளிரவில் தனியே செல்வதற்கு வழியிருக்கிறதா? இதனால் பிள்ளைகளை வெளியே அனுப்பி அவர்கள் திரும்பி வரும்வரை தாய் வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு இருக்கிறாள்.இந்த நிலை எப்போது மாறும்?

இதற்கும் மாற்றம் பெண்களிடமே ஆரம்பிக்க வேண்டும் என்றேநானெண்ணுகிறேன். ஆணுக்கு விளையாட்டுப் பொருட்களைத் தெரிவுசெய்கின்றபோது வீரமானதும் , விவேகமானதுமான பொருட்களை வாங்கித் தந்தும், பெண்ணுக்குப் பொம்மைக்களையும் கலைநுட்ப பொருட்களை வாங்கித்தருவதுமான செயல்கள் மாற்றப்பட வேண்டும் .அவளுக்குள்ளும் வீரமும் விவேகமும் இருப்பதை உணர்த்தவேண்டும்.

"முறமெடுத்துப் புலிவிரட்டியவள் பெண்" என்னும்கதைகள் வளரும் பெண்களும் அச்சமின்றி வளரவேண்டும் என்பதை உணர்த்தும்பொருட்டே தொடர்கிறது.ஆண் குழந்தையையும் பெண் குழந்தையையும்பேதமின்றி வளர்க்க வேண்டும். அப்போதே பெண்ணை அவள் உணர்வை மதிக்கும்பக்குவம் ஆணுக்குள் ஏற்படும்.

மாற்றம் ஒன்றே மாறதது எனவாழ்வியலில் பலமாற்றங்கள் தோன்றியபோதும், இன்றுவரை பெண்கள், குழந்தைகளைக் குடும்பத்தைப் பேணுவதற்காகப் பகுதிநேர வேலைகளுக்கே செல்கிறார்கள். இதில் ஐரோப்பியப் பெண்களுக்கும்அடங்குவர் . இதனால் மூப்புக் காலத்திலும் பெண்கள் வருமானத்திற்காக இன்னொருவரைச் சார்ந்தே இருக்க வேண்டி உள்ளது. இந்த நிலைமைகள் மாறவேண்டும்.

மங்கையர்களும் சமுதாயத்தின் அடக்குமுறைகளிலிருந்து விடுபட்டு சுதந்திரமென்பதன் அர்த்தத்தை , உணர்ந்து மன நிறைவோடு வாழவேண்டும். என்அம்மாவுக்குக்கிடைக்காத நடைமுறைகள் எனக்குக் கிடைத்திருப்பதால் மட்டுமேபெண் அடக்குமுறை ஒழிந்துவிட்டது எனக்கூற முடியாது. அமெரிக்காவில் தானாம்பெண்களுக்கெதிரான வன்முறைக் கொலைகள் அதிகம் இடம்பெறுகிறதாம்.

**தொடர்ச்சி 37ம் பக்கம்**



## 1,00.008 - வடைகள்

**( ஒரு லட்சத்து எட்டு) வடை மாலையில் ஆஞ்சிநேயர் அலங்காரம்...**

இந்தியா - தமிழ்நாட்டில் அனுமன் ஜெயந்தியையொட்டி கடந்த 2024 தை மாதம் ஒரே கல்லிலான 18 அடி உயரம்கொண்ட நாமக்கல் ஆஞ்சநேயர் சுவாமிகளுக்கு 1 லட்சத்து 8 வடை மாலைகள் அணிவிக்கப்பட்டு அலங்காரம் செய்யப்பட்டது. இதனை நீண்ட வரிசையில் காத்திருந்து பக்தர்கள் தரிசனம் செய்தனர். இதுவும் ஒருவகைப் பக்திதான்.




## சுசீலாவுக்கு டாக்டர் பட்டம்

இந்தியாவின் பிரபல பின்னணிப் பாடகியும் பல மொழிகளில் பல ஆயிரம் பாடல்களைப் பாடியவரும் பல கோடி ரசிகர்களைத் தனது பாடல்களால் கொள்ளை கொண்டவருமான சுசிலா அம்மையாருக்கு மதிப்புறு முனைவர் (கௌரவ டாக்டர்) பட்டத்தை தமிழ்நாடு அரசு சார்பில் முதலமைச்சர் கௌரவ ஸ்டாலின் அவர்கள் வழங்கிக் கௌரவித்துள்ளார்.

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா இசைத்துறைப் பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவில் இந்தப் பட்டம் அண்மையில் வழங்கப்பட்டது. இசைத்துறையினர், அரசியல்வாதிகள், கல்வியாளர்கள் எனப் பலர் இவ்விழாவில் கலந்துகொண்டு சுசீலா அம்மையாரை வாழ்த்தி மகிந்தனர். நாமும் வாழ்த்தி மகிழ்வோம்...






# 3.500 கோடி இந்திய ரூபாவில் இராமர் கோவில்

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியால் உத்தரப்பிரதேச மாநிலம் - அயோத்தியில் 22.01.2024ல் திறந்து வைக்கப்பட்டது.

அயோத்தி இராமர் கோவில் திறப்புவிழா 22.01.2024 அன்று கோலாகலமாக நடைபெற்று முடிந்தது. திறப்புவிழா நிகழ்வில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் பிரதிஷ்டை செய்தார். இந்த நிகழ்வில் பல்வேறு மாநிலங்களிலிருந்தும் முதல்வர்கள், அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள், வெளிநாடுகளின் பிரமுகர்கள் திரைப்படப் பிரபலங்கள், விளையாட்டுத்துறைப் பிரபலங்கள், தொழிலதிபர்கள் மற்றும் பல பிரமுகர்கள் எனப் பல ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

பாபர் மசூதி இடிப்பு வழக்கில் சுப்ரீம்கோட் 2019ல் அளித்த தீர்ப்பைத் தொடர்ந்து கடந்த 2020 ஆகஸ்ட் முதல் அயோத்தி இராமர் கோவில் கட்டுமானப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. 2023 இறுதியில் கட்டுமானப் பணிகள் 90 வீதம் முடிவடைந்து 22.01.2024 அன்று இக்கோவில் திறந்து வைக்கப்பட்டது.
உத்தரப் பிரதேச மாநிலம் - அயோத்தியில் பிரமாண்டமான ஏற்பாடுகள் செய்யப்பட்டு அந்த நகரமே விழாக்கோலம்பூண்டு சிறப்பாக இந்த நிகழ்வு நடைபெற்றது. இந்த இராமர் கோவில் திறப்புவிழா பற்றிய சிறுகுறிப்பைப் பார்ப்போம்.

1- கோவில் திறப்பு விழாவிற்கு சகல தரப்பினருக்குமாக சுமார் 80.000 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.
2- 1 லட்சத்துக்கும் அதிகமானோர் இவ்விழாவில் கலந்துகொண்டனர்.
3- இந்திய மொழிகள் உட்பட 140 மொழிகளைச் சேர்ந்த பிரமுகர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.
4- இந்த வழிபாட்டு நிகழ்வுக்காக சுமார் 3.000 கிலோ பல வர்ணப் பூக்கள் பாவிக்கப்பட்டன.

இந்தக் கோவிலைப் பற்றிப் பார்த்தால்...
1- இந்தக் கோவில் வளாகம் 2.7 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது.
2- முற்று முழுதாக செங்கல்லால் 57.400 சதுர கிலோ அடி அளவில் கட்டப்பட்டுள்ளது.
3- 3 மாடிகளைக்கொண்ட இக்கோவிலுக்கு 12 வாசல்கள் உள்ளன.
4- 360 அடி நீளம் 235 அடி அகலம் கொண்டது இக்கோவில்.
5- இக்கோவிலின் உயரம் 161 அடிகளாகும்.

6- 1.800 கோடி இந்திய ரூபாவில் கட்டிமுடிக்கத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் 3.500 கோடி செலவு ஏற்பட்டதாம்.
7- அழகுபடுத்தல் அலங்கார அணிசெய்வித்தல் என 30.93 கோடி இந்திய ரூபா செலவாகியுள்ளது.

இந்தியர்கள் இன்று உலகெங்கும் வாழ்கிறார்கள். அவர்கள் எங்கு வாழ்ந்தாலும் தமது வழிபாட்டுக்குப் பிரமாண்டமான கோவில்களைக் கட்டிவிடுவார்கள். உதாரணத்திற்கு இங்கிலாந்து , கனடா, அமெரிக்காவில் பல கோடி செலவில் பிரமாண்டமான கோவில்களைக்கட்டி வழிபட்டு வருகிறார்கள். இந்தியா இன்று சகல துறைகளிலும் முன்னேறி வரும் நாடாகவே காணப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்க விடையமாகும்...

## உலகின் மிகப்பெரும் சிலை...

## 405 கோடி செலவில் 125 அடி உயரத்தில் அம்பேத்கர் சிலை..

இந்தியா - ஆந்திராவில் அமைக்கப்பட்டுள்ள உலகின் மிகப்பெரிய அம்பேத்கர் சிலை ஒன்று 20.01.2024 திறந்து வைக்கப்பட்டுள்ளது. உலகின் மிக உயரமான 206 அடியில் இச்சிலை அமைக்கப்பட்டுள்ளது. இந்தச் சிலையின் அடித்தளத்தில் 81 அடி பீடமும் அதன்மீது 125 அடி உயரத்தில் சிலை நிறுவப்பட்டுள்ளது. இரவில் வண்ண ஒளி விளக்குகளுடன் அனைவரையும் „ஈர்க்கும் விதமாக நீரூற்றுடன் லேசர் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது.

404.35 கோடி செலவில் 18.18 ஏக்கரில் அம்பேத்கர் சிலை அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் அழகிய புந்தோட்டம், நீர்நிலைகள்,



இசைநீரூற்றுகள், குழந்தைகள் சிறுவர்கள் விளையாட்டிடம் என வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் அருகே 4 திரை அரங்குகளில் 3 திரை அரங்குகளில் டிஜிட்டல் அருங்காட்சியகங்களாக அமைக்கப்பட்டுள்ளன. அத்தோடு ஒரு அரங்கு முழுவதுமாக நூலகம் அமையப்பெற்றுள்ளது.

அம்பேத்கரின் வாழ்க்கை வரலாற்றைப் பிரதிபலிக்கும் மிகப்பெரிய அருங்காட்சியகமும் ஒருங்கே மெழுகுசிலைக் காட்சிகளுடன் அமைந்துள்ளது. 2.000 பேர் அமரும் வகையில் 8.000 சதுரஅடி பரப்பளவில் மகாநாட்டு அரங்கம் அமைந்துள்ளது. கட்டிடத்தைச் சுற்றித் தண்ணீர் குளங்கள் உள்ளன. முன்புறத்தில் ஒரு இசை நீரூற்று மேம்பட்ட தொழில் நுட்பங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது.

யார் இவர்?..கல்வியால் உயர்ந்து .பட்டங்களை மலைபோல் குவித்தவர்... இந்திய அரசியல் யாப்பை எழுதியவர்... இந்திய நாட்டின் அரசியல் சட்டத்தை வரைந்தவர் மதிப்புக்குரிய காலம்சென்ற கலாநிதி அம்பேத்கார் அவர்களாவர். இவர் அனுபவித்த சாதியக் கொடுமைகளே பல்லாயிரம். இவர் இக்கொடுமைகளின் மத்தியிலும் எதிர்நீச்சல் போட்டு கல்வியில் பெற்ற பட்டங்களோ மலைபோல உயர்ந்து குவிந்து கிடக்கின்றன. இவரால் எழுதப்பட்ட அரசியல் சட்ட யாப்புதான் இன்றும் இந்தியாவில் அமுலில் இருந்து வருகின்றது. என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# உலகின் நம்பர் 1 பணக்காரக் குடும்பம்!.. (Big Family)


700 கார், ₹ 4,000 கோடி அரண்மனை, 8 ஜெட் விமானங்கள்

உலகின் நம்பர் 1 பணக்கார குடும்பம்

உலகின் பணக்காரக் குடும்பமான ஐக்கிய அரபு எமரேட் (ருயுநு) தலைவர் அல் நஹ்யான் குடும்பம் 700 கார்கள், 4.000 கோடி மதிப்புள்ள அரண்மனை 8 ஜெட் விமானங்கள் உள்ளனவாம். ஐக்கிய அரபு எமரேட் நாட்டின் அதிபராக இருப்பவர் ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யான். இவரது குடும்பம்தான் இந்த உலகில் நம்பர் 1 பணக்காரக் குடும்பமாக உள்ளது.

இவருக்குப் 18 சகோதரர்கள் 11 சகோதரிகள் உள்ளனர். மேலும் 9 குழந்தைகள், 18 பேரக் குழந்தைகள் உள்ளனர். இவர்களது அரண்மனையின் மதிப்பு 4.000 கோடியாகும். 94 ஏக்கர் அளவில் இவர்களது அரண்மனை அமைந்துள்ளது. 3.50 லட்சம் படிகங்களில் செய்யப்பட்ட விளக்குகள் அங்கு உள்ளன. அமெரிக்காவின் மிகப்பெரும் பாதுகாப்பு நிலையமான " பென்டகன் " அலுவலகத்தைவிட 3 மடங்கு பெரியது. மேலும் 8ஜெட் விமானங்களைச் சொந்தமாக வைத்துள்ளனர்.

இந்தக் குடும்பம் உலகின் எண்ணெய் இருப்புகளில் 6 சதவீதத்தை வைத்திருக்கிறது. இங்கிலாந்தின் பணக்கார உதைபந்தாட்ட கிளப் "மான்சிஸ்டர் சிற்றி", இந்தியா- மும்பை சிற்றி, அவுஸ்திரேலியா-மெல்போர்ண் சிற்றி, அமெரிக்கா- நியூயோர்க் சிற்றி கால்பந்து அணிகளையும் கோடான கோடி பணம் கொடுத்து வேண்டி இருக்கிறார்கள்.

உலகப்பாடகரானரிஹானாவின் அழகுக்கலை நிறுவனம்,எலோன் மக்ஸ் நிறுவனம் ஆகியவற்றின் பங்குகளையும் இந்தக்குடும்பம் வைத்திருக்கின்றது. இக்குடும்பத்திற்கு 700 சொகுசு விலை உயர்ந்த கார்களும் சொந்தமாக வைத்திருக்கிறார்களாம். இவர்களது சொத்து மதிப்பு கடந்த 5வருடங்களில் 28.000 சதவீதம் உயர்ந்துள்ளது.

தமது நாட்டை விட துபாய், இங்கிலாந்து, பிரான்ஸ் உட்படப் பல நாடுகளில் ஆடம்பரச் சொத்துக்களை வைத்திருக்கிறார்கள்பிரிட்டிஷ் அரச குடும்பத்துடன்ஒப்பிடக் கூடிய சொத்துக்களைக்கொண்டிருக்கிறார்கள் என நியூயோர்க்அறிக்கை ஒன்று தெரிவித்திருக்கின்றது குடும்பம், பிள்ளை குட்டிகள்மாத்திரமல்ல பணத்திலும் சொத்திலும் உலகின் நம்பர் 1 குடும்பமாகத் திகழ்வதற்கு அவர்களின் எண்ணெய் என்னும் பெரும் செல்வமே என்றும் அவர்களுக்குத் தணை நிற்கின்றது என்பதுதான் உண்மையான விடையமாகும்.

# இலங்கையில் வட மாகாணம் என்றால் என்ன?....

- வடக்கில் சிறிய மாவட்டம் - யாழ்ப்பாணம்.
- வடக்கில் பெரிய மாவட்டம் - முல்லைத்தீவு.
- வடக்கில் கடல்பரப்பில்லாத மாவட்டம் - வவுனியா.
- வடக்கில் குளங்கள் அதிகமாக காணப்படும் மாவட்டம் - முல்லைத்தீவு.
- வடக்கில் காணப்படும் பெரிய தீவு - நெடுந்தீவு.
- வடக்கில் சிலிக்கன் மணல் காணப்படும் இடம் - நாகர்கோவில்.
- வடக்கு மாகாணசபை அமைந்துள்ள இடம் - கைதடி.
- வடமாகாணத்தில் சனத்தொகை அடர்த்தி கூடிய மாவட்டம் - யாழ்ப்பாணம்.
- வடமாகாணத்தில் சனத்தொகை அடர்த்தி குறைந்த மாவட்டம் - முல்லைத்தீவு.
- வடமாகாணத்தின் பரப்பளவு - 8884 சதுர கிலோமீட்டர்.
- வடமாகாணத்தின் நிலப்பரப்பு - 8290 சதுர கிலோமீட்டர்.
- வடக்கில் எண்ணெய் வளம் உள்ள மாவட்டம் - மன்னார்.
- வடக்கில் சிறுவர் நீதிமன்றம் அமைந்துள்ள இடம் - குருநகர், யாழ்ப்பாணம்.
- வடக்கில் அல்லது இலங்கையில் நீளமான பாலம் - வேலணை புங்குடுதீவு.
- வடக்கில் காணப்படும் முனை - பருத்தித்துறை (பேதுறு).
- வடக்கில் காணப்படும் நீரேரிகள் - கச்சாய் அல்லது கிளாலி, சுண்டிக்குளம், தொண்டமானாறு.
- இலங்கையின் வடக்கின் புராதனபெயர் - நயினாதீவு (நாகதீவு).
- வடக்கில் இருந்து பாராளுமன்றம் சென்ற முதலாவது பெண் - 15 February 1989 - 24 June 1994 - திருமதி புலேந்திரன் ராஜமனோகரி-வன்னி.
- வடக்கில் ஓட்டு தொழிற்சாலை ஓட்டுசுட்டானிலும் உப்பளம் ஆனையிறவிலும்
- சீமேந்து தொழிற்சாலை காங்கேசன்துறையிலும் இரசாயன தொழிற்சாலை பரந்தனிலும் காணப்படுகிறது.
- வட மாகாணத்தில் பாதுகாக்கப்பட்ட பறவைகள் விலங்குகள் காப்பகம் என அறிவிக்கப்பட்ட இடம் - சுண்டிக்குளம் (கிளிநொச்சி மாவட்டம்).
- வேலணை தீவு அல்லது லைடன் தீவுகள் எனப்படுவது வடக்கில் பெரிய கூட்டிணைக்கப்பட்ட தீவாகும்.
- யாழ்ப்பாணத்தில் காணப்படும் ஒரே ஆறு - வழுக்கை ஆறு (பருவகாலஆறு).
- இலங்கையில் காணப்படும் குளங்களில் மூன்றாவது பெரிய குளம் - இரணைமடுக் குளம்.
- "செங்கையாழியன்" என அழைக்கப்படும் வடமாகாணத்தின் எழுத்தாளர் - கலாநிதி க.குணராசா.
- அண்மையில் வடக்கில் தொடங்கப்பட்ட கைத்தொழில் பேட்டை - அச்சுவேலி.
- வவுனிக்குளத்தை கட்டுவித்தவன் - எல்லாளன்.
- வடக்கிற்கான ரயில் சேவை 1989.01.19 பின் 13.10.2014 உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

- வடக்கு ரயில் பாதையை புனரமைத்த இந்திய நிறுவனம் - இர்கொன்.
- இரணைமடு நீர் விநியோக திட்டத்திற்கு உதவி வழங்குவது - ஆசிய அபிவிருத்தி வங்கி.
- இரணமடு நீர் விநியோக திட்டத்திற்கு மாற்றீடான மற்றுமொரு திட்டம் - ஆறுமுகம் திட்டம்.
- யாழ்ப்பான பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது - ஆகஸ்ட் 1, 1974
- வடமாகாணத்தில் ஒவ்வொரு வருடமும் மரம் நடுகை தினம் நவம்பர் 01 - 30 வரை கொண்டாடப்படுகிறது.
- சுன்னாகம் கழிவு ஓயில் தொடர்பான நிறுவனம் - நொதேர்ன் பவெர்.
- யாழ் நூலகம் ஆரம்பிக்கப்பட்டது - 1933 ஆம் ஆண்டு.
- யாழ்ப்பான நூல்நிலையம் எரிக்கப்பட்ட ஆண்டு - 31.05.1981.
- யாழ்ப்பாண வரலாற்றை கூறும் நூல்கள் - வையாபாடல், யாழ் வைபவ மாலை.
- யாழ்ப்பான பல்கலைக்கழகம் இருக்கும் இடத்தில் முன்பு இருந்த பாடசாலையை உருவாக்கியவர் - சேர் பொன்இராமநாதன்.
- முறிந்த பனை என்ற நூலை எழுதியவர்கள் - ராஜினி திராணகம, ராஜன் ஹூல், சிறிதரன், தயா சோமசுந்தரம்.
- மன்னாருக்கான ரயில் சேவைகள் 1914ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டாலும் யுத்தத்தின் பின்னர் ஆரம்பிக்கப்பட்டது - 14.03.2015.
- மன்னார் - நாவற்குழி பிரதான பாதை A32.
- பரந்தன் - முல்லைத்தீவு பிரதான பாதை A35.
- மாங்குளம் - முல்லைத்தீவு பிரதான பாதை A34.
- முல்லைத்தீவோடு இணைக்கப்பட்ட பிரதேசம் - மணலாறு (வெலிஓயா).
- நயினாதீவின் இன்னுமொரு பெயர்பெயர் - நாகதீப.
- இலங்கையில் வறுமை கூடிய மாவட்டம் -கிளிநொச்சி.
- மதுபான விற்பனை மற்றும் எய்ட்ஸ் பாதிப்பு அதிகரித்து காணப்படும் மாவட்டம் - யாழ்ப்பாணம்
- யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து 1984 பெப்ரவரியில் கிளிநொச்சி மாவட்டம் பிரிக்கப்பட்டது.
- யாழ் கோட்டை போர்த்துகேயரால் 1625ல் கட்டப்பட்டது.
- தற்போது காணப்படும் யாழ் கோட்டை ஒல்லாந்தரால் உடைக்கப்பட்டு 1658 யூன் 23 ற்கு பின் கட்டப்பட்டதாகும்.
- யாழ்ப்பாண அரசின் நாணயம் - சேது நாணயம்.
- யாழ்ப்பாண அரசின் பழைய சின்னமாக விளங்குவது - நந்தி.
- வன்னி இராட்சியம் போத்துக்சேகரிடம் வீழ்ச்சியடைந்தது - 1803ம்
- ஒல்லாந்தரால் சொத்துரிமை தொடர்பாக யாழ்ப்பாணத்துக்கு மட்டும் உரித்தான சட்டம் - தேசவழமைச் சட்டம்.
- யாழ் நூலை எழுதியவர் - சுவாமி விபுலானந்தர் 1947.
- சுவாமி விபுலானந்தர் இயற்பெயர் - மயில்வாகனன் 1892.
- சைவசமய மறுமலர்ச்சிக்கு வித்திட்ட யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர் - ஆறுமுகநாவலர் (1822 டிசம்பர் 18 ஆறுமுகம்பிள்ளை).
- நாவலர் 1872 இல் முதல் உருவாகிய சைவ ஆங்கிலப் பாடசாலை - வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலை.
- மன்னாரில் எண்ணெய் வள ஆய்வில் ஈடுபட்ட நிறுவனம் - கெய்ன் இந்தியா நிறுவனத்தின் துணை நிறுவனமான கெய்ன் லங்கா.

# தாயகச் செய்திகள் சில...

10.01.2024- நாட்டின் பொருளாதார நெருக்கடி, இடம்பெயர்வு, புலம்பெயர்வு போன்ற காரணங்களால் சனத்தொகை வீழ்ச்சி. 2022ம் ஆண்டைவிட2023ம் ஆண்டில் 90.000 குழந்தைகள் குறைவாகப் பிறந்திருக்கிறார்கள் என பேராசிரியர் ஒருவர் தெரிவித்திருக்கின்றார்.

10.01.2024- உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு படுகொலைகளின் 50வது ஆண்டு நாள் (1974 - 2024) வடமாகாணம் எங்கும் அனுட்டிக்கப்பட்டது.

12.01.2024- மூடநம்பிக்கையால் இதுவரை 7.500 குழந்தைகளுக்கு தட்டம்மை தடுப்பூசி போடாமையால் 22 மில்லியன் பேர் கடும் பாதிப்பை எதிர்கொண்டிருப்பதாக மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

14.01.2024- 1.700 வைத்தியர்கள், 900 விரிவுரையாளர்கள் 2023ம் ஆண்டில் நாட்டைவிட்டு வெளியேறியதால் கல்வி நெருக்கடிகள் அதிகரித்துள்ளன.

17.01.2024- 19,20,21ம் திகதிகளில் யாழ் வர்த்தக சந்தை பிரமாண்டமாக நடைபெற்றது. இந்தக் கண்காட்சியில் நாட்டின் சகல பகுதிகளிலிருந்தும் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

21.01.2024- மலையகத்தில் வரலாறுகாணாத மக்கள் ஒன்றுசேர்ந்து தைப்பொங்கல் விழாவைக் கொண்டாடி மகிழ்ந்தனர். 1.008 பானைகளில் பொங்கல் செய்யப்பட்டதாம்..

23.01.2024- நாட்டில் வாழும் மக்களில் 20 வீதம்பேர் இரத்த அழுத்த நோயால் பீடிப்பு. சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

24.01.2024- 2023ம் ஆண்டில் பல்வேறு காரணங்களால் 439 யானைகள் உயிரிழந்திருப்பதாக வனப்பாதுகாப்புத் துறையினர் அறிவித்துள்ளனர்.

25.01.2024- வடமாகாத்திலுள்ள கண்ணிவெடிகள் அகற்றுதலுக்காக மேலும் 116 மில். ரூபாக்களை யப்பான் வழங்கியுள்ளது.

27.01.2024- 2023ம் ஆண்டில் சுமார் 4.000 பாலியல் குற்றச்சாட்டுகள் பதிவாகியிருப்பதாகவும் 167 சிறுமிகள் கர்ப்பம் தரிப்பு,1.502 சிறுமிகள் வன்புணர்வு பொலிஸ் தலைமையகம் அறிவித்தது.

04.02.2024- நாட்டின் 76 வது சுதந்திரதினம் கொழும்பிலும் நாடெங்கிலும் கொண்டாடப்பட்டது. 600 சிறைக்கைதிகள் பொதுமன்னிப்பில் விடுதலை.

05.02.2024- நாட்டில் 4 வயதுக் குழந்தைகளில் 30 வீதம்பேர் முன்பள்ளிக்குச் செல்வதில்லை என கல்வி அமைச்சர் அறிவித்துள்ளார்.

06.02.2024- கடந்த 17 மாதங்களில் 119 பிரசவ உயிரிழப்புகள் இடம்பெற்றதாக சுகாதார அமைச்சு அறிவித்தது.

07.02.2024- 2023ம் ஆண்டில் 39.115 புற்றுநோயாளர்கள் அடையாளம். 2019 - 2023 வரை 15.598 பேர் புற்றுநோயால் மரணம். இதில் 27 வீதமான பெண்கள் மார்பகப் புற்றுநோயினால் பலி

10.02.2024- தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் 16வது பட்டமளிப்பு விழா 10, 11ம் தகதிகளில் நடைபெற்றது 2.152 மாணவர்கள் பட்டம் பெற்றனர்.

11.02.2024- மன்னார் மாவட்டத்தில் தற்போது இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ, பௌத்த ஸ்தலங்கள் 705 உள்ளன. இதில் 174 ஸ்தலங்கள் பதிவுசெய்யப்படவில்லை என மாவட்ட செயலகம் அறிவித்தது.

12.02.2024- இலங்கையில் கடவுச்சீட்டு (பாஸ்போட்) கட்டணம் 5.000 ரூபாவிலிருந்து 10.000 ரூபாவாக அரசு உயர்த்தியுள்ளது.

13.02.2024- இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வரலாற்றில் முதன்முறையாகத் தலைவர் தெரிவிற்கு வாக்களிப்பு 21.01.2024 அன்று திருகோணமலையில் நடைபெற்ற தேர்தலில் திரு சி சிறீதரன் தெரிவு செய்யப்பட்டார்.

14.02.2024- 2024 ஜனவரி முதல் 25 நாட்களில் மட்டும் 1.189 விபத்துக்கள், 136 பேர் உயிரிழப்பு. பொலிஸ் அறிக்கை தெரிவித்துள்ளது.

15.02.2024- நாட்டின் பல பாகங்களிலும் பொலிசாரின் சோதனை நடவடிக்கைகளில் 10.221 பாடசாலை மாணவர்கள் போதைப் பொருள் பாவனையாளர்கள் எனக் கண்டறியப்பட்டுள்ளனர் என பொலிசார் அறிவிப்பு.

## உலகச் செய்திகள் சில...

15.01.2024- தமிழ்நாட்டில் 8 மாவட்டங்களில் 2023ன் சோதனைகளில் 409 குழந்தைகள் திருமணம் நடைபெற்றதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

16.01.2024- உலகளவில் 45 வீதமான பெண்கள் குடும்ப வன்முறைகளால் பாதிப்பு. 49 நாடுகளில் பெண்கள் பாதுகாப்புச் சட்டம் இல்லை என ஐ. நா.தாபனம் அறிவித்துள்ளது.

17.01.2024- எந்தியோப்பியாவில் கடந்த 6 மாதங்களில் பட்டினியால் 200 பேர்வரை இறப்பு. 89 வீதமான மக்கள் பட்டினியை எதிர்கொண்டுள்ளனர். 2 கோடி மக்கள் பாதிப்பு கடந்த வருடம் 400 பேர் இறப்பு.

18.01.2024- அணிசேரா நாடுகளின் உச்சி மகாநாடு உகண்டா நாட்டில் நடைபெற்றது. 120 நாடுகளின் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

20.01.2024- சீனாவில் பெரும் மண் சரிவு 50 பேர்வரை காணாமல் போயுள்ளனர். அமெரிக்காவில் பனிப் புயல் 100 பேர்வரை பலி.

27.01.2024- ரஷ்ஷிய இராணுவ விமான விபத்தில் 65 உக்ரைன் போர்க் கைதிகள் பலி.

28.01.2024- 28. ஜனவரி அன்று இந்தியாவின் 75வது குடியரசு தினம் கொண்டாடப்பட்டது.

30.01.2024- சூடானில் துப்பாக்கிக் குழுவினரால் 54 பேர் படுகொலை..

31.01.2024- பாக்கிஸ்தானில் முன்னாள் ஜனாதிபதி இம்ரான் கானுக்கும் அவரது மனைவிக்கும் 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

02.02.2024- 2023ல் அமெரிக்காவின் ஆயுத விற்பனை 238 பில்லியன் டொலர்களாக உயர்ந்துள்ளது. உக்ரைன் - ரஷ்ஷியப் போரால் மேலதிக விற்பனை. யேர்மனி, செக்குடியரசு, யப்பான், தென்கொரியா, அவுஸ்திரேலியா நாடுகள் மிக அதிகமான ஆயுதங்களை வேண்டியுள்ளன.

05-02.2024- உலகில் ஊழல் குறைந்த நாடுகளில் 1-டென்மார்க் 2- பின்லாந்து 3- நியூசிலாந்து நாடுகள் முன்னிலை பெற்றுள்ளன.

07.02.2024- மலேசியாவின் 17வது மன்னராக ஜோகூர் சுல்தான் இப்ராகிம் பதவி ஏற்றுள்ளார்.

10.02.2024 - பலஸ்தீனத்தில் தொடரும் யுத்தத்தால் 31.01.2024வரை 27.000 பேர் இஸ்ரேல் படைகளால் கொல்லப்பட்டனர்.

15.02.2024- ஐரோப்பிய பாராளுமன்ற முற்றலில் விவசாயிகள் ஆர்பாட்டம். 100 விவசாகள் கைது செய்யப்பட்டனர்.

17.02.2024- இந்தியாவில் புற்று நோயால் கடந்த ஆண்டில் 9 லட்சம்பேர் இறப்பு உலக சுகாதார அமைப்பு தெரிவித்தது.

18.02.2024- சிலி நாட்டில் ஏற்பட்ட காட்டுத் தீ விபத்தில் 150 பேர்வரை பலி.

19.02.2024- பிலிப்பைன்ஸ் நாட்டில் நிலச்சரிவு 50 பேர்வரை காணாமல் போயுள்ளனர்.

19.02.2024- பலஸ்தீனம்- காஸா- இஸ்ரேல் போரால் 17.000 குழந்தைகள் ஆதரவற்றோர்களாகவும் 20 லட்சம்பேர் இடம்பெயர்வு. ஐ.நா. அமைப்பு தெரிவிப்பு.

20.02.2024- ஆப்கானிஸ்தானில் இடம்பெற்ற நிலச்சரிவில் 5 பேர் பல. 25 பேர் காணாமல் போயுள்ளனர்.

20.02.2024- 2023ம் ஆண்டில் உலகம் முவதும் 99 பத்திரிகையாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 72 பேர் பலஸ்தீனர்களாவர். அவர்கள் இஸ்ரேலின் தாக்குதலில் கொல்லப்பட்டனர் என உலக ஊடாக அமைப்பு அறிவித்துள்ளது.

**Good Shepherd Child Development center,**
**Mullai Road, Mankulam**
**Srilanka.**
E-mail – mankulamcdc@gmail.com
Tel. No. – 0212060077/+94775924582

Date: 03.01.2024

அன்பின் மண் சஞ்சிகையின் உறுப்பினர்களுக்கு நன்றிகள் நிறைந்த உள்ளத்துடன் இறையாசிர்கள் கூறி வரைவது

நல்லாயன் சிறுவர் இல்லத்தின் வளர்ச்சிக்கு பல வருடங்கள் தொடர்ச்சியாக நிதிப்பலம் தந்து ஒத்துழைத்த அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்றிகள் கூறி பாராட்டுகின்றோம். எம் இல்லத்தில் கல்வி அறிவையும் பாதுகாப்பையும் பெறுவதற்கு வந்த பிள்ளைகள் இன்று பல துறைகளில் தங்களை ஈடுபடுத்தி மகிழ்ச்சியாக வாழ்கின்றார்கள். இவர்களின் கல்வி விளையாட்டுத்துறை திறமைகளை வெளிக்கொணரவும் மற்றும் தலைமைத்துவம் உளவியல் பயிற்சிகளை பெற்று நல்ல பிரஜைகளாக திகழ உங்களின் ஒத்துழைப்பு உதவிக்கரம் நிறைவாக இருந்து வருகின்றது. 28.12.2023 திருமதி மேரி விஜயகுமார் மற்றும் திருமதி மங்கையற்கரசி சிவராசன் ஆகியோர் மண் சஞ்சிகை அமைப்பின் ஊடாக அனுப்பிவைத்த ரூபா 68803.35 சதம் (200 Euro) எம் கரம் கிடைத்தது. உங்களின் பெரும் உள்ளம் கொண்ட தொடர்ச்சியான உதவிகளுக்கு மீண்டும் எமது நன்றிகளை கூறி நிற்கின்றோம்.

உங்களின் தொடர்ச்சியான முயற்சிக்கு ஏற்ப நீங்கள் அனுப்பும் நிதியானது பிள்ளைகளின் மேலதிக வகுப்புகளுக்காக அதாவது கணிதம், தமிழ், வரலாறு ஆகிய பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்களின் கொடுப்பனவிற்காக பயன்படுத்துகின்றோம் என்பதை தெரிவித்து நிற்கின்றோம். உங்கள் மக்கள் பணி என்றும் வளர உங்களின் உதவிக்கரம் பலம் அடைய இறைவன் உங்கள் குடும்பங்களையும் உங்களையும் ஆரோக்கியத்துடன் வாழ வழி செய்து காத்திட வேண்டும் என்று தொடர்ந்து மன்றாடுகின்றோம் என்று கூறி பிறந்திருக்கும் புதிய வருடம் அனைவர் வாழ்விலும் புதிய விடியலும் மகிழ்ச்சியும் கொண்டு வரும் என வாழ்த்தி ஆசிகள் கூறி நிற்கின்றோம்..

நன்றி.

என்றும் உங்களின் அன்பு சேவையை மறவாத

அருட்சகோதரிகள் மற்றும் பிள்ளைகள்

Sister In Charge
od Shepherd Children's Home
Mankulam.

# மனிதநேயப்பணியில் இணைந்துகொண்டவர்கள்!..

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் மற்றும்கல்விச்செலவுகளைப்பொறுப் பேற்றுஉதவும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம்.எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்து உதவலாம். இதுவரை இத்திட்டத்தில் இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

1- திருமதி பிங்கலை செந்திலன் - Kitzingen - 600-00 யூரோ
ஒளிரும் வாழ்வகம் - துணுக்காய் - முல்லைத்தீவு
உதவி பெறுவோர்.. - தியாகராசா டிலானி (பி.தி 10.04.2014)
குருபவராசா ரேணுஸ்றியா (பி.தி 23.08.2012)
றொனி டிலக்சனா (பி.தி 03.08.2014)

.................................................................................................................................

2- திருமதி சிவதர்சினி பிராங்ளின் - Viersen - 480-00 யூரோ
ஒளிரும் வாழ்வகம் - துணுக்காய் - முல்லைத்தீவு
உதவி பெறுவோர்.. - றமணன் பிலோமினா (பி.தி 08.04.2012)
- ஜெகஸ்ரீன் மதுசாளினி (பி.தி 02.04.2013)

.................................................................................................................................

3- திருமதி சாந்தினி துரையரங்கன் - Essen - 480-00 யூரோ
சிறீ சண்முகா பெண்கள் இல்லம் - திருகோணமலை
உதவி பெறுவோர்.. - திலக்சிகா கோடீஸ்வரன் (பி.தி 12.05.2008)
மதுஸா சுந்தரலிங்கம் (பி.தி 01.01.2008)

.................................................................................................................................

4- திருமதி அஜந்தி பத்மநாதன் - London - 480-00 யூரோ
செபமாலை இரக்கத்தின் இல்லம்- தலைமன்னார்- மன்னார்
உதவி பெறுவோர்.. - கதிர்விழி சகாயநாதன் (பி.தி 09.05.2008)

.................................................................................................................................

5- திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Bonn - 480-00 யூரோ
சிறீ அகிலாண்டேஸ்வரி "அருளகம்" - வவுனியா
உதவி பெறுவோர்.. - இ. அபிராமி (பி.தி 14.11.2002)

.................................................................................................................................

6- திருமதி அனிதா றஞ்சன் - Duisburg - - 480-00 யூரோ
திருஞானசம்பந்தர் குருகுலம் - களுவாஞ்சிக்குடி - மட்டக்களப்பு
உதவி பெறுவோர்.. சாய்ரிதன் சத்தியசீலன் (பி.தி 07.06.2010)

7- திருமதி ஸ்ரெவ்வானி இம்மானுவல் - Essen - 480-00 யூரோ
இந்து "அன்பகம்" சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா
உதவி பெறுவோர்.. அஸ்வினி சுனில்சாந்த் ( பி.தி 09.06.2012)
8- திரு Johannas Grüendler - Köln - 480-00 யூரோ
இந்து "அன்பகம்" சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா
உதவி பெறுவோர்.. தட்சாயினி கபிசா ( பி.தி 01.09.2012)
9- செல்வன் பிரணவன் யோகராசா - Düsseldorf - 240-00 யூரோ
இந்து "அன்பகம்" சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா
உதவி பெறுவோர்.. சிவராசா பவிதா ( பி.தி 05.09.2011 )

---

- பொறுப்பெடுத்தவர்கள் 9 பேர்.. (ஜேர்மனி, லண்டன்)

- உதவி பெறுவோர் 13 பிள்ளைகள் (தாயகம் - சிறீலங்கா)

---




## தமிழ்ப்பெண்களின் முன்மாதிரியைப் பாராட்டுவோம்!...

Germany - Brühl நகரில் யேர்மனியர் உட்பட வெளிநாட்டவர்களின் ஒன்று கூடல் நிகழ்வு சென்ற மாதம் நடைபெற்றது. அந்த நிகழ்ச்சியில் தமிழ்ப் பெண்களான திருமதி ரேவதி ஸ்ரீதரன் திருமதி ராதிகா இராஜ்குமார் (Germany - Brühl ) ஆகியோர் சிற்றுண்டிகள் சிலவற்றை தயாரித்து சபையில் கூடியிருந்த எல்லோருக்கும் கொடுத்துப் பசியாறி மகிழ்ந்தனர்.

நமது சிறீலங்கா நாட்டுப் பலகார வகைகளை ரசித்து ருசித்து உண்ட யேர்மனிய மக்கள் இந்த நிகழ்வில் சிறு அன்பளிப்பாக 120-00 யூரோக்களைப் பெற்றனர். அந்தப் பணத்தை நமது பெண்களிடம் நன்றியோடு கொடுத்தனர். யேர்மனிய மக்களுக்கு நன்றிகள்...

மண் சஞ்சிகையின் நீண்டகால மனிதநேயப் பணிகளை அறிந்த இந்த இரு பெண்மணிகளும் எமது வாசகரும் எழுத்தாளரும் அதே நகரில் வசிப்பவருமான செல்வி சர்வேஸ்வரி அவர்களிடம் அந்த 120-00 யூரோக்களையும் பெருமனத்துடன் ஒப்படைத்தனர்.

அந்தப் பணத்தை அவர் எமக்கு அனுப்பி வைத்தார். அப்பணம் தாயக ஆதரவற்றோர் நிதியில் சேர்க்கப்பட்டு தாயகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்தப் பேருதவியைப் புரிந்த இந்த மூன்று தமிழ்ப் பெண்மணிகளையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்... இப்படிப்பட்ட அரிய சேவைகளைச் செய்து நீங்களும் தாயக துயர் துடைப்பில் பங்குகொள்ளுங்கள்..

--நன்றிகள் -

# ஆதரவற்றோர் நிதி உதவிக் கணக்கு..

ஆரம்ப இருப்பு 01-01-2024 + 1.434-45

அன்பளிப்புகள்:-

01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின் - Viersen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
02. செல்வி. அனித்தா றஞ்சன் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
03. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - Essen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)
04.திருமதி அஜந்தி பத்மநாதன் - London + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)
05. திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Weeze + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
06. திரு. Johannas Gruendler - Köln + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
07. திருமதி பிங்கலை செந்திலன் - Kitzingen +100-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)------------

+ 580-00 + 580-00

--------------

2.014-45

அன்பளிப்புகள்...

8- செல்வன் நிலுஜன் நேசராசன் - Oberhausen + 100-00
( பிறந்தநாள் அன்பளிப்பு )
9- திரு பசுபதி சௌந்தரராசா - Duisburg + 100-00
( பேரப்பிள்ளைகளின் பிறந்தநாள் அன்பளிப்பு )
10- திரு பசுபதி சௌந்தரராசா - Duisburg + 150-00
( மகன் கவீசனின் பிறந்தநாள் அன்பளிப்பு )
10- திருமதி இந்திரா மகாலிங்கம் - Werne + 100-00
(தந்தையாரின் 25வது ஆண்டு நினைவு அன்பளிப்பு)
11- திரு பத்மன் பசுபதிராசா - Wuppertal + 50-00
( பிறந்தநாள் அன்பளிப்பு )
12- செல்வி சாமினா சிவதாசன் - Essen + 50-00
( பிறந்தநாள் அன்பளிப்பு )

.................

+ 550-00 + 550-00

.....................

+ 2.564-45

| | | | |
|---|---|---|---|
| முற்பக்கப்படி | | | + 2.564-45 |
| 13- ஓர் அன்பர் | - Essen | + 30-00 | |
| 14- பெண்கள் அமைப்பு அன்பளிப்பு<br>விபரம் 73ம் பக்கம் (Germany- Brühl ) | | + 120-00 | |
| 15- திரு ஜெயம் தங்கராசா<br>(பிறந்தநாள் அன்பளிப்பு) | - Holland | + 200--00 | |
| 16- திருமதி மீரா நித்தியானந்தன்<br>(மகள் நிவேதினியின் பிறந்தநாள் அன்பளிப்பு) | - Mülheim | + 296-73 | |
| 17- திருமதி மேரி விஜயகுமார். திருமதி மங்கை சிவராசன்<br>கல்வி மேம்பாட்டு நிதி உதவி - Stuttgart<br>2024 தை + மாசி மாதங்கள் 200.00 + 200-00 | | + 400-00<br>------------ | |
| | | + 1046-73 | + 1046-73 |
| | | | ------------------ |
| | | | + 3.611-18 |

**அனுப்பியது...**

| **முல்லைத்தீவு மாவட்டம்..** | ரூபா | யூரோ |
|---|---|---|
| 1)ஒளிரும் வாழ்வகம் மல்லாவி துணுக்காய் | | |
| 02.012024 -நிலுஜன் பிறந்தநாள் | 32.351-88 | - 100-00 |
| 29.01.2024 -ம.இந்திரா தந்தை நி-நா | 31.543-42 | - 100-00 |
| 14.02.2024 -சௌந்தர் மகன் கவீசன் பி.நா | 49.571-41 | - 150-00 |
| 14.02.2024 -பிங்கலை வருடாந்த உதவி | 1.98.285-68 | - 600-00 |
| 28.02.2024 -ஜெயம் தங்கராசா உதவி | 64.216-07 | - 200-00 |
| 2)ஒளிரும் வாழ்வகம் புதுக்குடியிருப்பு | | |
| 29.01.2024 -சௌந்தர்பேரப்பிள்ளைகள்பி-நா | 31.543-42 | - 100-00 |
| 27.01.2024 -மீரா மகள் நிவேதினி பி.நா | 1.00.000-00 | - 296-73 |
| 3)நல்லாயன் சிறுவர் இல்லம் மாங்குளம் | | |
| 28.02.2024 - மேரி + மங்கை | 1.30.926-22 | - 400-00 |
| **வவுனியா மாவட்டம்..** | | |
| 4)அன்பகம் சிறுவர் இல்லம் - வவுனியா | 1.64.549-18 | - 500-00 |
| | | ---------------- |

| | |
|---|---|
| - 2.446-73 | - 2.446-73 |
| | ------------------- |
| | + 1.164-45 |

மண் சஞ்சிகை வக்கிக்கணக்கு வங்கிவரி

| | | | |
|---|---|---|---|
| 01.01.2024 | - 31.01.2024 | - 21-89 | |
| 01.02.2024 | - 29.02.2024 | - 21-89............................ | - 43-78 |
| | | | -------------------- |
| மீதி கையிருப்பு 29.02.2024 | | | **+ 1.120-67** |

ॐ

# SRI SHANMUGA GIRLS' HOME

## ஸ்ரீ சண்முக பெண் பிள்ளைகள் இல்லம்

76(54), vidyalayam Road,
Trincomalee,
Srilanka,
026-2222521

Regd No: NEP/PCC/C.H/31(1998.05.18)

76(54), வித்தியாலயம் வீதி,
திருகோணமலை,
இலங்கை.
026-2222521

திரு. வைரமுத்து சிவராஜா,
பிரதம ஆசிரியர்,
'மண்' கலை இலக்கிய சமூக சஞ்சிகை,
ஜேர்மனி.

திகதி: 19/01/2023

அன்புடையீர்,


<u>480.00 யூரோ - 2023</u>

வணக்கம். எமது புத்தாண்டு, தைப்பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். தங்கள் 02.01.2024 கடிதம் கிடைக்கப்பெற்றோம். 2023ம் ஆண்டிற்கான நிதியுதவி 480.00 யூரோ அதாவது, ரூபா 165,256.85 வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ளது. எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இவ்வருடம் சுமார் 16 பிள்ளைகள் உள்ளனர். கடந்த வருடம் ஜானுகா தனது தாயார் வெளிநாட்டிலிருந்து வீட்டிற்கு வந்த காரணத்தினால் இல்லத்திலிருந்து விலகி, வீட்டிற்கு சென்று விட்டார். கடந்த வருடம் செல்வி. ந.துர்க்கா யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலைப்பட்டப்படிப்பிற்கு (B.A) தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவருடன் படித்த இன்னுமொரு மாணவி செல்வி ர.லக்ஷிகா பேராதனை பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். இருவரும் இவ்வருடம் யூன் மாதமளவில் பல்கலைக்கழகத்தில் இணையவுள்ளனர். துர்க்காவின் புகைப்படத்தை அனுப்புகின்றேன். தங்கள் நிதியுதவி அவரின் பட்டப்படிப்பிற்கு உதவும் என்பதை அறியத் தருகின்றேன். இவர் பெற்றோரை இழந்தவர். அப்பம்மாவுடன் வசித்து வருகின்றார். தற்பொழுது, Diploma in English Course செய்து வருகின்றார். இப்படிப்பை முடிக்க சுமார் 60,000 ரூபா வரை தேவைப்படுகின்றது. துர்க்காவின் பட்டப்படிப்பு முடியும் வரை தங்கள் நிறுவனம் நிதியுதவியளித்தால் பெரும் உதவியாக இருக்குமென்பதையு அன்புடன் அறியத் தருகின்றேன்.

Miss. V.Nadarajah B.Sc
Secretary & Custodian Trustee.
Sri Shanmuga Trust

Mrs.K. Rajendira.BA(Hons)
President
Sri.Shanmuga Girls' Home

Mrs.P.Vanisri
Manager


தற்பொழுது இவர் இல்லத்திலிருந்து இல்லக் கணக்கு
வேலைகள் செய்வதற்கு உதவியாகவுள்ளார். மற்ற பிள்ளையின்
(லக்ஷிகா) பிரிந்திருந்த பெற்றோர் சேர்ந்து விட்டனர். இதனால்
அவர் பெற்றோர் கவனிப்பில் உள்ளார். தற்போது நாட்டில்
நிலவும் சூழ்நிலை காரணமாக சுமார் 1 1/2 மாதம் பாடசாலை
விடுமுறை விடப்பட்டுள்ளது. எனவே, பிள்ளைகள் பெரும்
-பாலானோர் வீட்டிற்கு சென்றுவிட்டனர். இருப்பினும் இவ்
இல்லத்தில் தைப்பொங்கல் இனிதே நடைபெற்றது. பிள்ளைகள்
அனைவரும் விடுமுறை கழித்து, திரும்பி வந்த பின்னர்
தங்கள் சஞ்சிகைக்கு ஆக்கங்கள் அனுப்பி வைக்கப்படும்
என்பதனை அறியத் தருகின்றேன்.

நன்றி.

V. Nadarajan

Ms.V.Nadarajan

19/01/2024

## வாழ்த்து

ஆண்டினில் முப்பத்து நான்கு ஆண்டுகளில்
பதியம் வைத்து மகிழ்ந்திருக்கும் மண் சஞ்சிகையின்
ஆசிரிய குடும்பத்தினருக்கு வாழ்த்துக்கள்.
பிரமிக்க வைக்கும் வகையில் தங்கள் குடும்பத்துப்
பணியாக பொதுமக்கள் தாயக உணர்வுடன் வாழ்ந்திருக்க
வைக்கும் பொதுப்பணியாக மண் சஞ்சிகையில் உலகத்தினை
வலம் வரச்செய்யும் சிறப்புக்கு வாழ்த்துக்கள்...
ஆண்டுகள் மாறிட மாறிட மானிட அகவையின் உயர்வும்
ஏற்றம் காணும் உற்சாகமும் குன்றும் இயல்பினையே
மாற்றம் செய்திடும் மருந்தாகவே மண்சஞ்சிகையின்
பிரதிபலிப்பு இருக்கிறது. .நாளும் கேட்க்கும் செய்திகளை
கிரகித்து கொள்வதில் சிரமத்தினை அனுபவிப்போருக்கும்
மறதியில் அமிழ்ந்தவருக்கும் இப்பத்திரிகையில் வெளிவரும்
ஒவ்வொரு பக்கமும் ஆறுதலாக தேவையான போதெல்லாம்
வாசித்துக்கொள்ள மிக்க சிறப்பை தந்து கொள்கிறது..
உலகவாழ்க்கை இன்னும் இருக்கிறது. ஒவ்வொருவரினது
வாழ்க்கையிலும் பல்வேறு பக்கங்கள் மலர்கிறது விரிகிறது
மண் மணம் கமழ்கிறது எல்லாமே பார்க்க முடிகிறது.
பல்லாண்டுகள் உங்கள் பணி சிறப்பொடு தொடரும்...
புதிய ஆண்டுப் பிரதியும் கையில் கிடைத்ததில்
சந்தோசம்..இதற்காவே இப்பகிர்வு.

**அன்புடன்**
**சர்வேஸ்வரி..கதிரித்தம்பி - யேர்மனி**

# ஒளிரும் வாழ்வு-புதுக்குடியிருப்பு பிரதேசம்
## Olirum Vaalvu- Puthukudiyiruppu Division

உடையார் கட்டு
கிழக்கு, உடையார் கட்டு
புதுக்குடியிருப்பு

Udaiyarkaddu east
Udaiyarkaddu
Puthukudiyiruppu

Reg No:- MU/PKI/DS/VSSO/25

12-02-2023

**திரு நித்தியானந்தன்**

**ஜேர்மனி**

**பிரதம ஆசிரியர்**

**மண்- கலை இலக்கிய சமூக சஞ்சிகை**

**ஊடாக**

அன்புடையீர்

**ஞானக்குழந்தைகள் பகல்பராமரிப்பு நிலைய பிள்ளைகளுக்கான மதிய உணவு வழங்கலுக்கான நன்றி கூறல்**

மேற்படி விடயம் தொடர்பாக 2016ம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஒளிரும் வாழ்வு புதுக்குடியிருப்பு அமைப்பானது மாற்றுத்திறனாளிகளுக்காக மட்டுமன்றி பெண்தலைமைக் குடும்பங்கள், முதாளர்கள், மாணவர்கள் என அனைவருக்காகவும் பல செயற்பாடுகளை மேற்கொண்டுவருகின்றது.

எமது அமைப்பானது நிரந்தரமான காணி கட்டிடங்களுடன் கொடி கீதத்துடன் இயங்கிவருதுடன் பல செயற்திட்டங்களை மேற்கொண்டுவருகின்றது.

இச் செயற்திட்டங்களில் ஞானக்குழந்தைகள் பகல் பராமரிப்பு நிலையமானது மாற்றுத்திறனாளிப் பிள்ளைகளுக்கான ஒரேயொரு விசேட பாடசாலையாக எமது பிரதேசத்தில் இயங்கிவருகின்றது.

ஞானக்குழந்தைகள் பகல்பராமரிப்பு நிலையத்தின் ஊடாக 30 மாற்றுத்திறனாளிப் பிள்ளைகளுக்கு செயற்திறன் கல்வி போதிக்கப்படுகின்றது.

நிதிப் பற்றாக்குறை காரணமாக தற்போது மாதம் ஒன்றிற்கு பன்னிரெண்டு நாட்கள் மட்டுமே எமது பாடசாலை இயங்கிவருகின்றது.

இதற்காக

- நான்கு ஆசிரியர்கள் 42000.00
- ஒரு பேச்சு பயிற்சி ஆசிரியர் 20000.00
- இரண்டு சமையலாளர் 12000.00
- நாளாந்தம் வாகன வாடகை 144000.00
- உணவு மற்றும் சிற்றுண்டி 120000.00
- கற்றல் உபகரணங்கள் மற்றும் சுகாதாரப் பொருட்கள் 10000.00

E-mail :- olirumvaalvu@gmail.com Phone No:- 0094778491233
Web:- www.olirumvaalvu.org Twitter :- Olirumvaalvu
Face book :- olirumvaalvu puthukudiyiruppu

ஒளிரும் வாழ்வு-புதுக்குடியிருப்பு பிரதேசம்

**Olirum Vaalvu- Puthukudiyiruppu Division**

உடையாயர் கட்டு
கிழக்கு, உடையார் கட்டு
புதுக்குடியிருப்பு

Udaiyarkaddu east
Udaiyarkaddu
Puthukudiyiruppu


Reg No:- MU/PKI/DS/VSSO/25

12-02-2023

என மாதாந்தம் **மூன்று இலட்சத்து நாற்பத்து எட்டாயிரம் ரூபா** வரை செலவாகி வாருகின்றது

தற்பொழுது விசுமடு தொடக்கம் புதுக்குடியிருப்புவரை ஒவ்வொரு வீடுவீடாகச் சென்று பிள்ளைகளை ஏற்றி வந்து திரும்பவும் வீடுகளில் கொண்டு சேர்க்கின்றோம்.

தற்போது இவர்களை உடல் உள ரீதியாக வலுப்படுத்தும் வகையிலான மொழிப் பயிற்சி, தொழிற்பயிற்சிகள் மற்றும் வாழ்க்கைத் திறன் தேர்ச்சி பயிற்சிகள் என்பன வழங்கப்படுகின்றன.

இச் செலவினங்களை தேசங்கள் கடந்தபோதும் எம்மீது நேசங்கொண்ட உறவுகளின் வீடுகளில் இடம்பெறும் மங்கள நிகழ்வுகள் மற்றும் நீத்தார் நிகழ்வுகளின் ஒருபகுதியாக வழங்கப்பட்டுவரும் உதவிகளினாலேயே ஈடு செய்யப்படுகின்றது.

திரு நித்தியானந்தம் ஐயா அவர்கள் வழங்கிய ஒரு இலட்சம் ரூபா நிதி உதவி கிடைக்கப்பெற்றது. என்பதை மகிழ்வுடன் அறியத்தருவதுடன் எமது பிள்ளைகளுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம் என்பதையும் வழங்கியவுடன் அவற்றுக்கான புகைப்படங்களையும் அனுப்பி வைப்போம் என்பதையும் அறியத்தருவதுடன் தாங்கள் சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துவதுடன் தொடர்ந்தும் தங்களது பேராதரவுகளை வழங்கி உதவுமாறும் தயவாக வேண்டிக்கொள்கின்றோம்.

நன்றி

இ.அம்பிகைபாலன்

B.A in psychology, Dip in Counselling

தலைவர் ஒளிரும்வாழ்வு-புதுக்குடியிருப்பு


E-mail :- olirumvaalvu@gmail.com Phone No:- 0094778491233

Web:- www.olirumvaalvu.org Twitter :- Olirumvaalvu

Face book :- olirumvaalvu puthukudiyiruppu

# அறிந்து கொள்வோம்...

| | | | | | |
|---|---|---|---|---|---|
| WhatsApp<br>புலனம் | Facebook<br>முகநூல் | YouTube<br>வலையொளி | GPS<br>தடங்காட்டி | CCTV<br>மறைகாணி | OCR<br>எழுத்துணரி |
| Instagram<br>படவரி | WeChat<br>அளாவி | Print Screen<br>திரைப்பிடிப்பு | LED<br>ஒளிர்விமுனை | 3D<br>முத்திரட்சி | Laser<br>சீரொளி |
| Twitter<br>கீச்சகம் | Telegram<br>தொலைவரி | Skype<br>காயலை | Projector<br>ஒளிவீச்சி | Printer<br>அச்சுப்பொறி | Scanner<br>வருடி |
| Bluetooth<br>ஊடலை | WiFi<br>அருகலை | Hotspot<br>பகிரலை | Smartphone<br>திறன்பேசி | Sim Card<br>செறிவட்டை | Charger<br>மின்னூக்கி |
| Broadband<br>ஆலலை | Online<br>இயங்கலை | Offline<br>முடக்கலை | Digital<br>எண்மின் | Cyber<br>மின்வெளி | Router<br>திசைவி |
| Thumbdrive<br>விரலி | Harddisk<br>வன்தட்டு | Battery<br>மின்கலம் | Selfie<br>தம்படம் | Thumbnail<br>சிறுபடம் | Meme<br>போன்மி |

மண் சஞ்சிகையின் வாசகர் செல்வன் நேசராஜன் நிதர்சனின் பிறந்த நாளன்று (05.01.2024) அவரின் நிதிப்பங்களிப்பில் மல்லாவி-துணுக்காயிலுள்ள ‘‘ஒளிரும் வாழ்வகம்‘‘ மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோருக்கு உணவளிக்கப்பட்டது.





மண் சஞ்சிகையின் வாசகர்களின் நிதிப் பங்களிப்பில் இலங்கை மலையகம் - றம்பொடை தோட்ட மக்களுக்கு தைப்பொங்கல் நிதிவழங்கி 15.01.2024 அன்று பொங்கல் தினம்






மண் சஞ்சிகையின் வாசகர்களின் நிதிப் பங்களிப்பில் இலங்கை-புதுக்குடியிருப்பிலுள்ள ‘‘ஒளிரும் வாழ்வகம்‘‘ ஊடாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 20.01.2024 அன்று உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.





Wissen, Kultur & Literatur • கல்வி, கலை, இலக்கிய சமூக இருமாத இதழ்

# ERDE

MANN
Germany / Ausgabe 224



100 வது பிறந்தநாள் - 11.02.2024
"அரிச்சந்திரா" மயானகாண்டம் புகழ்
அமரர் வி வி வைரமுத்து - ஈழத்து நடிப்புலக மேதை

(11.02.1924 - 11.02.2024)

வருட சந்தா ஜேர்மனி 20€
ஏனைய நாடுகள் 25€